# உதயன்




www.onlineuthayan.com

26: பக்கங்கள் சுடர் 27 கதிர் 255 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 23 செவ்வாய்கிழமை (07/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


## தலைதூக்கும் தேர்தல் வன்முறை

கொழும்பு, ஓக.7

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஒருபுறம் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ள நிலையில், மறுபுறத்தில் தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் அதிகரிக்க ஆரம்பித்திருக்கின்றன. இதனால் தேர்தல்களம் வன்முறைக்களமாக மாறிவருவதுடன், அதில் ஆளுந்தரப்பே அதிகளவான வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுகின்றது எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன.

மூன்று மாகாணங்களிலும் ஏழு மாவட்டங்களுக்குத் தேர்தல் நடைபெறுகின்ற போதிலும், அநுராதபுரம் மாவட்டத்திலேயே அதிகளவான வன்முறைச் சம்பவங்கள் இதுவரையில் பதிவாகியுள்ளன. இரண்டு தாக்குதல் சம்பவங்கள் கூட இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, வடமத்திய மாகாணத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக 200 அரச வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று 'நாம் பிரஜைகள்'

பார்க்க பக்கம் 4


# கொலைகாரர்களை இந்த அரசு முட்டைபோன்று அடைகாக்கிறது

## ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் குற்றச்சாட்டு எதிர்த்துப் போராட வருமாறு மக்களுக்கு அழைப்பு

கொழும்பு, ஓக 7

மனிதக்கொலைகாரர்களை, பெண்கள் மற்றும் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்பவர்கள் உட்பட குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை, கோழிமுட்டைகளை அடைகாப்பதுபோல மஹிந்த ராஜபக்ஷ அரசு பாதுகாக்கின்றது என்று குற்றம் சாட்டியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, மக்களைச் சொல்லொணாத் துன்பத்தில் ஆழ்த்திவரும் அரசுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

**அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் செய்யும் மோசடியே மிகப் பெரியது.**



நாட்டில் இடம்பெறுகின்ற மோசடிகளில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் செய்யும் மோசடியே மிகப் பெரியதாகும். மக்களுக்குச் சொந்தமான பணம் யாருடைய வங்கிக் கணக்குக்குச் செல்கின்றது? மக்களின் பணம் எங்கே போகிறது எனத் தெரியவில்லை. ஆனால், சுவிஸ் வங்கிகளில் இலங்கையர்களுக்கு அதிக வங்கிக் கணக்கு உள்ளது எனவும் அறியமுடிகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சியின் தொடர்பாடல் செயலாளர்களுடன் இடம்பெற்ற கூட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஒவ்வொரு துறை தொடர்பிலும் ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்குமாறு நாம் அரசை வலியுறுத்தி வருகிறோம். இது போன்ற நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன்போன்ற நாடுகளிலும் உள்ளது எனவும், 2011 ஆம், 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதங்களில் இறக்குமதி செய்யப்பட்ட தரம்குறைந்த பெற்றோல் மற்றும் டீசலினால் பல வாகனங்கள் சேதமடைந்துள்ளன. நான் பயணம் மேற்கொண்டபோது எனது வாகனமும் இடைநடுவில் நின்றுவிட்டது.

நானும் கட்சியின்

பார்க்க பக்கம் 4

உள்ளூராட்சி சபைகளை அபிவிருத்தி செய்யவிடாது முட்டுக்கட்டையாக இருக்கும் அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொமன்வெல்த் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டப்பட்டது. **2**

தனது கடற்படையை மேலும் பலப்படுத்துகிறது இந்தியா. நவீன வசதிகள் கொண்ட விமானங்களை அமெரிக்காவிடம் இருந்து பெறுகிறது **9**

இலங்கை இந்திய வீசா நடைமுறையில் தளர்வு ஏற்படும் சாத்தியம்! இங்கு வந்துள்ள இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் இலங்கை அதிகாரிகளுடன் நேரில் ஆராய்ந்தார். **17**

மூன்றாவது முறையாகவும் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்று அசத்திய இரட்டையர்களான செரீனா, வீனஸ். **23**

## தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை மாணவர் அனுமதிக்கப்படார்

கொழும்பு, ஓக 7

அடிப்படை உரிமை மனுக்கள் மீதான தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கப் போவதில்லை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்தில் நேற்று அறிவித்துள்ளது.

இசற் புள்ளிகள் காரணமாக அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து 33 மாணவர்கள் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனுக்கள் நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்

பார்க்க பக்கம் 4

## ஒரே இரவில் மூன்று கொலைகள்

### ஊரெழு மற்றும் விசுவமடுப் பகுதிகளில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஓக.7

ஊரெழு மற்றும் விசுவமடுப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு மூவர் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். ஊரெழு, பொக்கணையில் வட்டக்கச்சியைச் சேர்ந்த சிவராசா (வயது-45) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தை கோடரியால் கழுத்து வெட்டப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். விசுவமடு, ரெட்பானாவில் வேலு விஜயகுமார் (வயது-33) கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்ட பின்னர் தூக்கில் தொங்கவிடப்பட்டுள்ளார். விசுவமடு, நெத்தலியாற்றுப் பகுதியில் அருணாசாலம் இராமநாதன் (வயது - 73) என்ற முதியவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சிவராசா மற்றும் இராமநாதன் கொலைசெய்யப்பட்ட பின்னர் அவர்கள் இருவரது வீடுகளும் எரியூட்டப்பட்டுள்ளன.

ஊரெழு பொக்கணையில் சிவராஜா வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவரது கழுத்தில் கோடரியால் வெட்

பார்க்க பக்கம் 4

## மாகாண அமைச்சருக்கு பிணை

கொழும்பு, ஓக 7

மருத்துவர் ஒருவரைத்தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மத்திய மாகாண சுகாதாரத்துறை அமைச்சர் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று கண்டி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே, 2 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். இதேவேளை, மத்திய மாகாண சுகாதாரத்துறை அமைச்சரை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்து மாறு உத்தரவிட்டுள்ளது. (த)

## பதவிக்கு சோரம் போகாத தமிழர் தரப்பின் அரசியல்

### பாராட்டுகிறார் ஹக்கீம்

கொழும்பு, ஓக 7

காவியுடை தரித்த பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த விடயங்களைவிட்டு முஸ்லிம் காங்கிரஸின் தலைமையானது மௌனமாக இருக்கமுடியாது.

- இவ்வாறு தெரிவித்தார் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்.

மேலும், தமிழர் தரப்பு பதவிக்குச் சோரம் போகாமல் அசைக்கமுடியாத அரசியலைச் செய்து வருகின்றது. முஸ்லிம் சமூகம் தமது அரசியலில் அபிவிருத்தி அரசியலையும், எதிர்ப்பு அரசியலையும், இணக்க அரசியலையும் என எல்லா அரசியலையும் கலப்படம் செய்து மக்களின் ஆத்திரத்திற்கு

பார்க்க பக்கம் 4

## கம்பஹா நீதிமன்றில் வெடிகுண்டு புரளி

கொழும்பு,ஓக 7

கம்பஹா நீதிமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை காலை வெடிகுண்டு காணப்படுவதாகக் கூறப்பட்டமை வதந்தி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பஹா நீதிமன்றத்தில் வெடிகுண்டு காணப்படுவதாக 119 என்ற பொலிஸ் அவசர சேவை தொலைபேசிக்கு அநாமதேயத் தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைக்கப்பெற்றது. இதனைத் தொடர்ந்து நீதிமன்றத்திலிருந்து பொதுமக்களை அதிகாரிகள் வெளியேற்றினர்.

குண்டு செயலிழக்கும் பிரிவினரால் 3 மணித்தியாலங்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது வெடிகுண்டு எதுவும் மீட்கப்படவில்லை. இதன் பின்னர் நீதிமன்றம் தனது வழமையானசெயற்பாடுகளை முன்னெடுத்தது. (த)

## பாக். பாதுகாப்புச் செயலர் இன்று இலங்கை வருகை

கொழும்பு,ஓக.7

பாகிஸ்தானின் பாதுகாப்புச் செயலாளர் லெப்டினண்ட் ஜெனரல் ஆசீப் யாசின் மலிக், ஐந்து நாள் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இன்று இலங்கை வருகிறார்.

இந்தப் பயணத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு விடயங்கள் குறித்து, இலங்கை அதிகாரிகளுடன் அவர் பேச்சு நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 4

## இந்தியாவுடன் பொருளாதார உறவு தேசப்பற்று இயக்கம் போர்க்கொடி

கொழும்பு,ஓக 7

இந்தியாவுடன் 'சீபா' எனப்படும் பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா இலங்கைக்குநான்குநாள்பயணத்தை முடித்து இன்று புறப்படுகிறார். அவர், 'சீபா' எனப்படும் பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாட்டைச்செய்து கொள்வது குறித்து இலங்கையுடன் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தநிலையில் தேசப்பற்றுள்ளள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த உடன்பாட்டினால்

பார்க்க பக்கம் 4

## துமிந்த நாடு திரும்பவில்லை

கொழும்பு, ஓக 7

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர் துமிந்த சில்வா, இலங்கை திரும்பியுள்ளார் என்று வெளியான செய்தியை பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மறுத்துள்ளார்

சிங்கப்பூரில் சிகிச்சைப் பெற்று வந்த துமிந்த சில்வா நாடு திரும்பியுள்ளார் எனவும் அவரைக் கைதுசெய்யவேண்டும் என்றும் ஹிருணிகா

பார்க்க பக்கம் 4

## அரச நிகழ்வில் தேர்தல் பிரசாரம் வேட்பாளர் வெளியேற்றப்பட்டார்

கொழும்பு,ஓக.7

கேகாலையில் நேற்று முற்பகல் நடைபெற்ற முக்கிய அரச நிகழ்வொன்றில் கலந்து கொண்ட சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் வேட்பாளர் ஒருவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி அலுவலக முறைப்பாட்டுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற அநாமதேயத் தொலைபேசி அழைப்பின் மூலம் அது தொடர்பான தகவல்கள் கிடைத்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதற்கமைய மாவட்ட தேர்தல் அதிகாரிகள் குறித்த இடத்துக்குத் தமது பிரதிநிதிகளை அனுப்பி, அந்த உறுப்பினர் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமையை உறுதிப்படுத்தியுள்ளனர்.

பார்க்க பக்கம் 4

# உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்திக்கு அரச எம்.பிக்கள் தடை போடுகின்றனர்

## கொமன்வெல்த் பிரதிநிதிகளிடம் முறைப்பாடு



யாழ்ப்பாணம், ஓக.7

உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசு சார்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடை போடுகின்றனர். அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரங்கள் சரியான முறையில் பரவலாக்கமும் செய்யப்படவில்லை.

இவ்வாறு கொமன்வெல்த் நாடுகளின் உள்ளூராட்சி மன்ற அமைப்புகளின் பிரதிநிதிகளிடம், யாழ்ப்பாணத்தில் பிரதேச சபை தவிசாளர்கள், நகரசபைத் தவிசாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்துக்கு வருகைதந்துள்ள கொமன்வெல்த் நாடுகளின் உள்ளூராட்சி மன்ற அமைப்புகளின் ஆசிய பிராந்தியத்துக்கான திட்ட அலுவலர் அனுகா குவார் மற்றும் உள்ளூராட்சி மன்ற ஆலோசகர் ரெரி பார்கர் இருவரும் யாழ்.மாவட்டத்தில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட பிரதேச சபை மற்றும் நகரசபை தவிசாளர்களுடன் நேற்றுக்காலை யாழ்.நகரில் உள்ள 'ஹோட்டலில்' கலந்துரையாடல் நடத்தினர்.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் தேவசகாயம் பிள்ளை, சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் துரைராஜா, வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளர் அனந்தராஜ், வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசன் ஆகியோரையே கொமன்வெல்த் பிரதிநிதிகள் சந்தித்திருத்திருந்தனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவிக்கையில்,

கொமன்வெல்த் பிரதிநிதிகள் இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும், நிர்வாகத்தை முன்னெடுக்கையில் எந்தவகையான இடர்கள் ஏற்படுகின்றன என்பது தொடர்பிலும் மதிப்பீடு செய்ய வந்திருப்பதாகத் தெரிவித்தனர்.

இதன்போது மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும்போது அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடையாக உள்ளனர். இதனால் மக்கள் அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்படுகின்றன என நாம் சுட்டிக்காட்டினோம்.

மேலும் அரசால் நியமிக்கப்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களும் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தடையாகவுள்ளனர். இதனை மாற்றியமைத்துத் தரவேண்டும்.

வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகளவில் உள்ளனர். அவர்களது வருமான மேம்பாட்டுக்கான செயற்றிட்டங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக செயற்படுத்தப்பட வேண்டும்.

மேலும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய அதிகாரங்கள் உரியமுறையில் பகிர்ந்தளிக்கப்படாமையாலேயே பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட்டால் செயற்பாடுகளைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும் என்று கொமன்வெல்த் குழுவிடம் தெரிவித்தோம் - என்றார். (த-5)

## ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 41 பேர் வென்னபுவவில் கைது

கொழும்பு,ஓக 7

ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகச் செல்ல முயன்றதாகத் தெரிவிக்கப்படும் 41 பேர் வென்னப்புவ பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காக வென்னப்புவ பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்துக் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

37 தமிழர்களும் 4 முஸ்லிம்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களெனவும் இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து கையடக்கத் தொலைபேசிகள், பணம், பயணப் பைகள் ஆகியனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் நேற்று திங்கட்கிழமை வென்னப்புவ நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். (த)

## பதுளை மாவட்டச் செயலகம் ஜனாதிபதியால் திறப்பு

கொழும்பு, ஓக 7

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பதுளை மாவட்டச் செயலகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக நேற்று திங்கட்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.


பதுளை மாவட்டச் செயலகம் 333 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஊவா மாகாண முதலமைச்சர் சசிந்திர ராஜபக்ஷ, அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, டிலான் பெரேரா, ஊவா மாகாண ஆளுநர் சீ.நந்த மெதிவ் உள்ளிட்ட பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் பதுளை மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் ஆராயும் விசேட மாநாட்டிலும் ஜனாதிபதி கலந்து கொண்டுள்ளார்.(த)

## வாக்காளர் பட்டியல் இணையத்தில்

### வரலாற்றில் முதல் தடவையாக




கொழும்பு, ஓக.7

தேர்தல் திணைக்களத்தால் முதல் தடவையாக வாக்காளர் பட்டியல் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 2011ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலை ஒவ்வொருவரும் இணையத்தளத்தில் பார்த்துக்கொள்ள முடியும்.

தேர்தல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் (www.slelections.gov.lk) ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பக்கத்தில் தமது தேர்தல் மாவட்டம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை இடுகை செய்து தமது பதிவுகளை வாக்காளர்கள் சரிபார்த்துக் கொள்ளலாம்.

குடும்பத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டவரில் ஒருவரது விவரங்களை இடுகை செய்வதன் மூலம் அந்தக் குடும்பத்தவர்கள் அனைவரினதும் பதிவுகளையும் சரிபார்த்துக் கொள்ளமுடியும்.

பதிவுகளில் ஏதாவது பிழைகள் இருப்பின் அவை குறித்து உடனடியாகத் தேர்தல்கள் திணைக்களத்துக்கு அறிவிப்பதற்கான விண்ணப்பமும் அந்தத் தளத்திலேயே வழங்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இலக்கம் இணையத்தளத்தில் சேர்க்கப்படாதவர்களும் தமது விவரங்களை அந்த விண்ணப்பப் படிவத்திலேயே குறிப்பிட்டு திணைக்களத்துக்கு அனுப்பிவைக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். (உ-01)

## கைதான 37 சீன மீனவர்கள் நேற்றிரவு விடுதலையாகினர்

யாழ்ப்பாணம், ஓக.7

மட்டக்களப்பு கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 37 சீன மீனவர்களும் பின்னர் நேற்றிரவு விடுவிக்கப்பட்டனர்.

எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குறித்த சீன மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்து திருகோணமலைக்கு அழைத்து வந்தனர். இதன்போது சீன மீனவர்கள் பயணித்த டோலர் படகுகளும், அவருடன் இணைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இரண்டு இலங்கை மீனவர்களையும் இதன்போது கடற்படையினர் கைது செய்து கரைக்குக் கொண்டுவந்தனர். அதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவைப் பலப்படுத்த அவர்களை விடுவிக்குமாறு சீனத் தூதரகம் இலங்கையிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் இலங்கையின் கடற்பரப்பில் 200 மைல்களுக்கு அப்பால் சீன மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான ஒப்பந்தம் ஒன்று ஏற்கனவே செய்துகொள்ளப்பட்டிருந்தது. அதனை மீறியே குறித்த மீனவர்கள் மட்டக்களப்பு கடற்பரப்பில் அத்துமீறி உள்நுழைந்தனர்.

இதன்போதே அவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. இவர்களை சீனத் தூதரகத்தின் கோரிக்கையை ஏற்று இலங்கை அரசு நேற்றிரவு விடுதலை செய்துள்ளது. (ங)



உதயன் இணைய வானொலி
www.uthayanradio.com

திசையுக்கிரசோழன் என்ற சோழ மன்னனின் மகள் கீரிமலையில் நீராடித் தன் குதிரை முகம் நீங்கியதனால் அவ்விடத்தமைந்த "கோவிற் கடவை" என்ற குறிச்சிக்கு "மாவிட்டபுரம்" என்று பெயர் சூட்டி கந்தன் ஆலயம் ஒன்றினையும் அமைத்து வழிபட்டாள் என்பது வரலாறு. குதிரை முகம் நீங்கிய இளவரசியின் பெயர் என்ன?

1. மாருதப்புரவீகவல்லி
2. மகேந்திரசோழவல்லி
3. சுந்தரவல்லி
4. செண்பகவல்லி

பெயர் :..........

முகவரி :..........

வயது :.......... தொ.பே. இல :..........

சரியான விடைகளை எழுதி. பரிசுக் கூப்பனுடன் பருத்தித்துறை வீதி. நல்லூரில் (பாரதியார் சிலையடி) அமைந்துள்ள உதயன் இணைய வானொலியின் உற்சவ காலச் சிறப்புக் கலையகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இன்று மாலை 7 மணிக்கு முன் இடுவதன் மூலம் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லும் வாய்ப்பு

1 ஆம் பரிசு : 4 GB பென் ட்ரைவ்
2 ஆம் பரிசு : கம்ப்யூட்டர் ருடே 6 மாத சந்தா
3 ஆம் பரிசு : அர்ச்சுனா சஞ்சிகையின் 6 மாத சந்தா

நேற்றைய குலுக்கலில் வெற்றி பெற்றோர் :

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
| --- | --- | --- |
| கு. திலக்ஷி (நல்லூர்) | பு. கஜமுகன் (நீர்வேலி) | ந. பிரசன்னா (பிறவுண் வீதி) |

பரிசுத் தெரிவுக் குலுக்கல் இன்றிரவு 7.30 மணிக்கு சிறப்புக் கலையக முன்றலில்...

அனுசரணை:
உங்கள் நாளைய நம்பிக்கையை இன்றே மிளிரச் செய்து இன்பமயமான எதிர்கால வாழ்வை இன்று போல் என்றும் வாழ

உங்களின் கனவுகளை நனவாக்கி வைக்கின்றது.
* ஆயுட் பாதுகாப்பு * முதலீடு * கல்வி பாதுகாப்பு
* வைத்திய அனுகூலம் * ஓய்வூதிய கொடுப்பனவுகள்
* மூன்று வருட கால திட்டங்கள் போன்றவற்றை உறுதி செய்யும் தொகைகளை உங்களுடன் கொண்டு வந்து சேர்க்கின்றது. உங்களின் நம்பிக்கையான ஒரே காப்புறுதி நிறுவனம்

union assurance
Trust in your tomorrow, today.
139, Stanley Road, Jaffna. T.P.021 222 3753

# வடக்கின் வறட்சி நிலையை அறிந்து ஜனாதிபதிக்கு அறிக்கை இடப்படும்

## அதற்காகவே வந்துள்ளேன் என்கிறார் அமைச்சர் மஹிந்த சமரவீர

யாழ்ப்பாணம், ஓக.7

வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமைகளைப் பார்வையிட்டு அது தொடர்பிலான அறிக்கை ஒன்றை வழங்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார். அதற்காகவே நான் வடமாகாணத்தின் சகல பிரதேசங்களுக்கும் சென்றுள்ளேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணம் உடனடியாகவே வழங்கப்படும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரவீர தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்த அமைச்சர், யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் பல இடங்களுக்கும் சென்ற போது இதனை உணரக் கூடியதாக இருந்தது.

இந்த வகையில் வட மாகாணத்தில் வறட்சியால் ஏற்பட்ட பாதிப்புக்களைப் பார்வையிட்டுத் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி என்னைப் பணித்துள்ளார். இதனாலேயே வடமாகாணத்தின் சகல மாவட்டங்களுக்கும் நான் நேரடியாகச் சென்று பார்வையிட்டு வருகின்றேன்.

கடந்த காலங்களில வடமேல் மாகாணம், வட மத்திய மாகாணங்களில் ஏற்பட்ட வறட்சிக்காக நிவாரணமாக எமது அரசு 3 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியது. தற்போது ஏற்பட்டுள்ள வறட்சிக்காக அதிகளவான நிதியை ஒதுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

நாட்டில் சமாதானம் ஏற்பட்டு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் வேளையில் இவ்வாறான இயற்கைப் பாதிப்புக்கள் அபிவிருத்திக்கு இடையூறாக அமைகின்றன. இருப்பினும் நாங்கள் அபிவிருத்தியைக் கைவிட மாட்டோம்.

வறட்சி நிவாரணத்துக்காக இடர்களிலிருந்து பாதுகாப்பதற்காக எவ்வளவு நிதியையும் செலவிட நாங்கள் தயாராகவுள்ளோம். அதன்படி யாழ்.மாவட்டத்துக்கு வெள்ளத் தடுப்பணைகள் அமைப்பதற்காக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி கொழும்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு அண்மித்ததாக இருக்க வேண்டும் என்பது ஜனாதிபதியின் விருப்பம். மாவட்ட அபிவிருத்தி துரிதமாக நடைபெற வேண்டுமாயின் ஜனாதிபதியுடன் இணைய வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக அரச அதிபரிடம் 2 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளோம். மேலதிக நிதி தேவைப்படுமாயின் எமது அமைச்சு வழங்கத் தயாராக இருக்கின்றது என்று தெரிவித்தார். (ஒ-5)

## 'எக்ஸ்ரே' எடுக்கும் பணிகள் வழமைக்கு

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பழுதடைந்திருந்த 'எக்ஸ்ரே' இயந்திரம் ஒன்று திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

திடீரென பழுதடைந்த இந்த 'எக்ஸ்ரே' இயந்திரம் கடந்த இரு வாரங்களாகத் திருத்தப்படாமல் இருந்தது.

கொழும்பில் இருந்து வருகை தந்த தொழில்நுட்பவியலாளர்கள் இந்த 'எக்ஸ்ரே' இயந்திரத்தைத் திருத்திச் செயற்படவைத்தனர். (த-17)

## ஆவணமின்றி இயங்கும் கடைகள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.7

சூழல் பாதுகாப்பின்மை மற்றும் டெங்கு உற்பத்தி போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக இது தொடர்பான ஆவணங்கள் எதுவுமின்றி இயங்கும் வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்ற பொலிஸார் சுகாதாரத் திணைக்களத்தினர் ஆகியோருக்கான கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் இயங்கும் வாகன சுத்திகரிப்பு நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்க்ள், மர அரிவு நிலையங்கள், அரிசி ஆலைகள் போன்றவை மீதே சட்ட நடவடிக்கைஎடுக்கப்படவுள்ளது.

பிரதேச செயலகத்தில் வியாபார பெயர்ப் பதிவுச் சான்றிதழும் உள்ளூராட்சி சபைகளில் பெறப்பட்ட இந்த வருடத்துக்குரிய வியாபார உரிமமும் சுற்றாடல் பாதுகாப்பு சான்றிதழும் பெறுமாறு அறிவுறுத்தல் வழங்கி மூன்று மாத காலமாகியும் சில நிலையங்கள் இதுவரை அவற்றைப் பெறவில்லை எனவும் இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட நிலைய உரிமையாளர்களை நேரில் அழைத்து தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

எனினும் உரிய சான்றிதழ்களைப் பெறாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை உரிய ஆவணங்கள் பெற்றுக்கொள்ளாத உணவு கையாளும் நிலையங்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார வைத்தியசாலை அதிகாரி மருத்துவர் க.தயாளன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (ம-9)

# வறட்சி பாதிப்புக்களை தவிர்க்க வழி என்ன?

## நிரந்தரத் திட்டத்தை தயாரித்து தருமாறு யாழ்.அரச அதிபரிடம் கேட்கிறார் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக.7

*வறட்சியின்போது மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான நிரந்தரத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கான திட்டத்தைத் தயாரித்துத் தருமாறு இடர்முகாமைத்துவ அமைச்சர் கோரியுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.*



யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்த இடர்முகாமைத்துவ அமைச்சர் பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றினார். யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து இடர்கள் ஏற்படும் பட்சத்தில் சமைத்த உணவு வழங்குவதற்கான சமையல் உபகரணங்கள் மற்றும் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் வழங்கிய அதேசமயம் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு கூரைத் தகடுகளும் வழங்கப்பட்டன.

இதன்பின்னர் உரையாற்றும்போதே யாழ். மாவட்ட அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இடர்களை எதிர்கொள்ளும் வகையில் எமது மாவட்டம் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது. சுனாமி பாசாங்கு நடவடிக்கைகள் என்பன பரவலாக மேற்கொள்ளப்பட்டு மக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர்.

தற்போது நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக எமது மாவட்டமும் பாதிப்பை எதிர்கொள்கின்றது. எனக்கு இதுவரையில் எமது பிரதேச செயலர்கள் கோரிக்கை விடுத்ததன் பிரகாரம் 3.3 மில்லியன் ரூபா நிவாரண நிதி தேவைப்படுகின்றது.

ஏற்கனவே 2 மில்லியன் ரூபா அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 1.3 மில்லியன் ரூபா நிதி விரைவில் வழங்கப்படும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் உறுதி வழங்கியுள்ளார். மேலும் எமது பிரதேச செயலர்கள் மேலதிக நிதி தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளனர். அந்த நிதியும் பெற்றுக் கொடுக்கப்படும்.

வருடா வருடம் ஏற்படும் வறட்சியின் போதும் பெருமளவு நிதியை வழங்கிக் கொண்டிருப்பதைவிட இதற்கு நிரந்தரத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அமைச்சரிடம் தெரிவித்தேன்.

இதற்கான நிரந்தரத் திட்டத்தைத் தயாரித்துத் தருமாறு அமைச்சர் கேட்டிருப்பதாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஒ-5)

## 13 வயதுச் சிறுமி தாயாவதற்கு காரணமான சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ்.குடாநாட்டில் 13 வயதுச் சிறுமி தாயாவதற்குக் காரணமாக இருந்தார் என்ற சந்தேகத்தில் 21 வயது இளைஞன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் இரண்டாம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையின் 18 ஆம் விடுதியில் வலி.மேற்கைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்குக் குழந்தை பிறந்தது.

குழந்தை இறந்து பிறந்ததை அடுத்து அவர் 20 ஆம் விடுதிக்கு மாற்றப்பட்டார். அங்கு தொடர்ந்து சிகிச்சை பெற்றுவந்த சிறுமி 26 ஆம் திகதி வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார்.

இருப்பினும் இறந்து பிறந்த சிசுவின் உடல்கூற்றுப் பரிசோதனை எதுவும் நடத்தப்படவில்லை. அத்துடன் சிறுமி தாயானமைக்குப் பொறுப்பானவர் யார் என்பது பற்றிய விசாரணைகளோ, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளோ எதுவும் மேற்கொள்ளப்படாமலே சிறுமி வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்த விடயம் ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து இறந்து பிறந்த சிசுவின் உடல் கூற்றுப் பரிசோதனை நடத்தப்படாமை தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

கடந்த 4 ஆம் திகதி குறித்த 13 வயதுச் சிறுமியிடம் விசாரணை நடத்திய வட்டுக்கோட்டைப் பொலிஸார் அவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் முற்படுத்தியிருந்தனர். விசாரணைகளை அடுத்து சிறுமியின் கர்ப்பம் தொடர்பில் 21 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-5)

## மாற்றீட்டுப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஓக 7

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் நடத்தப்படவுள்ள மாற்றீட்டுப் பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்புவோர் நல்லூர் விதாதா வளநிலையத்தில் விண்ணப்பிக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் கேட்டுள்ளார்.

இந்த மாற்றீட்டுப் பயிற்சிநெறியில் திரவ சவற்காரம், சம்போ மற்றும் சுத்திகரிப்புத் திரவங்களின் தயாரிப்பு முறைகள் தொடர்பான விரிவான பயிற்சிகள் நல்லூர் விதாதா வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே ஆர்வமுள்ளோர் தமது சுய விவரக் கோவை, சான்றிதழ்கள் மற்றும் பங்கீட்டு அட்டையுடன் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் நேரில் வந்து விண்ணப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (16)

## சங்குப்பிட்டி — கேரதீவு ஊடாகவும் குடாநாட்டுக்கு தொலைபேசி வசதி

மன்னாரில் இருந்து சங்குப்பிட்டி கேரதீவு ஊடாக யாழ்.குடாநாட்டுக்கான தொலைபேசி இணைப்புக்களை மேலும் விஸ்தரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

தற்போது ஏ-9 பாதையூடாகவே யாழ்ப்பாணத்துக்கான தொலைபேசி இணைப்புச் சேவைகள் நடைபெற்று வருகின்றன. அனுராதபுரத்தில் இருந்தே ஏ-9 பிரதான வீதியூடாக இந்தத் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏ-9 பிரதான மார்க்க தொலைபேசி இணைப்பில் ஏதாவது தடங்கல்கள் ஏற்படும் பட்சத்தில் மன்னார் மார்க்கம் ஊடாக தொலைபேசி இணைப்புக்களைச் செயற்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (த-17)

## இரவில் இருளில் மூழ்கும் உடுவில்- மானிப்பாய் வீதி

உடுவில் - மானிப்பாய் வீதியின் அகலிப்புக்காக ஏற்கனவே வீதியோரம் அமைக்கப்பட்டிருந்த வீதி விளக்குகள் அகற்றப்பட்டமையால் இந்த வீதி சில வாரங்களாக இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது. இதனால் இரவில் இந்த வீதியூடாகப் பயணம் செய்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் இப்பகுதியில் அடிக்கடி வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

வீதி அகலிப்புப் பணிக்காக அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வீதி விளக்குகள் அகற்றப்பட்டுள்ளன. அவை இதுவரை மீளப் பொருத்தப்படவில்லை. இதனால் வீதி இரவில் இருளில் மூழ்குகின்றது. இந்த வீதிக்கு மீண்டும் மின் விளக்குகளைப் பொருத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-17)

நிகழ்வுகள்

## இன்று

அடிக்கல் நடல்

ஊர்காவற்றுறையில் பஸ் தரிப்பிடம் அமைக்க அடிக்கல் நடும் நிகழ்வு முற்பகல் 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை நகர மையத்தின் தலைவர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

## தலைதூக்கும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
என்ற அமைப்பு குறிப்பிட்டுள்ளது. அநுராதபுர மாவட்டத்தில் செயற்படும் சிவில் அமைப்புகளின் கூட்டுத்தான் இந்த 'நாம் பிரஜைகள்' என்ற அமைப்பு என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 9 செப் வாகனங்கள், மாகாண சபை அமைச்சுகளின், திணைக்களங்களின் வாகனங்கள் 75 உட்பட அரச நிறுவனங்களின் வாகனங்களே சட்டவிரோதமான முறையில் தேர்தல் பிரசாரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் வகையிலான சம்பவங்கள் இடம்பெற்றாலும், திருகோணமலை மாவட்டத்தில் தேர்தல் சட்டங்கள் மதிக்கப்படுகின்றன எனவும் தேர்தல் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

சப்ரகமுவ மாகாணத்தைப் பொறுத்தமட்டில் கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் சில பதிவாகியுள்ளன.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற்று வரையில் மொத்தமாக 69 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அநுராதபுர மாவட்டத்தில் கட்-அவுட்களும், பெனர்களும் இன்னும் அகற்றப்படாமலுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

## கொலைகாரர்களை....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும் மாகாணசபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குச் சென்றபோது பொலன்னறுவை, கண்டி, கடுகண்ணாவ ஆகிய இடங்களில் வாகனம் நின்றுவிட்டது.

தரம் குறைந்த பெற்றோல் மற்றும் டீசலை அரசு இறக்குமதி செய்து நாட்டிலுள்ள வாகனங்களைப் பழுதடையச் செய்கிறது. தூஷணமிக்க ஒலிம்பிக் விளையாட்டு என ஒன்று உலகில் நடத்தினால், தரம் குறைந்த பெற்றோல் கொள்வனவுக்கான தங்கப்பதக்கம் மஹிந்த அரசுக்கே கிடைக்கும்.

தரம் குறைந்த எரிபொருளை இறக்குமதி செய்துவிட்டு, பெற்றோல் நிரப்பும் நிலையங்களில்தான் பிழை இருக்கிறது என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூறுகிறார்.

தரம் குறைந்த டீசல் இறக்குமதியால் பெரும் பிரச்சினைகளும், பெரும் நட்டமும் ஏற்பட்டுவருகின்ற நிலையில், இது எரிபொருள் கூட்டுத்தாபனத்தில் இருந்த தலைவர்களின் தவறு எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறுகிறார்.

ஆனால், இந்தப் பிரச்சினையுடன் நேரடித் தொடர்புடையவர்கள் 1962ஆம் ஆண்டு எரிபொருள் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கும்போது இருந்த தலைவர்களா அல்லது அதன் பின்னர் இருந்த தலைவர்களா என அவர் தெளிவாகக் கூறவேண்டும்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தரம் குறைந்த பெற்றோல், டீசல் இறக்குமதி தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது, எமக்கு எந்தப் பொறுப்பும் இல்லை என்பதுபோல கூறுகின்றார்.

அமைச்சர் கூறுவதுபோல எரிபொருள் மோசடிக் கும்பல் செயற்படுகின்றதென்றால் ஏன் அந்த எரிபொருள் மோசடிக் கும்பலைக் கட்டுப்படுத்த அவர் நடவடிக்கை எடுக்கவில்லை?

விமானங்களுக்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய் தரம் குறைந்தது எனத் தெரிந்தபின்னர் எண்ணெய்க் கொள்வனவில் ஈடுபட்ட நிறுவனங்களிடம் அதைத் திருப்பிக் கொடுத்து அதற்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்காது. தரம் குறைந்த எண்ணெயை மண்ணெண்ணெயாக மாற்றி அரசு மக்களுக்குக் கொடுக்கின்றது.

நாட்டில் இடம்பெறுகின்ற மோசடிகளுள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் செய்யும் மோசடியே மிகப் பெரியதாகும். நாட்டு மக்களுக்குச் சொந்தமான பணம் எவருடைய வங்கிக் கணக்குகளுக்குச் சென்றது? சுவிஸ் வங்கியில் அதிகமான இலங்கையர்களுக்கு வங்கிக் கணக்குகள் இருப்பதாக அறியமுடிகின்றது.

தரமான எண்ணெயைக் கொள்வனவு செய்து வாகனங்கள் நன்றாக ஓடுவதற்கு வழிசெய்யவேண்டிய அமைச்சர், தரம் குறைந்த எண்ணெயை இறக்குமதி செய்து வாகனங்களைப் பாதையில் இடைநடுவிலே செயலிழக்கச் செய்கிறார். மக்களுக்கு மின்சாரம் வழங்கவேண்டிய அமைச்சர் மின்வெட்டு செய்கிறார். வயல்களுக்கு நீர் விநியோகம் செய்யவேண்டிய அமைச்சர் நீர் விநியோகத்தைக் கைவிட்டுவிட்டார்.

பரீட்சைகள் நடத்தி மாணவர்களுக்கு சரியான பெறுபேறுகளை வழங்கவேண்டிய அமைச்சர் பிழையான பெறுபேறுகளை வழங்குவதோடு, பல்கலைக்கழகங்களையும் மூடிவிடுகிறார். நோயாளிகளைக் குணப்படுத்துவதற்கு சிறந்த மருந்துகளைக் கொடுக்கவேண்டிய அமைச்சர் மருந்துகளைத் தடைசெய்கிறார்.

அரசின் செயல்கள் இவ்வாறிருக்கையில், மக்களுக்கு அது வழங்கும் சேவை என்ன? நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்துவிட்டால், அந்தத் துறை தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அந்தந்த அமைச்சர்களே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் பொறுப்புக்கூற வேண்டும். தெரிவுக்குழுவின் தலைவராக ஆளுங்கட்சி அல்லது எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் இருக்கலாம்.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்குமாறு நாம் அரசிடம் ஏற்கனவே கூறியிருந்தோம். எமது கோரிக்கையை ஏற்று அரசு செயற்படாவிடின் அதற்கு எதிராக நாம் வீதிக்கு இறங்கிப் போராடுவோம். தரம் குறைந்த எண்ணெய் இறக்குமதியால் பல வாகனங்கள் சேதமடைந்து நாட்டுக்குப் பெரும் நட்டம் ஏற்படுகின்றது. இவற்றை வெளிப்படுத்தக் கூடாதென ஊடகங்களுக்கு அரசு அச்சுறுத்தல் விடுப்பதாகவும் அறியமுடிகின்றது - எனத் தெரிவித்துள்ளார்.

## ஒரே இரவில் மூன்று....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. வட்டக்கச்சியைச் சேர்ந்த குறித்த நபர் ஊரெழுவில் மேசன் வேலைசெய்து வருகின்றார். கடந்த மாதம் 28 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வேலை செய்து வருகின்றார்.

முத்திரைச் சந்திப் பகுதியிலுள்ள வேலைத்தளத்தில் தங்கி நின்றே அவர் வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் வட்டக்கச்சியிலுள்ள தனது மனைவியுடன் தொலைபேசியில் கதைத்துள்ளார்.

இதன்போது இன்னும் சில நாள்களில் வேலை முடிந்து திரும்பி வருவதாகவும் கூறியதாக அவரது மனைவி முதற்கட்ட விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு ஊரெழு பகுதியிலுள்ள ஆலயமொன்றில் இசை நிகழ்ச்சி நடந்தது. இரவு இசை நிகழ்ச்சி முடிந்த பின்னர் வீடு திரும்பிய மக்கள் ஊரெழு பொக்கணைப் பிரதேசத்தில் வீடொன்று எரிவதை அவதானித்துள்ளனர்.

வீட்டின் நெருப்பை அணைத்த பின்னர் உள்ளே சென்று பார்த்தபோது வட்டக்கச்சியைச் சேர்ந்த குறித்த நபர் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கோடரியால் அவரது கழுத்தில் இரண்டு தடவைகள் வெட்டப்பட்டுள்ளதாகவும் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கோடரியை வீட்டின் முன்புறத்தில் இருந்து மீட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸார் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை-

விசுவமடுப்பகுதியில் நேற்றுமுன்தினம் விசுவமடு, ரெட்பானா ,வள்ளுவர்புரத்தைச் சேர்ந்த வேலு விஜயகுமார் (வயது -33), மற்றும் விசுவமடு நெத்தலியாற்றுப் பகுதியைச் சேர்ந்த அருணாசலம் இராமநாதன் (வயது - 73) ஆகியோர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

வேலு விஜயகுமார் அவரது வீட்டின் முன்பாக 10 மீற்றர் தூரத்திலுள்ள மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டார்.

வீட்டிலிருந்து, வெளியில் சென்று வருவதாகக் கூறிச் சென்ற பின்னர் வீட்டு முற்றத்திலுள்ள மரமொன்றிலேயே தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டிருந்தார்.

கிணற்றுக் கப்பிக்குப் பயன்படுத்தும் கயிற்றிலேயே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இவரது சடலம் உடல்கூற்றுப் பரிசோதனை செய்யப்பட்ட போது கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்ட பின்னரே தூக்கில் தொங்க விடப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அருணாசலம் இராமநாதன் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது சடலத்தை, வீட்டோடு சேர்த்து தீ மூட்டியுள்ளனர். வீடு முற்றாக எரிந்துள்ளதுடன் சடலமும் பாதியளவில் எரிந்துள்ளது. உடல்கூற்றுப் பரிசோதனைகளின் போதே வெட்டிக் கொலை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பாகவும் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-ம-5)

## பாக்.பாதுகாப்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இந்தத் தகவலை இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது. இலங்கை இராணுவம் ஏற்பாடு செய்துள்ள 'சமாதானமும் அதன் நிலைப்பாடும்'' என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள மாநாட்டிலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார். பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலாளருடன், பாகிஸ்தான் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.இந்தப் பாதுகாப்பு மாநாட்டில், பாகிஸ்தானில் இராணுவ உபகரணங்களை உற்பத்தி செய்யும் இரண்டு நிறுவனங்கள், தமது உபகரணங்களைக் காட்சிப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

## தீர்ப்பு அறிவிக்கப்படும்வரை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பட்டபோதே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நீதிமன்றத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துக் கொண்டு இந்த விடயம் தொடர்பில் உரிய செயற்திட்டமொன்றை தயாரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் உயர்கல்வி அமைச்சர் சார்பில் முன்னிலையான சட்டமா அதிபர் பாலித்த பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்தும் இடம்பெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

இதற்கு முன்னர் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையால் மீண்டும் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்ததாக மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சாலிய பீரிஸ் குறிப்பிட்டார்.

அந்த அடிப்படை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோளை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

சட்டமா அதிபர் கூறும் விடயங்களை ஆராய்வதற்காக இம்மாதம் 30 ஆம் திகதி மனு மீதான விசாரணைகள் இடம்பெறும் என இருதரப்பினரதும் கருத்துக்களை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் குறிப்பிட்டது.

அன்றையதினம் சட்டமா அதிபர் முன்வைக்கும் இசற்புள்ளி விவகாரம் தொடர்பான பிரச்சினைக்கான தீர்வுகள் திருப்தியளிக்குமாயின் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும், அவ்வாறு இல்லாவிடின் அடிப்படை உரிமை மனுவை தொடர்ந்தும் விசாரிக்க நடவடிக்கை எடுப்பதாக உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

பிரதம நீதியரசருடன், கே.ஸ்ரீபவன் மற்றும் எஸ்.ஐ. இமாம் ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்றுப்பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (த)

## இந்தியாவுடன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இலங்கைக்கு நன்மை ஏற்படாது என்று தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான பொருள்கள், சேவைகள் வர்த்தகத்தை உள்ளடக்கிய இந்த உடன்பாடு, இலங்கைச் சந்தைக்குள் இந்தியா நுழைந்து கொள்வதற்கான வழியைத் திறந்துவிடும். இந்த ஆண்டில் இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் 5 பில்லியன் டொலரை எட்டியுள்ள போதும், இந்தியாவுக்கான ஏற்றுமதி வெறும் 554 மில்லியன் டொலர் மட்டும் தான்.

இந்த உடன்பாட்டினால் சிறிலங்காவுக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும் என்றும் தேசப்பற்றுள்ள் தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. (த)

## பதவிக்கு சோரம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
உட்பட்டுள்ளது என்றும் ஹக்கீம் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனை மாநகர மேயர் சிராஸ் மீராசாஹிப் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசியவை வருமாறு -

புலிகளால் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். காவியுடை தரித்துள்ள பயங்கரவாதத்தையும் ஒழிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இந்தப் பயங்கரவாதத்தினால் வடக்கு, கிழக்குக்கு வெளியே இருக்கின்ற முஸ்லிம்கள்தான் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று வடக்கு, கிழக்குக்கு வெளியேயுள்ள முஸ்லிம்களினால் நிம்மதியாகப் பள்ளிவாசல்களில் தொழுதுகொள்ளமுடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

நண்பர்கள், உறவினர்கள் என சிலர் சேர்ந்து இந்த ரமழான் மாதத்திலே வீடுகளைப் பூட்டிக்கொண்டும் தொழமுடியாத சூழல் காணப்படுகின்றது.

இவ்வாறான விடயங்களை அரசில் ஆட்சியின் ஓர் அங்கமாக இருக்கின்ற முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஆங்காங்கே விமர்சன ரீதியாகப் பேசமுடியாதென்றால், அதற்கான அந்தஸ்து எமக்கில்லை என்றால், எமது பாதுகாப்புக்கும், இருப்புக்கும் காட்டமான நடவடிக்கைகள் இல்லையென்றால் இவற்றை நியாயம் என்று எப்படிக் கருதமுடியும்?

இந்த விடயங்களைப் பற்றியே நான் பேசிக்கொண்டு வருகின்றேன். எமது விமர்சன ரீதியான பேச்சுகள் அரசை அதிர்ச்சியடையச் செய்துள்ளன.

ஆகவே, கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தமது வாக்குப் பலத்தால் மேற்படி விடயங்களில் தங்களுக்கு இருக்கின்ற அதிருப்தியை இந்த அரசுக்குக் காட்டியாகவேண்டும். என்றார் அவர்.

## துமிந்த..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பிரேமசந்திர பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டிருந்தார்

இந்த நிலையில் இது தொடர்பில் விசாரணை செய்தபோது துமிந்த சில்வா நாடு திரும்பவில்லை என்பது தெரியவந்ததாகப் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.(த)

## அரச நிகழ்வில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து.
இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற அறிவிப்பை தொடர்ந்து குறித்த நிகழ்வு நடைபெற்ற இடத்துக்குச் சென்று அந்த வேட்பாளரை நிகழ்வில் இருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்ததாகப் பொலிஸார் கூறினர்.

வீடமைப்பு அதிகார சபையினால் கேகாலை தபால் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமன விமல் வீரவன்ச அந்த நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார்.

பொலிஸாரின் தலையீட்டினால், தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் சப்ரகமுவ மாகாண சபைக்காக போட்டியிடும் வேட்டபாளருமான ஒருவரே வெளியேற்றப்பட்டுள்ளார். (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கிழக்குத் தேர்தல் நெறிமுறை சார்ந்து நடைபெற வேண்டும்

உரிய காலம் வருவதற்கு முன்னர், ஒன்றரை வருடங்கள் முந்திக் கொண்டு, மூன்று மாகாண சபைகளின் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. கிழக்கு மாகாண சபை, மத்திய மாகாண சபை, சப்பிரகமுவ மாகாண சபை ஆகியவற்றுக்கே பருவம் முந்திய தேர்தல் அடுத்த மாதத்தில் நடைபெற உள்ளது. கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்துவதை ஆட்சேபித்து அந்தச் சபையின் உறுப்பினர் ஒருவர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார். அது தொடர்பான தீர்ப்பு நாளை மறுதினம் ஒன்பதாம் திகதி வழங்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எப்படியோ, மாகாண சபைகளுக்குரிய தேர்தல்களை செப்ரெம்பர் எட்டாம் திகதி நடத்தி அவற்றில் வென்று தனக் குள்ள மக்கள் ஆதரவை வெளிப்படுத்த அரசு முனைந்துள்ளது. அதற்கான தீவிர தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபட்டுள்ளது.

மாகாண சபைகளுக்கான தேர்தலின் போது வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்களைப் பணிக்கு அமர்த்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

ஆனால் அந்தக் கோரிக்கையைத் தேர்தல் ஆணையாளர் நிராகரித்து விட்டார். நாட்டில் நீண்ட காலமாக நடைபெற்ற போர் முடிந்து விட்டதால், முன்னரைப் போன்று தேர்தல் மோசடிகள், வன்முறைகள் இடம் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைந்து விட்டன என்றும் தெரிவித்துள்ளார் அவர்.

அதிகாரத்தில், பதவியில் உள்ள அரசுக்குக் கட்டுப்படாது சுயாதீனமாக இயங்கும் அதிகாரம் கொண்டவர் தேர்தல் ஆணையாளர். தேர்தல் விதிமுறைகளைக் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்தவும், சுயாதீனமாக முடிவெடுக்கவும் அவருக்கு வலுவான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகையால் அடுத்த மாதத்தில் நடைபெற ஏற்பாடாகி உள்ள மாகாண சபைகள் தேர்தலில், வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்களைத் தவிர்த்து வழமை போன்று உள்நாட்டில் உள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் இப்பணிக்கு அழைக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

மேலும், தேர்தல் ஆணையாளரின் அதிகார வரம்புகளையும் மீறும் விதத்தில், ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள், தேர்தல் விதிமுறைகளை மீறி வாக்களிப்பில் மோசடி, வாக்குக் கொள்ளை போன்றவற்றில் ஈடுபடுவது, இந்த நாட்டில் நடந் தேறுவது, எழுதப்படாத விதியாகி நடைபெறுவது வழமை.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில், 1981 ஆம் ஆண்டு (ஜூன் மாதம் 04 ஆம் திகதி) நடைபெற்ற யாழ். மாவட்ட சபைத் தேர்தலின்போது, அரசின் பேர் பெற்ற அமைச்சர்கள் பலர் ஒன்றிணைந்து திட்டமிட்ட முறையில் படையினரதும் பொலிஸாரினதும் உதவி ஒத்தாசையுடன் பெரிய அளவில் நடத்திய வாக்குச் சீட்டு மோசடி, இந்நாட்டின் ஜனநாயகம் சீரழிக்கப்பட்ட முதலாவது பதிவு என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்ட சபைத் தேர்தலைக் குழப்பும் நோக்கில் கொழும்பில் இருந்து அமைச்சர்கள் தலைமையில் வந்த காடையர்களால் திட்டமிட்ட வகையில் தேர்தலுக்கு மூன்று நாள்கள் முன்னதாகவே ஜூன் மாதம் முதலாம் திகதி, தென்கிழக்காசியாவின் பெரிய பொது நூலகங்களில் ஒன்றான யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமது கட்சி தேர்தலில் தோல்வியுறவிருப்பதை உணர்ந்து, அதன் வெப்பியாரத்தில் நடத்தப்பட்ட அந்த அறிவுப் படுகொலை, இந்நாட்டின் வரலாற்றில் கறைபடிந்த ஒன்றாகப் பதிந்துள்ளது. யாழ்.பொது நூல் நிலையம் சாம்பரானது கேட்டு, தமிழறிஞர் தாவீது அடிகளார் உயிர் நீத்தமையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

அடுத்த மாதத்தில் நடைபெறும் மாகாண சபைத் தேர்தலில், வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கலான நாளிலேயே தேர்தல் வன்முறை கிழக்கில் ஆரம்பமாகிவிட் டது என்று கருதுவது தப்பன்று. கிழக்கு மாகாண சபையின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்கள் இருவருக்கு தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அதன் தொடரியாக, இதுவரை 69 தேர்தல் வன்முறைகள், மூன்று மாகாண சபைகளின் பிரதேசங்களிலும் நடந்தேறி உள்ளன என நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக் கான மக்கள் இயக்கம், (கபே அமைப்பு) தெரிவித்துள்ளது. நாளுக்கு நாள் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க் கலாம். மிகக் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தேர்தல் விதிகள் மீறப்படும் சம்பவங்களின் எண்ணிக்கை உயரும் என்றே நோக் கர்கள் கருதுகிறார்கள். அடுத்த மாதத்தில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் மாநாடு நடைபெறுவதற்கு முன்னர், தமிழ், முஸ்லிம் மக்களை அதிக எண்ணிக்கையாகக் கொண்ட கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத் தரப்பு வெற்றி கண்டு விட வேண்டும் என்ற இலக்குடன், அரச தரப்பு முழு வீச்சில் தனது வளங்களைப் பயன்படுத்தும் என்ற அச்சமும் வாக்காளர்களிடம் பரவலாக உண்டு.

இத்தகைய சூழமைவில், மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் தனக்குச் சாதகமாக அமைய வேண்டும் என்று அரச தரப்பு விரும்பும்; அதனை நாடியே செயற்படும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. மிகக் குறிப்பாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமது பக்கத்துக்கே வெற்றிக் கனி கைக்கு வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கும். அதன் பால் தேர்தல் மோசடிகளும், வன்செயல்களும் இடம் பெறும் என்று எதிர்பார்ப்பதும் அவை தடுக்கப்பட வேண்டு மெனக் கருதுவதும் மக்களின், வாக்காளர்களின் நிலைப்பாடு. இதனைக் கருத்தில் எடுத்து அரசும், தேர்தலுடன் தொடர்புடைய அதன் அங்கங்களும் செயற்பட வேண்டும், நடைபெறுமா?

# தாதிய பயிற்சியில் 60 பேர் சேரவில்லை

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ்.தாதிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கென நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டவர்களில் 60 பேர் இதுவரை கல்லூரிக்குச் சமுகமளிக்கவில்லை.

இவர்கள் தமது நிலைப்பாட்டை அறியத்தருமாறு யாழ்.தாதிய கல்லூரி அதிபர் செல்வி. ரஜூலா தேவி வல்லிபுரநாதன் கேட்டுள்ளார்.

தவிர தாதிய பயிற்சிக்குத் தகுதி இருந்தும் நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்படாதவர்களை சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கில் தாதியர் பற்றாக்குறை நிலவுவதை அடுத்து வடக்கு கிழக்கில் இருந்து மட்டும் விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவுகளைச் சேர்ந்த 216 பேர் தாதிய பயிற்சிக்கு சுகாதார அமைச்சால் தெரிவு செய்யப்பட்டு நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

அவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 56 பேருக்கு நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப் பட்டன. ஆனால் 44 பேர் மாத்திரமே கல்லூரிக்கு தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 160 பேர் யாழ்.தாதிய கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டு நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அவர்களில் 112 பேர் மாத்திரமே கல்லூரிக்கு வந்து தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

அதன்படி 216 பேரில் 60 பேர் இதுவரை கல்லூரிக்கு வந்து தம்மைப் பதிவு செய்யவில்லை. எனவே இந்த 60 பேரும் தமது நிலைப்பாட்டை கல்லூரிக்கு அறியத்தர வேண்டும் 210 பேரில் ஆண்கள் 29 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

அந்த 29 பேரில் 10 பேர் மாத்திரமே கல்லூரிக்கு வந்து தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

அதன்படி இதுவரை பதிவு செய்து கொள்ளாத ஆண்கள் 19 பேரும், பெண்கள் 41 பேரும், வேறு வேலை பெற்றுச் சென்று விட்டார்களா என்பது பற்றி எதுவும் தெரியப்படுத்தவில்லை.

தாதிய பயிற்சிக்குத் தகுதியிருந்தும் நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்படாத பலர் தாதிய கல்லூரிக்கு வந்து தமக்கு நியமனம் கிடைக்குமா என்று கேட்கின்றனர். அவர்களை சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு கூறியுள்ளேன்.

தாதிய பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படும் எண்ணிக்கையில் 5 வீதமே ஆண்களுக்காக ஒதுக்கப்படுகிறது என்று கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# மாங்குளம் வரையான ரயில் பாதை புனரமைப்புப் பணி துரித கதியில்

யாழ்ப்பாணம், ஓக.7

இந்த ஆண்டின் இறுதிக்குள் வடக்கே மாங்குளம் வரை ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் வடக்கு மாகாண அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஓமந்தையில் இருந்து மாங்குளம் வரை ரயில் பாதைக்கான தண்டவாளங்களைப் பொருத்தும் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. தற்போது ரயில் பாதைகளை சீரமைத்து மட்டப்படுத்தும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. இதன் பின்னர் உடனடியாகத் தண்டவாளம் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு டிசெம்பருக்குள் முடிவடையும். இந்த ஆண்டு இறுதிக்குள் மாங்குளம் வரை ரயில் சேவையை நீடிப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

இதேவேளை மாங்குளம், புளியங்குளம் பகுதிகளில் ரயில்வே ஊழியர்கள் தங்குவதற்கான விடுதிகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அந்தப் பகுதிகளில் உள்ள ரயில் நிலையங்களின் கட்டுமானப் பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (த-17)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு குளிர்சாதனப் பெட்டிகள்

தென்மராட்சி, ஓக.7

கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகத்தினர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை ஆகியவற்றின் பயன்பாட்டுக்கென இரண்டு குளிர்சாதனப் பெட்டிகளை வழங்கியுள்ளனர்.

இந்த நிறுவனங்களில் அத்தியாவசிய மருந்து வகைகள் பாதுகாப்பு பயன்பாட்டுக்கு இவை பயன்படுத்தப் படவுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்வராசா என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களின் நலன் கருதி, குடிதண்ணீர் வடிகட்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

## புதிய இயக்குநர்சபை விரைவில்

நீர்வேலி, சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொதுச் சபை கூட்டப்பட்டு புதிய இயக்குநர் சபைகள் விரைவில் தெரிவு செய்யப் படவுள்ளதாக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சங்கங்களுக்கானகிளைக் குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

சங்கத்தின் பொதுச் சபைகள் கூடி விரைவில் புதிய இயக்குநர் சபைகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

இதேவேளை- வடமராட்சி கிழக்கு மற்றும் தீவுப்பகுதி ஆகிய இடங்களில் மூன்று ஆண்டுகள் பதவிக் காலத்தை நிறைவு செய்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விரைவில் கிளைக்குழு தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன - என்றார். (த-17)

## ஊராரைத் திரும்பிப் பார்க்காத நெடுந்தீவு போக்குவரத்து பஸ்

### உல்லாசப் பயணிகளை ஏற்றிப் பறந்தது

யாழ்ப்பாணம், ஓக.7

நெடுந்தீவு மக்களுக்குச் சேவை செய்வதில் படகுகள் தான் அடம்பிடிக்கின்றன என்றால், அரச பஸ்ஸும் பாரபட்சம் காட்டுகிறது. ஊர்ப் பயணிகளை ஏற்ற பின்னடிக்கிறது இ.போ.ச. பஸ்ஸும்.

நெடுந்தீவில் தற்போது பொருக்கு இரு பஸ்கள் இருக்கின்றன. ஆனால் அனேகமாக ஒரு பஸ் மட்டுமே 'விக்கி, விக்கி' இழுத்து இழுத்து ஓடும். மற்றைய பஸ் மூலையில் ஒதுங்கி உறங்கிக்கொண்டிருக்கும்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 'வேண்டாவெறுப்பாக' சேவைக்கு வந்தது ஒரு பஸ். ஆனால் ஊர் மக்களை - உள்ளூர் பயணிகளை பார்த்து வேறு பக்கம் திரும்பிக்கொண்டது. அவர்களை ஏற்றவும் மறுத்து விட்டது. பாவம் நெடுந்தீவு மக்கள். காரணம் என்னவாக இருக்கும்...?

இது தான் அந்தச் சமாச்சாரம்;

நெடுந்தீவு வந்திருந்தனர் தென்பகுதியில் இருந்து உல்லாசப் பயணிகள். அவர்களைக் கண்டதும் 'பலவந்தமாக' வரவேற்றது அந்த இ.போ.ச. பஸ். 'நகிண்ட, நகிண்ட' (ஏறுங்கோ, ஏறுங்கோ) என்று அவர்களை ஏற்றிக்கொண்டது.

வந்திருந்த உல்லாசப் பயணிகளும் ஊரைச் சுற்றிப் பார்க்க மகிழ்ச்சியாக-குதூகலமாகப் புறப்பட்டனர். இ.போ.ச. பஸ்ஸும் 'புதுத்தெம்புடன்' பயணத்தைத் தொடங்கியது.

பாவம் உள்ளூர்ப் பயணிகள். படகில் வந்தவர்கள், நோயாளர்கள் எனப் பல தரப்பினரும் உச்சி வெய்யில், கடும் காற்றுமாக புழுதி எழும்ப தலையில் சுமைகளுடன் தலைவிதியை நொந்து கொண்டு நடையைக் கட்டினர்.

''எம்மைக் கவனிக்காது அதிகாரிகள், அரசியல்வாதிகள் கண்ணை மூடிக்கொண்டிருக்கின்றனர். பொது அமைப்புகள் என்றாலும் எங்களின் கஷ்டங்களை, அவலங்களைக் கவனத்தில் கொள்ளத் தயங்குவது ஏனோ தெரியவில்லை''. என்கின்றனர் நெடுந்தீவு வாழ் மக்கள். (ஒ-7)

## சாவகச்சேரி நகரசபை மைதானத்தை விளையாட்டுத் திணைக்களம் சீரமைக்கும்

சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானம் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினரால் புனரமைக்கப்படவுள்ளது.

விளையாட்டுத் துறை அமைச்சரின் ஆலோசனைப் பிரகாரம் இந்தப் பொது விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்பதற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணி, சாவகச்சேரி நகரசபையின் வேலைகள் பகுதியினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒன்பது ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த மைதானம் சகல வசதிகளுடன் புனரமைக்கப்பட்டால் பிரதேசமட்ட விளையாட்டுப் போட்டிகள் மட்டுமன்றி மாவட்ட, மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளும் நடத்தக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கூடைப்பந்தாட்ட மைதானம் அமைப்பதற்கான மதிப்பீட்டிடை தென்மராட்சி கல்வி வலய வேலைகள் பிரிவினர் தயாரித்து பிரதேச செயலரிடம் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# இருளில் மூழ்கிக்காணப்படும் வவுனியா நகரசபை வீதிகள்

## கொள்வனவு செய்யப்பட்ட மின்குமிழ்கள் பாதுகாப்பாக உறுப்பினர்களது வீடுகளில்

வவுனியா, ஓக.7

வவுனியா நகர சபைக்குச் சொந்தமான பல வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் அந்த வீதி வழியாகச் செல்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குருமன்காடு, திருநாவற்குளம், தோணிக்கல், கற்குழி, பூந்தோட்டம், பட்டாணிச்சூர் போன்ற பகுதிகளிலுள்ள வீதிகளுக்கு கடந்த பல வருடங்களாக மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை.

அதுமட்டுமல்ல இந்த வீதிகளில் பல புனரமைப்புச் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதால் இரவில் பயணம் செய்வோர் விபத்துக்குள்ளாகின்ற சூழ்நிலை காணப்படுகின்றது.

முக்கிய வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தப்படாததால் அந்தப் பகுதிகளில் இரவில் ஒன்று கூடும் இளைஞர்கள் மதுபானம் அருந்துதல் போன்ற சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

வவுனியா நகரசபை தனது எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கு மின் விளக்குகளை பொருத்துவதற்கு பல லட்சம் ரூபா செலவில் மின்விளக்குகளை கொள்வனவு செய்து பல மாதங்கள் கடந்த நிலையிலும் அவை உரிய இடங்களில் பொருத்தப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இதேவேளை பொருத்தப்படாத மின் விளக்குகள் நகரசபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்ததனை அடுத்து அவை அவர்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும், அவை பாதுகாப்புக் கருதி பொது அமைப்புக்களிலும் சில உறுப்பினர்கள் வீடுகளிலும் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்டவர்கள் மக்களின் நன்மைகருதி கொள்வனவு செய்யப்பட்ட மின்குமிழ்களை உடன் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ம-410)

## நெடுங்கேணியில் மருத்துவ முகாம்



நெடுங்கேணி, ஓக.7

இளமைத்துவத்துக்கான நாளை என்னும் தொனிப்பொருளில் நாமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவமுகாம் ஒன்று நெடுங்கேணி பொது வைத்திய சாலை வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நெடுங்கேணி பிரதேச மக்களின் நலன்கருதி பல்வேறு மருத்துவ சேவைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

இதில் பற்சிகிச்சை, கண் சிகிச்சை, ஸ்கானிங், வெளிநோயாளர் பிரிவு, குழந்தைகளுக்கான மருத்துவம் போன்ற மருத்துவ சேவைகள் நடைபெற்றன.

ஒட்டுசுட்டான், கனகராயன்குளம், புளியங்குளம் போன்ற பிரதேச மக்கள் வருகை தந்து வைத்திய சேவையை பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதில் ஆயிரத்து 500 இக்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

நெடுங்கேணி பொது வைத்தியசாலை வைத்தியர் நெடுங்கேணி இராணுவப் பொறுப்பதிகாரி உட்படப் பலர் இதில் கலந்து கொண்டு ஒத்துழைப்புக்களை வழங்கினர்.

நோயாளிகளுக்கு சேவாலங்கா நிறுவனத்தினால் போசாக்குக் கஞ்சியும் வழங்கப்பட்டது.

(ம-435)

## பூநகரியில் மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சிகள்

அக்காயன், ஓக.7

பூநகரிப் பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் முதலுதவி பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

அவசர மருத்துவத் தேவைகளின்போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக செயன்முறைகள் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டன. கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய கோட்டப் பாடசாலை மாணவர்கள் இதில் பயன் பெற்றனர். இதில் ஆசிரியர்களும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-18)

## துஷ்பிரயோகம் செய்யப்படும் பூங்கா

வவுனியா, ஓக.7

சிறுவர்களின் பொழுதுபோக்குக்கென குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவர்கள் தமது பெற்றோருடன் வருகை தந்து தமது ஓய்வைச் சிறந்த முறையில் கழிப்பதற்காக வவுனியா குடியிருப்புக் கிராம அபிவிருத்திச் சங்கம் யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா சி.சி.ரி.எம்.எஸ். வித்தியாலயத்துக்கு முன்பாக நவீன முறையில் சிறுவர் பூங்காவை அமைத்துள்ளது.

இந்தப் பூங்காவில் சிறுவர்கள் விளையாடி மகிழ்வதற்கான பல்வேறு வகையான விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்தப் பூங்காவே தற்போது விடுமுறை நாள்களிலும் மற்றும் பகல் நேரங்களிலும் துஷ்பிரயோகம் நடக்கும் இடமாக மாறியுள்ளது.

சிலரின் நடவடிக்கைகளால் பெற்றோரும், அங்கு வரும் சிறுவர்களும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருவதோடு அந்தப் பூங்காவுக்கு சிறுவர்களை அழைத்துச் செல்வதற்கும் பின்னிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்தப் பூங்காவின் தூய்மைத் தன்மையைப் பேணி களியாட்டங்கள் இடம் பெறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(ம-410)

## மாந்தை கிழக்குப் பகுதியில் அபிவிருத்தி குறித்து ஆராய்வு

அக்காயன், ஓக.7

மாந்தை கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தில் பதில் பிரதேச செயலர் சி.குணபாலன் தலைமையில் இது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மாந்தை கிழக்கில் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத வீதிகள் தொடர்பாகவும் இந்த வீதிகளை விரைவில் அபிவிருத்தி செய்தல் குறித்தும் ஆராயப்பட்டது.

இதேவேளை பிரதேச செயலகத்தின் எரிபொருள் ஒதுக்கீட்டில் படையினர் மாந்தை கிழக்கில் 5 கிலோ மீற்றர் வரையான வீதியை கனரக வாகனங்களின் உதவியுடன் புனரமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-18)

## அனிஞ்சியன்குளம் சங்கக் கிளையை மீண்டும் திறக்குமாறு மக்கள் கோரிக்கை

துணுக்காய், ஓக.7

மல்லாவி அனிஞ்சியன் குளம் 2 ஆம் பகுதியில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கக் கிளை கடந்த இரண்டு மாதகாலமாக மூடப்பட்ட நிலையில் இருப்பதாக கிராமத்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தக் கிளையைத் திறந்து வைத்து மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறு கேட்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான சங்கக் கிளையே கடந்த இரண்டு மாதங்களாக மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளது.

இந்தக் கிராமத்தில் 575 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் இவர்களின் சகாய வேலைக்கான நிவாரணம் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருள்களை இந்தக் கிளையூடாகப் பெற்று வந்தனர்.

இந்த நிலையில் தற்போது இந்தச் சங்கக் கிளை மூடப்பட்டுள்ளமையால் மக்கள் நீண்ட தூரம் சென்றே மல்லாவி நகர்ப்பகுதியில் அமைந்த கடைத் தெருக்களில் அத்தியாவசியப் பொருள்களை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தச் சங்கக் கிளையை மீளவும் இயக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என்று கிராம மக்கள் கேட்டுள்ளனர்.

(ம-415)

## வீதி புனரமைப்பில் அசமந்தப் போக்கு

நெடுங்கேணி, ஓக.7

கடந்த ஆறுமாத காலமாக நெடுங்கேணி மருதோடை பிரதான வீதியை புனரமைப்புச் செய்வதற்கு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அது ஆமை வேகத்திலேயே நகர்கிறது.

இடை இடையே மரங்கள் கொண்டு வீதி மறிக்கப்பட்டும் காணப்படுகின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், பாதசாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதான வீதியாக இந்த வீதி காணப்படுவதனால் வேறு வீதியின் ஊடாக செல்ல முடியாமல் சிரமம் அடைகின்றனர். வீதி ஓரமாகக் கூட மக்கள் செல்ல முடியாத அளவுக்கு கற்கள் குவிக்கப்பட்டு காணப்படுகின்றன.

பிரதான வைத்தியசாலை நெடுங்கேணியில் உள்ள நிலையில் நோயாளிகளும் பெரும் சிரமம் அடைகின்றனர். இது குறித்து உரியவர்கள் கவனம் எடுத்து இந்த வீதியை விரைவில் திருத்துமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

(ம-435)



முல்லைத்தீவு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை ஒன்று சேர்த்து முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் அண்மையில் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. பனைசார் உற்பத்திப் பொருள்கள், உணவுப் பொருள்கள் உட்பட அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டன. கண்காட்சியுடன் விற்பனையும் இடம் பெற்றது. (ம-435)

## கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காக செலுத்தினர் ரூ.2 லட்சம் தண்டம்

கிளிநொச்சி,ஓக.7

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளில் கசிப்பு, கோடா, கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் என்பவற்றுடன் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு கிளிநொச்சி நீதிமன்றில் இரண்டட இலட்சத்து முப்பத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்து.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை சுமார் 142 போத்தல் கோடா, மற்றும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணம், 25 போத்தல் கசிப்பு என்பவற்றை தனது உடமையாக மறைத்து வைத்திருந்த நபர் ஒருவரைக் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இவருக்கு 142 போத்தல் கோடா வைத்திருந்தமைக்கு ஒரு இலட்சம் ரூபாவும் உபகரணம் வைத்திருந்தமைக்கு இருபத்தி ஐயாயிரம் ரூபாவும் இருபத்து ஐந்து போத்தல் கசிப்பு வைத்திருந்தமைக்கு எழுபத்து ஐந்து ஆயிரம் ரூபாவுமாக இரண்டு இலட்சம் ரூபா தண்டப் பணமாக விதிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி குமாரசுவாமிபுரப்பகுதியில் நான்கு போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். இவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து முப்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. ஏற்கனவே குறித்த குற்றவாளி கசிப்புடன் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டு மீளவும் குற்றச்செயலில் ஈடுபட்டதனால் அவருக்கு ஒரு மாதகால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் 350 மில்லி லீற்றர் கசிப்பு தனது உடமையில் வைத்திருந்த ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மீளவும் குற்றத்தைப் புரிந்தமைக்காக மூன்று மாதகால கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.(10-6)

# முல்லைத்தீவின் பல பகுதிகளிலும் இராணுவத்தினரின் திடீர் கெடுபிடி

## பயப்பீதியில் வன்னி மக்கள்

முல்லைத்தீவு, ஓக. 7

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கில் இராணுவத்தின் சோதனைக் கெடுபிடிகளும் விசாரணைகளும் அண்மைக் காலமாக திடீரென அதிகரித்துள்ளதால் மக்கள் பயப்பீதி அடைந்துள்ளதுடன் தமது நாளாந்த நடவடிக்கைகளுக்கும் இடையூறாக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். வன்னிப்பகுதியில் அண்மைய நாள்களாக இராணுவத்தினர் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் காடுகளிலும் தேடுதல் நடத்திவருவதாகத் தெரியவருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு சிவபுரம், பாலத்தடி மற்றும் சிறாட்டிகுளம் ஆகிய பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர், அந்த வீதியூடாக வரும் பயணிகள் பஸ்கள், ஏனைய வாகனங்கள் என்பவற்றை மறித்து சோதனைக்கு உட்படுத்துவதுடன், பயணப் பொதிகளையும் சோதனையிட்டு வருகின்றனர்.

அத்துடன் இந்த வீதியூடாக மோட்டார் சைக்கிள், சைக்கிள் என்பவற்றில் பயணிப்போரும் இதன்போது சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு சோதனையிடும்போது சிலரை தாம் சந்தேகிப்பதாக் கூறி பல மணிநேரம் மறித்து வைத்து தீவிர விசாரணை நடத்திவிட்டு பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர்.

இதே போன்று துணுக்காய் பிரதேசத்திற்கு உட்பட்ட யோகபுரம் பகுதியிலும் திடீரென இராணுவத்தினர் வீதித் தடைகளைப் போட்டு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு வன்னிப்பகுதியில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இவ்வாறான சம்பவங்களால் மக்கள் கிலி கொண்டுள்ளதுடன், ஏன் எதற்கு என்று தெரியாமல் விழித்துக் கொள்கின்றனர். பயணத்தின் போது திடீரென மறிக்கப்பட்டு விசாரணை, சோதனை நடத்தப்படுவதால் முன்பின் அறியாத மககள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. தினமும் இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்கு உட்பட்டே தாம் பயணிக்க வேண்டியுள்ளதாக பஸ் பயணிகள், அரச உத்தியோகத்தர்கள், வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (10-6)

## அபிவிருத்தி எதுவுமின்றி மாந்தை கிழக்கு மக்கள்

துணுக்காய்,ஓக.7

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 400 குடும்பங்கள் எந்தவித அபிவிருத்திகளும் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அபிவிருத்தித் திட்டங்களில் தாம் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று இந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறாட்டிக்குளம், பனங்காமம், கொம்பு வைத்த குளம், கிடாய்பிடித்த குளம், நட்டாங்கண்டல், ஒட்டக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களே அபிவிருத்தியில் பின்தள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மீள்குடியமர்வு இடம்பெற்று 3 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இந்தக் கிராமங்களில் உள்ள சேதமடைந்த வீதிகள் எதுவுமே திருத்தப்படவில்லை.

இந்த நிலையில் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் சிரமம் அடைகின்றனர். பற்றைக் காடுகள் வீதியோரங்களைச் சூழ்ந்துள்ளதால் பதற்றத்தின் மத்தியிலேயே தாம் பயணிப்பதாகக் கூறுகின்றனர்.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் கூட அற்ற நிலையில் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலே வசித்து வருகின்றனர்.

தற்காலிக குடியிருப்புகளில் வசிக்கும் இந்தக் கிராம மக்கள் வீட்டுத் திட்டங்களில் கூட புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் என்று கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தை உயர் அதிகாரிகள் கவனத்தில் எடுத்து வீட்டுத்திட்டம் மற்றும் மலசலகூடம் அமைக்கும் திட்டங்களுக்கு குறித்த கிராமங்களையும் உள்வாங்குமாறு மக்கள் கேட்கின்றனர். (ம-415)

## அபிவிருத்தியை ஆராய வவுனியாவுக்கு மஹிந்த

வவுனியா, ஓக. 7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 17 ஆம் திகதி வவுனியாவுக்கு வருகை தரவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வவுனியா, மன்னார் மாவட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள திணைக்களத் தலைவர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதியும் கலந்துகொள்ளவுள்ளார் என்று கூறப்பட்டது.

இதேவேளை, கடந்த மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவவுனியாவுக்கு வருவார் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவர் வருகைதரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ம-400)

## கஞ்சா கடத்திய பெண்ணுக்கு கடூழிய சிறைத்தண்டனை

கிளிநொச்சி, ஓக.7

கிளிநொச்சி, பாரதிபுரம் பகுதியில் கடந்த மாதம் கஞ்சாக்கட்டுடன் கைது செய்யப்பட்ட இளம் குடும்பப் பெண்ணுக்கு பத்தாயிரம் ரூபா தண்டப் பணமும் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாதகால கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பாரதிபுரம் பகுதியில் கடந்தமாதம் 9ஆம் திகதி கஞ்சாக் கட்டினைத் தனது உடமையில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டிலும் கஞ்சாவினை சாதாரண சிவில் உடையில் சென்ற பொலிஸ் குற்றத் தடுப்பு அதிகாரிக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டிலும் குறித்த இளம் குடும்பப் பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவரை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது கடந்த மாதம் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது. பின்னர் விளக்கமறியல் நேற்றுவரை நீடிக்கப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று மீள கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பெ. சிவகுமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இவருக்கு பத்தாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாதகால கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

பெண்ணின் கணவரும் கடந்த வருடத்தில் பல தடவைகள் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டு, தண்டனையின் பின்னர் விடுதலையாகியமை குறிப்பிடத்தக்கது. (10-6)

## தனியார் வீட்டில் தபாலகம்

முள்ளியவளை,ஓக.7

முள்ளியவளை தபாலகத்துக்கு இதுவரை சொந்தமாகக் காணியோ, கட்டடமோ இல்லாத நிலையில் தனியார் வீட்டில் இந்தத் தபாலகம் இயங்கி வருகின்றது.

இந்த வீட்டுக் காணி வேறு ஒருவரின் கைக்கு மாறியுள்ள நிலையில் தபாலகத்தை எங்கு மாற்றுவது என்ற நிலைமை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தபாலகத்துக்கு போருக்கு முன்னர் காணி ஒன்று ஒதுக்கப்பட்டிருந்த போதும் அதன் ஆவணங்கள் போர் சூழலில் இழக்கப்பட்டமையால் குறித்த காணியை உரிமைகோர முடியாது உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ம-433)

## தனியான நெற்களஞ்சியம் அமைக்கக் கோரும் ஒட்டுசுட்டான் விவசாயிகள்

ஒட்டுசுட்டான்,ஓக.7

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தனியான நெற்களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலபோகத்தில் இந்தப் பிரதேசத்தில் 10ஆயிரம் தொடக்கம் 12ஆயிரம் ஏக்கர் வரையான நிரப்பரப்பில் விவசாயம் மேற்கொள்ளப்படுவது வழமை. அத்துடன் சிறுபோகச் செய்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிலையில் நெல்லைச் சந்தைப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் சங்கங்கள் மூலம் நெல் கொள்வனவு செய்யப்பட்டதால் விவசாயிகள் பெரும் நன்மை அடைந்தனர். தற்போது சங்கங்கள் கைவிட்ட நிலையில் உற்பத்தியாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் நெல்லை விற்பனைக்கு அதிக தூரத்துக்கு கொண்டு சென்று அது விற்பனை செய்யப்படாத நிலையில் மீண்டும் வீட்டுக்குக் கொண்டுவரும் நிலையில் விவசாயிகள் உள்ளனர். இதனால் வீண் செலவுகளையும் அவர்கள் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

இந்த நிலையில் தனியாருக்கு நெல்லை குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்துக்கென நெற் களஞ்சியம் ஒன்று அமைக்கப்படுமேயானால் நெல்லைக் களஞ்சியப்படுத்தி உரிய வேளையில் விற்பனை செய்ய முடியும். இதனால் விவசாயிகளுக்கு வீண் செலவுகளும் ஏற்பட வாய்ப்பு இல்லை.

இந்த விடயத்தைக் கருத்தில்கொண்டு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கென தனியான நெற் களஞ்சியம் ஒன்றை அமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-500)

## சமுர்த்தி அதிகாரிகள் திணைக்கள சேவைக்குள்

சமுர்த்தி அதிகாரசபையின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரும் இன்னும் ஒரு மாத்காலத்தினுள் திணைக்கள சேவைக்குள் உள்வாங்கப்படவுள்ளதாக சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சட்டத்தரணி ஆர்.பி.பந்துல திலகசிறி தெரிவித்தார்.

சமுர்த்தி வங்கிச் செயற்பாடுகள் தொடர்பாகவும், வங்கிகளை கணினி மயப்படுத்துவது தொடர்பாகவும் ஆராயும் கலந்துரையாடல் சம்மாந்துறைப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமுர்த்தி அதிகார சபையின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரும் திணைக்கள சேவைக்குள் உள்வாங்குவதற்கான சட்டரீதியான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அமைச்சரவையினதும் அங்கீகாரம் பெறப்பட்டு தற்போது நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. என்றார். (ச)

## திருகோணமலையில் மு.கா. ஓர் ஆசனத்தையும் பெறாது

### ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் கருத்து

திருகோணமலை,ஓக.7

திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸால் ஓர் ஆசனத்தைக்கூட வெல்ல முடியாது என்று திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் எம்.ஏ.எம். மஹரூப் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம்களை ஓரங்கட்டிவரும் அரசுடன் ஒட்டிக் கொண்டு இருக்கும் முஸ் லிம் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடாவடித்தனங் களைத் தட்டிக் கேட்பதில் பின்நின்றே வருகின்றார்கள்.

அமைச்சர் பதவிக்காக

**அமைச்சர் பதவிக் காக அரசுடன் சோரம் போகும் முஸ்லிம் தலைமை கள் ஒரு போதும் முஸ்லிம் கள் விவ காரத்தில் கரிசனை காட்டு வதில்லை.**

அரசுடன் சோரம் போகும் முஸ்லிம் தலைமைகள் ஒரு போதும் முஸ்லிம்கள் விவகாரத்தில் கரிசனை காட்டுவதில்லை.

திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்களின் பல பள்ளி வாசல்கள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு தொழுகைக்குக்கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதாகக் கூறிக் கொண்டு முஸ்லிம்களை ஏமாற்றிவருகின்றது - என்றார். (ச)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற வவுனியா, மடுகந்தை ஸ்ரீ தலதா விகாரையின் வருடாந்த தலதா பெரஹெர ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

## யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச ஊழியர்
## சி.க.கூ.சங்கம் பதிவு .இல. என் / ஜே/26 பதிவுத் திகதி 24.11.99

யாழ். மாவட்ட சி.க.கூ.ச. சமாச ஊழியர் சி.க.கூ. சங்கத்தினால் 04.08.2012 ஆம் திகதி நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் அதிஷ்டம் பெற்ற இலக்கங்கள்

முதலாம் இடம்: 3050, இரண்டாம் இடம்: 1185, மூன்றாம் இடம் : 764

10 ஆறுதல் பரிசுகள்

1081, 1811, 3222, 3626, 2822, 1221, 2807, 2003, 1473, 3511

இவ் இலக்கங்களை உறுதிப்படுத்தி காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

தலைவர் (சி/2151) (45.6.7) செயலாளர்

# மரண அறிவித்தல்கள்

## செல்வி மாலினி நடராஜா



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மாலினி நடராஜா நேற்றுமுன்தினம் (05.08.2012) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா நடராஜா (சுதுமலை தெற்கு)- தையல் நாயகி (தையிட்டி) தம்பதியரின் அன்பு மகளும், பெருமாள்பிள்ளை, குகராஜா, பாலாராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மோகனபுஸ்பம், சுபாசினி, லோகமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நாளை (08.08.2012) புதன்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 2மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கொழும்பு (சி/1894) (3.14) ந.பெருமாள் பிள்ளை (சகோதரன்)

## சூசைப்பிள்ளை பிரான்சிஸ் போஜியா

(ஆங்கில ஆசிரியர்)



மாவிலங்கையடி அல்வாய் வடமத்தியைச் சேர்ந்த சூசைப்பிள்ளை பிரான்சிஸ் போஜியா நேற்று (06.08.2012) திங்கட்கிழமை கர்த்தருக்குள் மரித்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - ஆனாசி தம்பதியரின் மகனும் ஆசீர்வாதம்-விக்டோரியா தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், அனுதீபா (லதா), அனுராதா(விஜி), கிரேசியன் (பாபு), அனுகீதா (கீதா), அனுசீதா (சீதா), அனுசுதா (சுதா), அனுபாமா (பாமா), சாள்ஸ்டிகன் (கோபு) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருளானந்தம் (ஆனந்தம்), சூசைதாசன் (சூசை), இதயரூபி, சுபாஸ்கந்தர் (சுபாஸ்), ஸ்ரீபன் , யுனைதீன், றேகன் காலஞ்சென்ற வஸ்தீன்ரமேஷ், சரணி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (07.08.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் அல்வாய் வடக்கு பழைய வேதக்கோயில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவிலங்கை,
அல்வாய் வடமத்தி, அல்வாய் (c/2155)(8.14)
தகவல்:
குடும்பத்தினர்

## குணரத்தினம் தெய்வேந்திரன் (கிளிமாமா)

(முன்னாள் இ.மி.ச ஊழியர்)



மத்தொனி கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குணரத்தினம் தெய்வேந்திரன் நேற்று (06.08.2012) திங்கட்கிழமை அகாலமரணமாகி விட்டார்.

அன்னார் தங்கமலரின் அன்புக் கணவரும், மகேந்திரராசா (ஓய்வுபெற்ற கிராம சேவகர்), செல்வராணி, சுகிர்தராணி, றஞ்சிதமலர், கமலேந்திரன், சுமதி, மங்களம், விக்கினேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மத்தொனி, கரவெட்டி. குடும்பத்தினர்.
(சி/2157)(6.7.9)

## எரிகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில் சாவு

வடமராட்சி, ஓக. 7

எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபரான கரவெட்டி மத்தியைச் சேர்ந்த குணரத்தினம் தெய்வேந்திரன் (வயது-61) சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

மண்ணெண்ணெய் உடலில் ஊற்றி தீப்பற்றி எரியவே அயலவர்களின் உதவியுடன் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் எரிகாயங்களுடன் இவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்தார்.

இவரது மரணம் குறித்து பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி பா.சசிந்திரசிங்கம் விசாரணை நடத்தி பிரேத பரிசோதனைக்குப் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பணித்தார்.

(ஒ-8)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம்- பூபாலசிங்கம்

கோப்பாய் வடக்கு கந்தசுவாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம்- பூபாலசிங்கம் நேற்றுமுன்தினம் (05.08.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், இராசமலரின் அன்புக் கணவரும், லோகராசசிங்கம், முருகானந்தன், வரதராசன், தேவானந்தன், பவானந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தசாமி கோயிலடி,
கோப்பாய் வடக்கு.
தகவல்:
குடும்பத்தினர்.
(சி/2160) (3.14)

## கார் வாடகைக்கு

நீண்ட நாள், குறுகிய நாள் வாடகைக்கு
சாரதி உடனோ அல்லது சாரதி
இல்லாமலோ பெற்றுக்கொள்ளலாம்.
(21457)(6.7.9) தொடர்பு- 077 936 1427.

## கோடைகால வெயில் வாட்டுகின்றதா?

சருமம்பொலிவிழக்கின்றதா ???
கருமையடைகின்றதா.முகப்பருக்களா.எண்ணைபசையா
கருவளையமா உடனடிதீர்வு 10 நாட்களுக்குள்.

சானியாபேபல்கெயர்

இல,262,"நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை"
நாயன்மார்கட்டு நல்லூர்,
யாழ்ப்பாணம்.
முற்பதிவு அவசியம் ☎ 0777351954
"பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன" !!
(21415)

## உதவியாளர் தேவை

அரச ஓய்வூதியம் பெறும் வயது முதிர்ந்த
பெண்ணைப் பராமரிப்பதற்கு
உதவியாளர் தேவை. 40வயதுக்கு
மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 021 3216 104,
077 6134 304
(21452)

## தவறி விட்டது

இரத்தினவேல் ஞானவேல் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல(441530153V),மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம்,காப்புறுதிப் பத்திரம், Amox bank, HNB bank கடன் அட்டைகளும் 03.08.2012 அன்று மாலை 5 மணியளவில் 751 மினிபஸ்சில் தொண்டமானாறு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறைக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்துத்தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

(18710)(6.7.9) தொடர்பு- 077 755 5950

## வேலையாள்கள் தேவை

கிளினிக் மற்றும் பாமசியில்
பணிபுரிவதற்கு முன்
அனுபவமுள்ளவர்கள் தேவை.
தொடர்பு: 077 289 7869
(21413) (45.6.7)

## அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## கூறுவிலை கோரல்

அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்குச் சொந்தமான பின்வரும் பொருள்கள் கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. இவற்றை வாங்க விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை பொது முகாமையாளர், அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், அளவெட்டி என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அன்றி நேரடியாகவோ 31.08.2012 இக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

1. 26 - 7807 இலக்க இசூசு லொறி
2. இரும்புக்கதிரைகள்
3. சூரிய மின்கலம்
4. கழிவு இரும்புகள்

இவற்றை பார்வையிட விரும்புவோர் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்
அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி.
(சி/2153)(6-7-8)

## தவறிவிட்டது

நவிண்டில் கரணவாய் வடமேற்கைச் சேர்ந்த ஸ்ரீதரன் பிரதீப் ஆகிய எனது அடையாள அட்டை 822784518V சாரதி அனுமதிப்பத்திரம் ஞானசேகரம் தாரணி 877803538V என்பவரினதும் அடையாள அட்டை அளவெட்டிக்கும், வட்டுக்கோட்டைக்கும் இடையில் தொலைந்து விட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

T.P : 077 0699908

(சி/2057)(8.14)

## யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரி
## புதிய அனுமதி - 2013

2013ம் ஆண்டிற்கான தரம் 1, தரம் 6 வகுப்புகளுக்கான புதிய அனுமதி விண்ணப்பப்படிவங்களை கல்லூரி நாள்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் (பரீட்சைக் கட்டணம் உட்பட)- ரூபா 500/= ஆகும்.

* தரம் 1இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2007 இற்கும் 31.01.2008 இற்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.
* தரம் 6இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2002 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருக்கவேண்டும்.
* புதிய அனுமதி தேர்வு 15.09.2012 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை நேரில் வந்து அலுவலகத்தில் ஒப்படைக்கவும். அவை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் 05.09.2012. தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

அதிபர்
(சி/2159) (3.14)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி - யாழ்ப்பாணம்
## கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண தரம்- 2012

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. க.பொ.த. (சா/த) தமிழ், கணிதம் உட்பட நான்கு திறமை சித்திகளுடன் கூடிய இரு தடவைகளுக்கு மேற்படாத 06 பாடங்களில் சித்தி பெற்றவர் அல்லது.
2. க.பொ.த. (உ/த) ஒரே தடவையில் ஏதாவது இரண்டு பாடங்களில் சித்திபெற்றவர் அல்லது.
3. க.பொ.த. (சா/த) சித்திபெற்று குறைந்தது 2 வருட தனியார்/ வர்த்தகத்துறையில் வேலைபுரிந்தவர் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை, வீரசிங்கம் கட்டடத் தொகுதி,
இல.12,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
விண்ணப்ப முடிவு திகதி: 15.08.2012
சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களுடன் கல்விச் சான்றிதழ் பிரதிகளை இணைத்து விண்ணப்பிக்கவும்.

அதிபர் (சி/2150) (45.6.7)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசலட்சுமி சுப்பிரமணியம்

(இராசம்மா)



காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், காரைநகர் பலகாட்டை வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலியில் வசித்துவந்தவருமான திருமதி இராசலட்சுமி சுப்பிரமணியம் நேற்று (06.08.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், சுப்பிரமணியம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரியின் ம்மைத்துனியும், தவமலர் (தேவி), சிவமலர் ஆகியோரின் அன்புத் தாயும், சற்குணராசா, சிவபாதம் ஆகியோரின் மாமியும், தவராசா (ரூபன்), தர்சினி, சர்சனா, தனுசன், சியான் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2012) செவ்வாயக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

74/1, கலாசாலை வீதி, திருநெல்வேலி (21459)(8.14)
தகவல்:
குடும்பத்தினர்

# பொது இடங்களில் மது பாவனையை தடுக்க பொலிஸாரின் உதவி தேவை

## மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் சோதிநாதன்

யாழ்ப்பாணம், ஓக 7

வீதிகள் மற்றும் பொது இடங்களில் வைத்து மது பாவனையில் ஈடுபடுவோர் மீது பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் மூலமே வீதிகளில் ஏற்படும் இடையூறுகளுக்குத் தீர்வுகாண முடியும்.

இவ்வாறு யாழ்.மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் என்.சோதிநாதன் தெரிவித்தார்.

மதுபோதையில் வீதிகளில் நிற்போர் போக்குவரத்துச் செய்யும் பயணிகளுக்கு இடையூறு விளைவிப்பது குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் தற்போது வீதிகள் மற்றும் பொது இடங்களில் மதுப் பிரியர்களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகிறது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எமது திணைக்களத்துக்கு தொலைபேசி மூலம் பொதுமக்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

பொதுமக்கள் முறைப்பாட்டை மதுவரித்திணைக்களம் நடைமுறைப்படுத்த முடியாது. ஏனெனில் இது பொலிஸாரால் மட்டுமே கட்டுப்படுத்தவோ, நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ முடியும்.

குறிப்பாக ஆலய முன்றில்கள், சனசமூக நிலையங்கள், பற்றைக் காணிகள் போன்ற இடங்களில் மதுப் பிரியர்கள் ஒன்றுகூடி மது அருந்துவதுடன் அட்டகாசம் செய்கின்றனர்.

இதனைவிட மதுபோதையில் என்ன செய்வது எனத் தெரியாமல் வீதியால் செல்வோர்களுக்கு இடையூறு விளைவிப்பதுடன் பெண்களுடன் தகாத முறையில் நடப்பதற்கும் முயற்சிக்கின்றனர்.

இதுபோன்ற பல முறைப்பாடுகளை பொதுமக்கள், ஆலய நிர்வாகிகள் எமக்கு அடிக்கடி தெரிவித்த வண்ணமே உள்ளனர். எம்மால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது எனக் கூறும்போது பொலிஸாரின் தொலைபேசி இலக்கத்தைத் தருமாறு எம்மிடம் கேட்கிறார்கள்.

பொலிஸார் இதற்கான நடவடிக்கைகள்ள உடனடியாக மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது- என்றார். (ம-14)

# வீதி மறுசீரமைப்புக்கு ஒத்துழைக்க கோரிக்கை

தென்மராட்சி, ஓக.7

ஏ-9 வீதியிலிருந்து கரம்பகம் ஊடாக விடத்தற்பளைக்கு புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள வீதி வேலை ஆரம்பிப்பதற்கு அங்குள்ள குடியிருப்பாளர்கள் தமது வேலிகளை பின்னகர்த்த பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வேலைகள் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துரித மீட்சித் திட்டத்தில் எழுதுமட்டுவாழ், ஆசைப்பிள்ளை ஏற்றத்திலிருந்து தெற்குப் புறமாக கரம்பகம் ஊடாக விடத்தற்பளைக்கு செல்வதற்கான வீதி புனரமைக்க நிதி ஒதுக்கப்பட்டது. கரம்பகம் பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் தமது காணியில் ஏற்கனவே இருந்த வேலியை முன்னகர்த்தி அடைத்து வைத்துள்ளனர்.

வீதி புனரமைப்புக்கு வேலிகளை பின்னகர்த்திக் கொடுக்காததால் வேலைகள் ஆரம்பிக்க முடியவில்லை.

இந்த வீதி புனரமைக்கப்பட்டால் தமது கிராமத்திற்கு செல்லும் குறுகிய வழியான இந்த வீதியூடாகச் சிரமம் இன்றிப் போக்குவரத்து மேற்கொள்ளலாம் எனக் கருதிய விடத்தற்பளை, கிளாலி, உசன் பகுதி மக்கள் ஏமாற்றமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# வீதி அமைக்கப் போடப்பட்ட இரும்புக் கேடர்கள் திருட்டு

தென்மராட்சி, ஓக.7

தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீதியின் பயன்பாடு குறைந்த நிலையில் அங்கு பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கேடர்கள் இனந்தெரியாதோர்களால் திருடப்பட்டுள்ளன.

கைதடி-கோப்பாய் வீதி போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருந்த வேளையில் கைதடி, நீர்வேலிப் பிரதேசங்களின் மக்கள் பல லட்சம் ரூபா செலவில் கைதடி வடக்கு, நீர்வேலி இணைப்பு வீதியை அமைத்தனர்.

சிறு கடலேரிப் பகுதி என்பதால் மழை நீர் வெளியேறுவதற்கு வசதியாக இரும்புக் கேடர்களால் பாலங்கள் அமைத்துப் பயன்படுத்தி வந்தனர்.

தென்மராட்சி பிரதேச மக்கள் மட்டுமல்ல வலிகாமம் பிரதேச மக்களும் உற்பத்தியாளர்களும் தமது உற்பத்திப் பொருள்களை கொண்டு வருவதற்கு வசதியாக இந்த வீதி பயன்படுத்தப்பட்டு வந்தது.

கைதடி-கோப்பாய் வீதி பாவனைக்கு விடப்பட்ட போதிலும் ஒரு சிலர் இந்த வீதியைப் பயன்படுத்தி வந்தனர்.

அண்மையில் இந்த தற்காலிக வீதியில் சென்ற வாகனம் பாலங்களில் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கேடர்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்ததால் பயணத்தைத் தொடர முடியாமல் திரும்பியது.

இதனையடுத்து அங்கு சென்று பார்த்த போது வீதியின் பாலங்கள் அமைக்கப் பயன்படுத்தப்பட்ட இரும்புக் கேடர்கள் காணாமற்போயிருந்தமை தெரிய வந்தது. (ம-9)



யாழ்ப்பாணம் மாநகர சபை சைவசமய விவகாரக்குழு நல்லைக் கந்தன் திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிட்டுவரும் நல்லைக் குமரன் 20 ஆவது வெளியீட்டு விழா நேற்று திங்கட்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதில் இந்த ஆண்டுக்கான யாழ். விருது அமுதசுரபி அன்னதான சபைக்கு வழங்கப்பட்டது. விருதை மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அமுதசுரபி அன்னதான சபை நிர்வாகிகளிடம் கையளிக்கிறார். (ம-7)

# இரு வீதிகளைத் திருத்தக் கோரிக்கை

தென்மராட்சி, ஓக.7

சாவகச்சேரி பிரதேச சபைப் பிரிவுக்குட்பட்ட இரு வீதிகளைப் புனரமைத்து வழங்குமாறு இந்த வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் கோரியுள்ளனர். மட்டுவில் கிழக்கு ஆலடி வீதி, கச்சாய் பாதாள வைரவர் ஆலய வீதி ஆகியவற்றையே புனரமைத்து வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. இந்த வீதிகள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் மணல் வீதியாக உள்ளதால் பொதுமக்கள் வாகனங்களில் செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த வீதிகளில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மாணவர்களும் மக்களும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# குற்றச் செய்தி

யாழ்ப்பாணம், ஓக.7

புங்குடுதீவில் அனுமதியின்றி மேலதிகமாக கள் வைத்திருந்த குற்றத்துக்காக 13 பேர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் 6 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் கடந்த வாரம் புங்குடுதீவைச் சேர்ந்த 13 பேரும் யாழ்.மதுவரிப் பரிசோதகர்களால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்கள் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா 500 ரூபா வீதம் 6 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-4)

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஓக.7

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்த வருடத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் இரு அபிவிருத்தி வேலைக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி கிழக்கு சனசமூக நிலையத்துக்கு உபகரண கொள்வனவுக்கும் தச்சன்தோப்பு, காந்தி சனசமூக நிலைய முன்பள்ளிக்கு உபகரணக் கொள்வனவுக்குமென தலா 49 ஆயிரம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே தென்மராட்சி பிரதேசத்தில் 40 வேலைத் திட்டங்களுக்கான பட்டியல் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# சிறுவர்களுக்கு புகைப் பொருள் விற்றோருக்கு ரூ.62,000

யாழ்ப்பாணம், ஓக.7

21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகைப்பொருள் விற்பனை செய்த வியாபார நிலைய உரிமையாளர்கள் 25 பேருக்கு ஊர்காவற்றுறை நீதி மன்றம் 62 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

காரைநகர் மற்றும் புங்குடுதீவு பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் கடந்த வாரம் வியாபார நிலைய உரிமையாளர்கள் முற்படுத்தப்பட்டனர்.

சங்கானை மதுவரிப் பரிசோதகர்களால் காரைநகரைச் சேர்ந்த 13 வியாபாரிகளும், யாழ்.மதுவரிப் பரிசோதகர்களால் புங்குடுதீவைச் சேர்ந்த 12 வியாபாரிகளும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்கள் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 62 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினர்.

21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகைபொருள் விற்பனை செய்பவர்களை நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு தண்டப்பணம் அறிவிடப்படுகின்ற போதும் அந்தக் குற்றச்செயல் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்று பலதரப்பிலும் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ம-4)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலையை பயன்படுத்திய 9 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஓக.7

எழுவைதீவில் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலையைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட சாவற்கட்டைச் சேர்ந்த 9 கடற்றொழிலாளருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 18 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

அத்துடன் அவர்கள் பயன்படுத்திய வலை பறிமுதல் செய்யப்பட்டது. படகு இயந்திரம் என்பன அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன.

கடந்த செவ்வாய்க் கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 9 பேரும் பொலிஸார் ஊடாக நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு வெள்ளிக் கிழமை மன்றில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டது.


அன்றைய தினம் மன்றில் முன்னிலையாகிய 9 பேரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 2 ஆயிரம் ரூபா வீதம் 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவற்கட்டைச் சேர்ந்த 9 பேரும் எழுவைதீவில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த போது அப்பிரதேச மக்கள் கடற்படையினருக்குத் தெரியப்படுத்தி ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டனர். இதனை அடுத்தே கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-4)



மூளாய் மனித வளசனசமூக நிலைய முன்பள்ளிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தனது சொந்த நிதியிலிருந்து கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார். அதனை அவரது பிரதிநிதி முன்பள்ளி சிறார்களின் பெற்றோர் ஒருவரிடம் கையளிக்கிறார். அருகில் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி ஐங்கரனும் காணப்படுகிறார்.

## தீவிர அரசியலில் பிரியங்கா



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா காந்தி, தீவிர அரசியலில் ஈடுபடத் திட்டமிட் டுள்ளதாகவும், எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் தனது தாய் சோனியா காந்தியின் ரேபரேலி தொகுதியில் போட்டியிடப் போவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து முறையான அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. எனினும், உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ரேபரேலி தொகுதி மக்களுடன் பிரியங்கா எப்போதும் தொடர்பில் உள்ளார் என்றும், இதில் புதிதாக ஒன்றும் சொல்வதற்கில்லை என்றும் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

ரேபரேலி தொகுதி காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்களையும், மக்களையும் ஒவ்வொரு புதன்கிழமையும் சந்திக்க பிரியங்கா திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற உத்தரப் பிரதேச சட்டப் பேரவைத் தேர்தலின்போது, ரேபரேலி தொகுதியிலும், சகோதரரின் அமேதி தொகுதியிலும் பிரியங்கா தேர்தல் பிரசாரம் மேற்கொண்டதையும் காங்கிரஸார் மேற்கோள் காட்டினர்.


எனினும், இந்திரா காந்தியைப் போன்ற தோற்றம் கொண்ட பிரியங்கா நாடு முழுவதும் தீவிர அரசியலில் ஈடுபட்டால், கட்சியின் பலம் மேலும் அதிகரிக்கும் என காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு பிரிவினர் கருத்து தெரிவித்துள்ளனர்.


இதுகுறித்து காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ரஷீத் ஆல்வி கூறுகையில், 'பிரியங்கா அரசியலுக்கு வருவது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தாய் சோனியா காந்தி மற்றும் சகோதரர் ராகுலின் தொகுதிகளில் பிரியங்கா சுற்றுப் பயணம் மேற்கொள்வது வழக்கமானதுதான்' என்றார். (வ)

## இந்திய துணை ஜனாதிபதித் தேர்தல் இன்று

டில்லி, ஓக7

இந்திய துணை ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. நாடாளுமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் மொத்தம் 790 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வாக்குப்பதிவு முடிந்ததும் உடனடியாகவே இன்று வாக்குகள் எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்படும்.





துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரியின் பதவிக்காலம் எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதைத் தொடர்ந்து நாட்டின் அடுத்த துணை ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அட்டவணையை கடந்த மாதம் 6 ஆம் திகதி தலைமை தேர்தல் ஆணையகம் முறைப்படி வெளியிட்டது. இந்தத் தேர்தலில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரியே மீண்டும் நிறுத் தப்பட்டுள்ளார்.

அவரை எதிர்த்து பா.ஜ. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் முன்னாள் நிதியமைச்சர் ஜஸ்வந்த் சிங் போட்டியிடுகிறார்.

முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளன.

மக்களவை உறுப்பினர்கள் 543 பேர், மாநிலங்களவை உறுப்பினர்கள் 233 பேர் மற்றும் இரு அவைகளின் நியமன உறுப்பினர்கள் 14 பேர் என மொத்தம் 790 பேர் வாக்களிக்கவுள்ளனர். (வ)

# இந்திய கடற்படைக்கு அமெ. போர் விமானம்

### நவீன ராடார்கள், ஏவுகணைகளுடன் நீர்மூழ்கிகளைத் தாக்கும் சக்தி கொண்டது







இந்திய கடற்படைக்காக அமெரிக்காவின் போயிங் நிறுவனம் இரண்டாவது அதிநவீன பி8-1 ரக போர் விமானத்தைத் தயாரித்துள்ளது.

இந்தியாவின் கடலோரப் பகுதி 7,500 கிலோ மீற்றர் நீளத்துக்கு விரிந்து பரந்துள்ளது. இதைப் பாதுகாக்கவும், கண்காணிப்புப் பணிகளை மேற் கொள்ளவும் இந்தியக் கடற்படைக்கு அதி நவீன போர் விமானங்கள் தேவைப்படுகின்றன.

எனவே அமெரிக்கக் கடற்படையில் உள்ள பி8-ஏ போன்ற 8 அதிநவீன போர் விமானங்களைத் தயாரித்து வழங்கும்படி அந்த நாட்டைச் சேர்ந்த போயிங் நிறுவனத்துடன் இந்தியா 2009 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்து கொண்டது.

ரூ.11 ஆயிரம் கோடி மதிப்பிலான இந்த விமானங்களைப் பெறுவதன் மூலம் இந்தியப் பெருங்கடல் உள்ளிட்ட கடற்பகுதிகளில் துல்லியமான முறையில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள முடியும்.

அதன்படி, முதலாவது பி8-1 ரக போர் விமானத்தை போயிங் நிறுவனம் ஏற்கனவே தயாரித்து, ஒத்திகையும் செய்து முடித்துள்ளது.

தற்போது இதே ரகத்தைச் சேர்ந்த இரண்டாவது விமானத்தை அந்த நிறுவனம் தயாரித்துள்ளது. அமெரிக்கக் கடற்படையில் உள்ளது போன்ற இவ்வகை விமானத்தை வாங்கும் முதல் வெளிநாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் இந்தியக் கொடியும், அரக்கோணத்தில் அமைந்துள்ள ஐ.என்.எஸ்.ராஜாளி கடற்படை விமான தளத்தின் சின்னமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

இந்த விமானம் விரைவில் சோதிக்கப்பட்டு, வெள்ளோட்டம் விடப்படவுள்ளது. மூன்றாவது விமானமும் தயாரிக்கப்பட்டு சோதித்துப் பார்க்கப்பட்ட பின், முதல் கட்டமாக அவை அடுத்த ஆண்டில் இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளன.

எதிரி நாட்டு நீர்மூழ்கிகளை அழிக்கும் வசதியுடைய இந்த விமானங்களில் அதி நவீன ராடார்கள், ஏவுகணைகள், சக்தி வாய்ந்த குண்டுகள் ஆகியவற்றை இந்திய விமானப்படை தயார் நிலையில் வைத்திருக்கும்.

இது தவிர உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட உளவுத் தகவல் சேகரிப்புக் கருவிகளும் அதில் பொருத்தப்படும். இந்த விமானத்தில் 9 பேர் பயணிக்க முடியும். (வ)

## விஜயகாந் மீது தமிழக அரசு அவதூறு வழக்கு



சென்னை, ஓக7

தமிழக அரசு மற்றும் முதலமைச்சர் ஜெயலலிதா குறித்தும் அவதூறாகப் பேசியதாக தே.மு.தி.க. கட்சித் தலைவர் விஜயகாந்த் மீது தமிழக அரசு அவதூறு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்த மனுவில், கடந்த முதலாம் திகதி தமிழக அரசையும், முதலமைச்சரையும் அவதூறாகப் பேசி அறிக்கை வெளியிட்டதாக விஜயகாந்த் மீது முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வர உள்ளது. (வ)

## தெலுங்கானா போராட்டம் இனி எகிப்து பாணியில்

ஐதராபாத், ஓக 7

தெலுங்கானா தனி மாநிலம் அமைப்பது குறித்த விடயத்தில், மத்திய அரசு மௌனம் காப்பதால், அண்மையில் எகிப்தில் நடைபெற்ற போராட்டத்தைப்போல், தெலுங்கானா போராட்டத்தை நடத்த, போராட்டக் குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து, தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கக் கோரி, தெலுங் கானா போராட்டக் குழுவினர், நீண்டகாலமாக போராட்டம் நடத்தி வருகின்றனர். மத்திய அரசு, இது குறித்து எந்த உறுதியான முடிவையும் தெரிவிக்காமல் இழுத்தடித்து வருகிறது. இதனால், அதிருப்தி அடைந்துள்ள தெலுங்கானா ஆதரவாளர்கள், போராட்டத்தைத் தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளனர்.

இதற்கு முன்னர் நடந்த போராட்டங்களைப் போல் அல்லாமல், வித்தியாசமான முறையில் போராட்டத்தை நடத்துவது என்றும் முடிவு செய்துள்ளனர். குறிப்பாக, அண்மையில் எகிப்தில், தாஹிர் சதுக்கத்தில் நடந்த போராட்டத்தைப் போன்ற, முற்றுகைப் போராட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளனர். எதிர்வரும் செப்ரெம்பர் 30 இல், இந்தப் போராட்டத்தை ஆரம்பிப்பது என்றும், போராட்டத்தின் போது, லட்சக்கணக்கான மக்களைத் திரட்டி, ஹைதராபாத்தை முற்று கையிடுவது என்றும் முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து தெலுங்கானா கூட்டு போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் கோதண்டராம் தெரிவித்ததாவது:-

எகிப்தில் நடைபெற்றதைப் போன்ற முற்றுகைப் போராட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளோம். எகிப்தில், இந்தப் போராட்டம் எப்படி நடத்தப்பட்டது என்பது குறித்து அறிந்து கொள்வதற்காக, எங்கள் குழுவைச் சேர்ந்த சிலர், விரைவில் எகிப்து செல்லவுள்ளனர். அங்குள்ளவர்களிடம் இதுகுறித்து விரிவான ஆலோசனை நடத்தி, அவர்கள் அளிக்கும் தகவல்களின் அடிப் படையில் போராட்டம் நடத்தப்படும். போராட்டத்துக்காக மக்களைத் திரட்டுவதற்காக, 'சலோ ஹைதராபாத்' என்ற பெயரில், ஒரு குழுவை அமைக்கவும் முடிவு செய்துள்ளோம்-என்றார்.(வ)

## ஹசாரே குழு கலைப்பு

டில்லி, ஓக7

வலுவான லோக்பால் கோரி போராட்டம் நடத்தி வந்த அன்னா ஹசாரே குழுவைக் கலைப்பதாக அறிவித்துள்ளார். போராட்டம் நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுவின் வேலை முடிந்து விட்டதாகவும், மேலும் தமக்கு எந்தவித அரசியல் கட்சி ஆரம்பிக்கும் எண்ணமும் இல்லை என்றும் ஹஸாரே தெரிவித்துள்ளார்.

அன்னா ஹஸாரேயின் இந்த திடீர் முடிவால் குழு உறுப்பினர்களான கொஜ்ரிவால், கிரண்பேடி உள்ளிட்டோர் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## ஹரியானா மாநில உள்துறை இணை அமைச்சர் ராஜினாமா

ஹரியானா மாநிலத்தின் உள்துறை இணை அமைச்சர் கோபால் கந்தா நேற்று முன்தினம் பதவி விலகினார்.

விமானப்பணிப்பெண்ணை தற் கொலைக்குத் தூண்டிய முறைப்பாட்டில் சிக்கியதால் அவர் பதவி விலகினார் என்று தெரிவிக்கப்படுகிறது.



ஹரியானா மாநிலத்தின் உள்துறை இணை அமைச்சர் கோபால் கந்தா. இவர் எம். டி. எல். ஆர். விமான நிறுவன அதிபர் என்றும், இந்த விமான நிறுவனத்தில், விமானப் பணிப் பெண்ணாக இருந்த தீபிகா சர்மா டில்லியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்றும் கூறப்படுகிறது. தற்கொலை செய்து கொண்ட தீபிகா தன்னை தற்கொலைக்குத் தூண்டியவர் அமைச்சர் கோபால் கந்தா தான் என்றும் கடிதம் எழுதிக் வைத்துவிட்டு தூக்கிட்டுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கடிதத்தின் பேரில், அமைச்சர் கோபால் கந்தா மீது டில்லி பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள் ளனர் என்றும் இதன் காரணமாகவே அமைச்சர் பதவி விலகியிருக்கிறார் என்றும் தெரிய வருகிறது. (வ)

## அஸாம் கலவரம்: சாவு எண்ணிக்கை 61 ஆகியது


அஸாமில் 10 தினங்களுக்குப் பின்னர் மீண்டும் கலவரம் வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர். இதனால் அஸாம் கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளது.

சிராங் மாவட்டத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 3 சடலங்களும் கோக்ரஜ்ஹார் மாவட்டத்தில் 2 சடலங்களும் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவித்துள்ள பொலிஸார், ஒருவரது நிலை பற்றித் தெரியவில்லை என்று கூறியுள்ளனர்.

இந்தநிலையில், கொல்லப்பட்ட 5 பேரும் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாமில் இருந்து எந்தவித பாதுகாப்பும் இன்றி வெளியேறிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கோக்ரஜ்ஹார் மாவட்டத்தில் கடந்த 10 நாள்களுக்கு முன்னர் போடோ இனத்தவருக்கும், சிறுபான்மையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் பெரும் கலவரமாக வெடித்தது. இதில் 56 பேர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்கள், படிப்படியாக சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கினர்.

இதற்கிடையில், முழுமையாக அமைதி திரும்பு முன்னர் அவர்கள் வீடு திரும்பியதால், மீண்டும் தாக்குதலுக்கு உள்ளாகினர். இதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் இரண்டு மகன்கள் உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர். வன்முறை மூண்ட பகுதிகளுக்கு கூடுதல் பொலிஸாரும், துணை இராணுவப் படையினரும் விரைந்துள்ளனர். (வ)

## செவ்வாயில் தரையிறங்கியது கியூரியோசிட்டி



செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வு செய்ய நாசா அனுப்பிய கியூரியோசிட்டி என்ற விண்கலம் இலங்கை நேரப்படி நேற்றுக் காலை சரியாக 11 மணியளவில் செவ்வாயில் கவனமாகத் தரையிறங்கியது.

நாசா விஞ்ஞானிகள் இங்கிருந்து அதன் தரையிறக்கப் பணிகளைக் கண்காணித்துக் கொண்டே வந்தனர். எந்த வித பிரச்சினையும் இல்லாமல் செவ்வாய்க் கிரகத்தை அடைந்த கியூரியாசிட்டி 900 கிலோகிராம் எடையுள்ள ஆய்வுக் கலத்தை தாங்கிச் சென்றுள்ள கியூரியோசிட்டி விண்கலம் செவ்வாய் கிரகத்தில் தான் எடுத்த முதல் புகைப்படத்தையும் பூமிக்கு அனுப்பியுள்ளது.


பூமியில் இருந்து கிளம்பிய கியூரியோசிட்டி விண்கலம் சுமார் 567 மில்லியன் கிலோமீற்றர் பயணம் செய்து செவ்வாய்க் கிரகத்தை அடைந்துள்ளது. அங்கு 2 ஆண்டு காலம் இருந்து ஆய்வுப் பணியில் ஈடுபட உள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் விண்கலம் திட்டமிட்டபடி தரையிறங்கியதைத் தொடர்ந்து நாசா விஞ்ஞானிகள், கர கோஷம் எழுப்பியும், ஒருவரை ஒருவர் கட்டித்தழு வியும் தங்களது சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

# 115 குர்திஷ் போராளிகள் சாவு

## துருக்கியின் எல்லைப் பகுதியில் பதற்றம்

ஹக்காரி மாகாணத்தின் ஜிய்சிமிலி கிராமத்தில் ராணுவத்தினருடன் நடந்த தாக்குதலில் 115 குர்திஷ் போராளிகள் உயிரிழந்தனர் என துருக்கி உள்துறை அமைச்சர் கூறினார்.



அங்காரா, ஓக 7

துருக்கியில், ராணுவத்தினர் கடந்த இரு வாரங்களாக நடத்திய தாக்குதலில் 115 குர்திஷ் இனத்தவர்கள் உயிரிழந்தனர் என அந்நாட்டு அரச ஊடகங்கள் தெரிவித்திருகின்றன. துருக்கியில், குர்திஷ் இனத்தவர்கள் அரசுக்கெதிராக அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடந்த தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர்.

துருக்கியின் எல்லைப் பகுதியான ஹக்காரி மாகாணத்தில், குர்திஷ் இனத்தவரின் முக்கிய தலைவர், இராணுவத்தினரால் கடந்த 3 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் கோபமடைந்த குர்திஷ் போராளிகள் அரசுக்கெதிராகத் தாக்குதலில் ஈடுபட்டனர். இதனால் ஹக்காரி மாகாணத்தின் ஜிய்சிமிலி கிராமத்தில் ராணுவத்தினருடன் நடந்த தாக்குதலில் 115 குர்திஷ் போராளிகள் உயிரிழந்தனர் எனத் துருக்கி உள்துறை அமைச்சர் கூறினார்.

துருக்கியின் மொத்தச் சனத் தொகையில், 20 சதவீதத்தினர் குர்திஷ் இனத்தவர் ஆவர். இவர்கள் ஈராக்கை பூர்வீகமாகக் கொண்டவர்கள். எனினும் துருக்கி-ஈராக் எல்லையில் 7.5 கோடி பேர் சிறுபான்மையினராக வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தூக்குவதற்கு முடிகிறது.... ஆனால்....



யுனெஸ்கோவால் உலகப் பாரம்பரிய நகராகத் தெரிவு செய்யப்பட்ட அலெப்போவில் சிரிய இராணுவத்துக்கும் போராளிகளுக்கும் இடையே தீவிர தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. அந்த நகரில் போராளியான தந்தையின் துப்பாக்கியைத் தூக்கிப் பார்க்கும் மகன்.

## எகிப்து–இஸ்ரேல் எல்லையில் மோதல்

எகிப்து-இஸ்ரேல் எல்லையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 15 எகிப்துப் பொலிஸார் உயிரிழந்தனர். எகிப்து-இஸ்ரேல் எல்லையின் வடக்கு சினாய் சோதனைச்சாவடியில் , தீவிரவாதிகள் சிலர் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இரு தரப்பிலும் துப்பாக்கிச்சண்டை நடந்தது. இதில் 15 எகிப்துப் பொலிஸார் கொல்லப்பட்டனர் என பி.பி.சி. செய்திச் சேவைத் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேலைச் சேர்ந்த ஒரு தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றிருக்கின்றது என எகிப்து குற்றஞ்சாட்டியுள்ளது. இதைத்தொடர்ந்து இஸ்ரேலின் காசா, ரப்பா ஆகிய நகரங்களின் எல்லைப்பகுதிகள் மூடப்பட்டுள்ளன.

## மதத் தலத்தினுள் நுழைந்தவர் சரமாரியாகச் துப்பாக்கிச் சூடு

### அமெரிக்காவில் 7 பேர் சாவு; 25 பேர் காயம்



அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள ஒரு குருத்வாராவில் இனந் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 7 பேர் உயிரிழந்தனர். 25 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தியாவிலிருந்து சென்றுள்ள சீக்கிய மதப் போதகர் ஒருவர் மில்வாக்கி அருகே உள்ள ஓக் கிரீக் நகரில் உள்ள குருத்வாராவில் கூடியிருந்த 400இற்கும் மேற்பட்ட பக்தர்கள் மத்தியில் நேற்று முன்தினம் உரையாற்றிக் கொண்டிருந்தார்.அப்போது இனந்தெரியாத நபர்கள் சிலர் திடீரென்று துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று குருத்வாராவை சுற்றி வளைத்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். துப்பாக்கிச் சூட்டில் இதுவரை 7 பேர் உயிரிழந்தனர். படுகாயமடைந்த 25இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2 தீவிரவாதிகள் குருத்வாராவுக்குள் துப்பாக்கியுடன் இருப்பதாகக் கூறப்படுகிறது. சுமார் 12 குழந்தைகள் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இந்தியத் தூதரகம், தாங்கள் இந்த சம்பவத்தால் அதிர்ச்சி அடைந்திருப்பதாகவும், தேசிய பாதுகாப்புச் சபையுடன் இது குறித்துப் பேசி வருவதாகவும் கூறியுள்ளது.

## அங்கோலாவில் 23 கால்பந்தாட்ட ரசிகர்கள் இறப்பு

லுண்டா, ஓக 7

அங்கோலாவில் ஏற்பட்ட பஸ் விபத்தில் அந்த நாட்டு கால்பந்தாட்ட ரசிகர்கள் 23 பேர் உயிரிழந்தனர். 29 பேர் காயமடைந்தனர். அங்கோலாவின் கூவான்சாநொர்ட் மாகாணத்தில் கால்பந்துக் கழகம் சார்பில் கால்பந்துப் போட்டிகள் நேற்றுமுன் தினம் நடந்தன.இந்தப் போட்டியைப் பார்த்து விட்டு, 50-க்கும் மேற்பட்டோர் பஸ் ஒன்றில் வந்து கொண்டிருந்தனர். இந்தப் பஸ் லுண்டாவின் லிபோலோ நகரில் வந்து கொண்டிருந்த போது திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானது. இதில் 23 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 29 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கூவான்சாநொர்ட் மாகாண அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அங்கோலா ஜனாதிபதி ஜோஸ் ஈட்வார்டோ சான்டோஸ் இரங்கல் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேலில் நொருக்குத் தீனிகளுக்கும் வரி

இஸ்ரேலில் அதிகூடிய உடல் எடை கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், நொறுக்குத் தீனிகளுக்கு வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

யூத நாடான இஸ்ரேலில், வயது வந்தோரில் 37 சதவீதம் பேர் உடல்பருமன் அதிகரித்தவர்களாக இருக்கின்றனர். 15 சதவீதமானோர் பரம்பரையாகவே பருமன் கூடியவர்களாக உள்ளனர். இளைஞர்களில் 14 சதவீதமானோர் உடல் பருமனுடன் காணப்படுகின்றனர். ஏழு சதவீதமானோர் உடல் எடை அதிகமாக உள்ளவர்களாக உள்ளனர். உடல் எடை கூடியவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைக்கான மருந்துக்காக ஒவ்வொரு ஆண்டும் 8 ஆயிரம் கோடி ரூபா வரை செலவிடப்படுகிறது. உடல் எடை மற்றும் கொழுப்பை அதிகரிக்கும் உணவுகளுக்குக் கணிசமான வரி விதிக்கவும், சுகாதாரமான உணவு பொருள்களுக்கு மானியம் அளிக்கவும் இஸ்ரேலிய சுகாதாரத்துறை திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக சமீபத்தில் ஒரு கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப் பட்டது. எந்தெந்த உணவுப் பொருள்கள் உடல் நலனைக் கெடுக்கின்றன என ஆராயப்பட்டதில் குளிர் பானங்கள் மற்றும் சிப்ஸ் மற்றும் வறுவல் செய்த பொருள்கள் உடல் நலனுக்கு எதிராக இருப்பது தெரிய வந்தது. அதையடுத்தே இந்தப் பொருள்களுக்கு வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## மியன்மார் அகதிகளுக்கான மருத்துவ உதவி நிறுத்தம்

யங்கூன் , ஓக 7

மியன்மாரில், ரகின் மாகாணத்தில் ஏற்பட்ட கலவரத்தால், தங்கள் நாட்டில் தஞ்சம் அடைந்துள்ள அகதிகளுக்கு மருத்துவ உதவிகளை நிறுத்தும் படி வங்கதேச அரசு உத்தரவிட்டுள்ளது.



மியன்மாரில், வங்கதேச எல்லையை ஒட்டி அமைந்துள்ள ரகின் மாகாணத்தில், கடந்த ஜூன் மாதம் முஸ்லிம்களுக்கும், புத்த மதத்தினருக்கும் இடையே கலவரம் மூண்டது. ரகின் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில், வங்கதேசத்திலிருந்து குடிபெயர்ந்த, 8 லட்சம் முஸ்லிம்கள் வசிக்கின்றனர். இவர்கள், மியன்மாரில் குடியுரிமை கேட்டுப் போராடி வருகின்றனர். சட்ட விரோதமாக குடிபெயர்ந்தவர்களுக்கு, குடியுரிமை அளிக்க, மியன்மார் அரசு மறுத்து விட்டது. இதற்கிடையே, கடந்த ஜூன் மாதம் முஸ்லிம்களின் குடிசைகளைத் தீ வைத்துக் கொளுத்தி விட்டதாகக் கூறி, பெரிய அளவில் கலவரம் மூண்டது. இது வரை 50 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, மவுங்தா பகுதியில், அவசர நிலை அறிவிக்கப்பட்டது. பாதுகாப்புக் கருதி, ஏராளமான முஸ்லிம்கள், வங்கதேசத்துக்குள் தஞ்சம் அடைந்து வருகின்றனர். அகதிகள் வந்த வண்ணம் உள்ளதால் அவர்களை எல்லையோர காவல் படையினர் விரட்டியடித்து வருகின்றனர். வங்கதேசத்தின் காக்ஸ்பஜார் பகுதியில் ஏராளமான மியன்மார் அகதிகள் உள்ளனர். இவர்களுக்கு சர்வதேசத் தொண்டு அமைப்புகள் மருத்துவ உதவி, கல்வி உதவி போன்றவற்றை அளித்து வருகின்றன.

காக்ஸ்பஜார் பகுதியில் ஒரு லட்சம் அகதிகளுக்கு மருத்துவ உதவி அளிக்கும் மூன்று சர்வதேச நிறுவனங்களை, இந்த உதவியை நிறுத்திக் கொள்ளும் படி வங்கதேச அரசு உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து இந்தத் தொண்டு நிறுவனங்கள்தங்கள்சேவையை நிறுத்தி வைத்துள்ளன. வங்கதேச அரசின் இந்தச்செயலுக்கு சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

# பலஸ்தீனம் தனிநாடாகும்

## ஐ.நா. அங்கீகாரம் கிடைக்கும் என்கிறது இஸ்ரேல்



பலஸ்தீனத்திடம் இருந்து கைப்பற்றப்பட்டு, யூதக் குடியேற்றங்கள் நிர்மாணிக் கப்பட்டுள்ள மேற்குக் கரைப் பகுதியை பலஸ்தீனம் உரிமை கோரி வருகின்றது.

தனிநாடாக அங்கீகரிக்குமாறு பலஸ்தீனம் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகாரம் கிடைக்கலாம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

எனினும் அமைதி மற்றும் நாடு என்ற அந்தஸ்து போன்றவற்றில் பலஸ்தீனுடன் தமது நாடு நெருக்கமாகச் செயற்படமாட்டாதென ஐ.நாவிற்கான இஸ்ரேல் தூதுவர் கூறியுள்ளார்.

பலஸ்தீனத்திடம் இருந்து கைப்பற்றப்பட்டு, யூதக் குடியேற்றங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேற்குக்கரைப் பகுதியை பலஸ்தீனம் உரிமைகோரி வருகின்றது.

அத்துடன் இந்தப் பகுதிகளை இணைத்து தமது நாட்டை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்தீனம் பிரேரணையை முன்வைத்துள்ளது.

மேற்குக் கரைப் பகுதியில் யூதக் குடியேற்றங்கள் நிர்மாணிப்பதை நிறுத்த வேண்டுமென பலஸ்தீனம் வலியுறுத்தி வரும் நிலையில் இரு தரப்பு சமாதானப் பேச்சு வார்த்தைகள் தடைப்பட்டுள்ளன.

# பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கு சிறை வாசம்

இஸ்லாமாபாத், ஓக.7

பாகிஸ்தான் இராணுவத்தின் மூத்த அதிகாரியான பிரிகேடியர் அலிகான் உட்பட சோகைல் அக்பர், ஜவாத் பஷர், இனயாத் அசீஷ், இப்திகார் ஆகியோர் ஹிஷ்ப்-உத்-தக்ரீர் என்ற தீவிரவாத அமைப்புடன் தொடர்பு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பாகிஸ்தான் நீதிமன்றத்தின் உத்தரவின்படி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த இந்தத் தீவிரவாத அமைப்புக்குப் பாகிஸ்தானில் தடை விதிக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகளுடன் இவர்கள் கொண்டிருந்த ரகசியத் தொடர்பு பின்லேடன் குறித்த வழக்கு விசாரணையின் போது தெரிய வந்தது. எனவே, கைது செய்யப்பட்ட 5 அதிகாரிகள் மீதும் இராணுவ நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் இராணுவ மூத்த அதிகாரி பிரிகேடியர் அலிகானுக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனையும், சோகைல் அக்பருக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனையும் விதித்தது.

மேலும், ஜவாத் பஷீருக்கு 2 ஆண்டுத் தண்டனையும், இனயாத் அசீஷ், இப்திகார் ஆகியோருக்குத் தலா 1 1/2 ஆண்டு தண்டனையும் விதித்து உத்தரவிட்டது.

# நேட்டோ வாகனங்கள்மீது மீண்டும் துப்பாக்கிச் சூடு



இஸ்லாமாபாத், ஓக.7

நேட்டோ படைகளுக்கான வாகனப் போக்குவரத்து, பாகிஸ்தானில் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமாகியது. இதன்போது இரண்டு வாகனங்கள் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியதில் அவை எரிந்து நாசமாயின.

ஆப்கானிஸ்தானில் நேட்டோ படைகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. இந்தப் படைகளுக்குத் தேவையான எரிபொருள்கள், பாகிஸ்தான் வழியாகக் கொண்டு செல்லப்படுகின்றன. கடந்த ஆண்டு நவம்பர் மாதம், நேட்டோ படைகள் தவறுதலாகத் தாக்குதல் நடத்தியதில், பாகிஸ்தானிய இராணுவத்தினர் 24 பேர் உயிரிழந்தனர். அமெரிக்கா மன்னிப்பு கேட்காத காரணத்தால், ஆப்கானிஸ்தானுக்கான பாதையைப் பாகிஸ்தான் மூடிவிட்டது.

அமெரிக்கா மன்னிப்புக் கேட்டதைத் தொடர்ந்து, நேட்டோ படைகளுக்கான எரிபொருள் வாகனங்கள் செல்ல பாகிஸ்தான் அனுமதியளித்தது. ஆப்கானிஸ்தானில் உஸ்பெகிஸ்தான் எல்லையையொட்டிய சமாங்கன் மாகாணத்தில் நேட்டோ வாகனங்கள் செல்லும் பாதையில் தலிபான்கள் கடந்த மாதம் 18ஆம் திகதி, தாக்குதல் நடத்தியதில் 23 லொறிகள் எரிந்து சாம்பலாகின.

கடந்த 24ஆம் திகதி பெஷாவரில் நேட்டோ படைகளுக்கான வாகனத்தைச் செலுத்திய ஓட்டுநர் சுட்டுக் கொல்லப்பட்டார். போதிய பாதுகாப்பு இல்லாத நிலையில், நேட்டோ வாகனப் போக்குவரத்து கடந்த இரண்டு வாரங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் தோர்காம் வழியாக நேற்று முன்தினம் தொடக்கம் மீண்டும் வாகனப் போக்குவரத்து ஆரம்பமாகியுள்ளது.

இதற்கிடையே பலுசிஸ்தான் மாகாணத்தில் குஸ்தார் மாவட்டம் நாச் பகுதியில் இனந் தெரியாத நபர்கள் இரண்டு நேட்டோ வாகனங்கள் மீது துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இதில் இரண்டு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்து கருகின. எனினும் இந்தச் சம்பவத்தில் யாரும் காயமடையவில்லை.

# ரம்ழான் நோன்பை குழப்புகிறது சீனா

பீஜிங், ஓக.7

ரம்ழான் நோன்பு மேற்கொள்வதற்கு சீன அரசு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்துகின்றது என உய்குர் முஸ்லிம்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சீனாவில் சின்ஜியாங் மாகாணத்தின் உய்குர் பகுதியில் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கின்றனர். இங்குள்ள சில முஸ்லிம்கள், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் தீவிரவாதப் பயிற்சி பெறுகின்றனர். 2009ஆம் ஆண்டு உய்குர் பகுதியில் முஸ்லிம்களுக்கும், சீனர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 200 பேர் உயிரிழந்தனர்.

சீன அரசுக்கு எதிராக உய்குர் பகுதி முஸ்லிம்கள் பிரிவினைவாத நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இதையடுத்து உய்குர் பகுதியில் உள்ள முஸ்லிம் மதப் பள்ளிகளை சீன அரசு கண்காணித்து வருகிறது.

ரம்ழான் நோன்பின் போது முஸ்லிம்கள் கூட்டமாகத் தங்கியிருக்கக் கூடாது. அவர்கள் ஒன்று கூடினால், சீன அரசுக்கு எதிரான சதி செயலில் ஈடுபடலாம் என்பதால், கூட்டாக நோன்பு இருப்பதை சீன அரசு தடை செய்துள்ளது. முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியிலும் கூட, ரம்ழான் காலத்தில் பகல்நேர உணவு சாலைகளைத் திறந்து வைக்கும் படி அரசு உத்தரவிட்டுள்ளது.

சீன அரசுத் துறைகளில் பணியாற்றும் முஸ்லிம்கள், அலுவலக நேரத்தில் நோன்பு மேற்கொள்ள மாட்டேன், என்ற உறுதிமொழியில் கையெழுத்திடும் படி வற்புறுத்தப்பட்டுள்ளனர். மீறி நோன்பு மேற் கொள்பவர்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் அளிக்கப் பட மாட்டா, என்ற அச்சுறுத்தல் உள்ளது.

இதே போல தனியார் துறை நிறுவனங்களிலும் பின்பற்றப்படுகிறது. முதியோர் இல்லங்களில் உள்ள முஸ்லிம்களுக்கு பகல் நேரத்தில் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

இதன் மூலம் அவர்களை ரம்ழான் நோன்பு மேற்கொள்வதைத் தடுக்கும் முயற்சியில் சீன அரசு ஈடுபட்டுள்ளது என உய்குர் பகுதியைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் தெரிவிக்கின்றனர்.


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

### சிறீசெந்தில்நாதன் அபினாஷ்




இன்று (07.08.2012) பிரான்சில் பிறந்தநாள் கொண்டாடும் சிறீசெந்தில்நாதன் அபினாஷ் கெருடாவில் கலட்டி முத்துமாரியம்மன் கிருபையால் சகல சௌபாக்கியங்களோடும் பல்லாண்டு வாழ வேண்டுமென்று அப்பா சிறீசெந்தில்நாதன், அம்மா சியாமளா, பாட்டா பாலபத்மநாதன் குருக்கள், பாட்டி பரிமளகாந்தி, அப்பம்மா கனகாம்பிகை, மாமா தயாபரன் ஆசிரியர், மாமி கலைவாணி, மாமா சண்முகதாஸ், மாமி வடிவாம்பிகை, மாமா தண்டபாணிதேசிகர், மாமி அமிர்தாம்பிகை, மாமி சண்முகப்பிரியா, சித்தப்பா சிவசண்முகநாதன், பா. நித்தியானந்தக் குருக்கள் செல்வமதி தம்பதியர், பா.ஞானானந்தகுருஏறாவூர். மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம்.

கெருடாவில்,
தொண்டமானாறு.

பாலபத்மநாதக் குருக்கள்
தம்பதியர்

(18711) (5-6-7)



## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

# நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே.021 222 6944

நல்லூர் பாம் சென்ரர் கனகபுரம் வீதி, கிளிநொச்சி. தொ.பே. 077 622 5944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை. தொ.பே. 077 899 6085

(21351)(5-6-7)



## சேவை நலன் பாராட்டு



திருமதி ஞானசவுந்தரி செல்வராசா
யா/அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை
(12 வருட சேவை) 07.08.2012

நிமிர்ந்த நடை நேரிய பார்வை
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
நாற்பத்து இரண்டு ஆண்டுகள்
நல்லாசிரியத் தொண்டாற்றி
அறுபது அகவைதனில் ஓய்வு பெறும்
ஞானசவுந்தரி எனும் நல்லாசிரியை
பல் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென
பிறந்த பொன்னாளாம் இந்நன்னாளில்
வாழ்த்துகின்றோம் வாழியவே!

யா/அளவெட்டி வடக்கு,
அ.மி.த.க.பாடசாலை. (சி/2131) (2-6-7)

ஆசிரியர்கள், மாணவர்கள்.



## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்திக்கும் கொட்டடிச் சந்திக்கும் இடையில் (60) அறுபது அடி நீளம் (15) பதினைந்து அடி அகலம் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0777283811

(21399) (2-6-7)



## ஆண் வேலையாள் தேவை

ஆண் வயோதிப நோயாளியை வீட்டில் தங்கியிருந்து பார்க்க ஆண் வேலையாள் தேவை.

தொடர்பு: 075 731 6139

(21398)(5-6-7)

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(15)

ஒரு விடயத்தைப் பற்றி நாம் எப்படிச் சிந்திக்கிறோம் என்பது தான் முக்கியம். நம்முடைய எண்ணங்களுக்கு ஏற்றபடியே சிந்திக்கின்ற விடயமும் பரிமாணத்தைப் பெறுகிறது. எண்ணங்களுக்கு இருக்கும் ஆற்றலை நம்மில் பலர் உணர்வதேயில்லை.

கடினமான விடயத்தைச் சுலபமானது என நீங்கள் எண்ணுகின்ற போது அது சுலபமாகி விடுகிறது. சுலபமான விடயத்தைக் கடினமானதென்று நினைத்தால் அது கடினமாகிவிடுகிறது.



பாம்பு என்று தாண்டவும் முடியவில்லை, பழுது என்று மிதிக்கவும் முடியவில்லை என ஒரு வாசகம் சொல்லுவார்கள். அதாவது கிடைக்கின்ற ஒரு பொருள் பாம்பா அல்லது பழுதா என நிச்சயிக்க முடியாத மன நிலையை இது குறிப்பிடுகிறது.

அதாவது எண்ணத்தில் அது பாம்பாகவும் தோன்றுகிறது, பழுதாகவும் தோன்றுகிறது. ஒன்று விஷமுடைய உயிருள்ள ஜந்துவா அல்லது சாதாரண குப்பையா என்கிற மயக்கத்தை ஏற்படுத்துவது எது என்று பார்த்தால், எண்ணம் என்பது தெளிவாகும்.

ஆகவே, எண்ணம் மாறுபட்ட மதிப்பீடுகளை ஏற்படுத்தக் கூடியது. அதனால் ஒரு காரியம் கஷ்டமானதா அல்லது சுலபமானதா என்பதை நமது எண்ணங்களே நிர்ணயிக்கின்றன. இதிலிருந்து தெரிவது என்ன? ஒரு காரியம் கஷ்டமாக இருப்பதும் சுலபமாக இருப்பதும், அந்தக் காரியத்திலே அல்ல. நம்முடைய எண்ணத்தில்தான் இருக்கிறது. இதை நாம் முதலில் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய எண்ணங்கள் தான் நம்மை உருவாக்குகின்றன. நம்முடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும், வெற்றிக்கும் தோல்விக்கும் நம்முடைய எண்ணங்களே காரணமாகின்றன.

கஷ்டங்களை வென்றுவிடலாம் என்று நாம் எண்ணுகின்றபோது, வெல்லுகின்ற ஆற்றல் நம்மிடம் முளைவிடத் தொடங்குகிறது. இந்த எண்ணம் ஏற்பட்டவுடன் வெல்லுவதற்கான வழிவகைகளும் தோன்ற ஆரம்பிக்கின்றன. எண்ணம் உறுதிபெறும் போது அது செயலாக மாற்றம் பெறுகிறது. செயல்கள் சாதனைகளாகின்றன. வெற்றி நம்மை நாடி வருகிறது.

இது ஏதோ வெறும் கற்பனை என்று எண்ண வேண்டாம். வெற்றி பெற்ற மனிதர்கள் அனைவரும் இப்படித்தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

மனிதர்களைப் படைத்த இறைவன், வேண்டும் போது அவன் சக்தியைப் பெறுவதற்கான ஒரு கருவூலத்தையும் மனிதனுக்குக் கொடுத்திருக்கிறான். இப்படி ஒரு கருவூலம் தங்களிடம் இருக்கிறது என்பதே பலருக்கும் தெரிவதில்லை. ஆனால் இதை அறிந்தவர்கள் அந்தக் கருவூலத்திலிருந்து வேண்டியபோது சக்தியைப் பெற்று சாதனைகளைப் படைக்கிறார்கள்.

பிரார்த்தனை என்று சொல்லுகிறோமே, அது உண்மையில் என்ன என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஒரு காரியம் நடக்க வேண்டுமென்றால் தெய்வத்திடம் வேண்டிக் கொள்கிறோம். தெய்வத்தை வேண்டும்போதும், பிரார்த்தனையில் ஈடுபடும்போதும் அந்தக் காரியம் நடக்கும் என்கிற நம்பிக்கையைப் பெறுகிறோம்.

இந்த நம்பிக்கைதான் நாம் பெற்றிருக்கும் கருவூலம். இந்தக் கருவூலத்திலிருந்து தேவையான போதெல்லாம் சக்தியை நம்மால் பெறமுடியும். எண்ணங்கள் வலிமை பெறுகின்றபோது இந்தச் சக்தி நமக்கு மிகுதியாகக் கிடைக்கின்றது.

எனக்கு நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் எப்போதுமே உற்சாகத்துடன் காணப்படுவார். அவரிடம் இந்தக் காரியத்தை செய்ய வேண்டுமே என்று சொன்னால், கொஞ்சமும் தயக்கமில்லாமல், உடனே முடித்துவிடலாம் என்பார். காரியம் எவ்வளவு கஷ்டமானதாக இருந்தாலும் அவர் இதே பதிலைத்தான் சொல்லுவார்.

எதையும் இவ்வளவு எளிமையாகப் பேசிவிடுகிறாரே என்று எனக்கு அவரிடத்தில் ஆச்சரியம் ஏற்படுவது உண்டு. அவர் ஏதோ பேச்சுக்காக மட்டும் அப்படிச் சொல்லுவதில்லை. மிகுந்த உறுதியுடனும், நம்பிக்கையுடனும் சொல்லுவார். அவர் சொல்லுவதைக் கேட்கின்றவர்களின் மனதிலும் நம்பிக்கை ஏற்படும்படியாகச் சொல்லுவார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த நண்பரைப் பற்றி நான் கொஞ்சம் விரிவாகச் சொல்லுவது அவசியமாகிறது. இளம் வயதில் படிப்பதற்காக பல கஷ்டங்களையும், தொல்லைகளையும் அனுபவித்தவர். ஆனாலும் நன்றாகப் படித்துக் கல்லூரிப் பட்டமும் பெற்றார்.

அதற்குப் பிறகு வேலை கிடைக்காமல் பல நாள் கஷ்டப்பட்டார். அதற்காக அவர் சோர்ந்து போய்விட வில்லை. பட்டதாரியான அவர் ஒரு சைக்கிள் கம்பெனியில் எடுபிடியாக வேலைக்குச் சேர்ந்தார். அந்தத் தொழிலின் நுணுக்கங்கள் அனைத்தையும் விரைவில் கற்றுக் கொண்டார். பிறகு வாடகைக்கு சைக்கிள் கொடுக்கும் கடையை அவரே தொடங்கினார். அப்போது அவரிடமிருந்தவை, மூன்று நான்கு சைக்கிள்கள் தான். அவையும் புதிய சைக்கிள்கள் அல்ல.

காலப்போக்கில் தொழில் வளர்ச்சியடைந்து ஒரு குறிப்பிட்ட கம்பெனியின் சைக்கிள்கள் விற்கும் ஏஜெண்டாக அவர் நியமிக்கப்பட்டார். இதுவே அவருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பமாயிற்று.

(தொடரும்)

-பி.சி.கணேசன்-

# சிறுவர் மீதான வன்முறையை கட்டுப்படுத்த தொண்டு நிறுவனங்கள் முன்வரவேண்டும்

## மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

**இயந்திரமயமான வாழ்க்கையில் எமது சமூகத்தில் வாசிப்புப் பழக்கம் மறைந்து கொண்டே போகின்றது. எனவே எமக்கான கலாசாரப் பண்பாடுகளுக்கு அமைவாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் .**

யாழ்ப்பாணம், ஓக.7

சிறுவர், பெண்கள் தொடர்பான வன்முறைச் சம்பவங்களைக் கட்டுபடுத்த வேண்டிய சூழ்நிலை யாழ். மாவட்டத்தில் உருவாகியுள்ளதால் சமூக தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் சமூக சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் வழிதவறிப்போதல், இளவயது கர்ப்பம் போன்ற காரணங்களால் பாதிப்படைந்தோர் பலர் யாழ். மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொண்டு உதவி கோரி நிற்பதை அவதானிக்க முடிந்துள்ளது என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

துளிர்கள் நிறுவனத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு விழாவும், பூமாலை சொந்தமென்ன, பந்தமென்ன இரு குறும்படங்களின் திரைப்பட வெளியீட்டு விழாவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக்கொடை நிறுவனத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே திருமதி ரூபினி வரதலிங்கம் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ் . மாவட்டத்தில் சிறுவர், பெண்கள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது. இது ஒரு சமூக சேவை என்பதால் சமூக சேவை மனப்பான்மை உடையவர்கள் தாமாக முன்வந்து சமூக சேவைகளை வழங்க வேண்டும். குறிப்பாக சமூக நிறுவனங்கள் இத்தகைய பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போதைய சூழலில் கடமைகள், பொறுப்புக்கள் அதிகரித்துக் கொண்டே செல்வதால் எமது குடும்பம், எமது உறவு என ஒரு சுற்றுவட்டத்தை அமைத்து சமூக சிந்தனை அற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனம் உண்டானால் இடமுண்டு என்பார்கள். காலமாற்றத்துக்கு ஏற்றால் போல சமூகத்தில் முக்கிய பிரச்சினையாக உள்நுழைந்துள்ள சிறுவர், பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும்.

இயந்திரமயமான வாழ்க்கையில் எமது சமூகத்தில் வாசிப்புப் பழக்கம் மறைந்து கொண்டே போகின்றது. எனவே எமக்கான கலாசாரப் பண்பாடுகளுக்கு அமைவாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் .

அரச மற்றும் அரச சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தற்கால சூழலில் இருக்கக் கூடிய பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கான நடவடிக்கைகளை மக்கள் எவ்வாறு செயற்படுத்த முடியும் என விழிப்புணர்வை உண்டாக்கி அதன்வழி பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான வழிகாட்டல் செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (எ-14)



யாழ்.மாவட்ட பணியாளர் நலனோம்பு கூட்டுறவுச் சங்கத்தின் அபிவிருத்திக்கான சீட்டிழுப்பை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் ஆரம்பித்து வைக்கின்றார். அருகில் கூட்டுறவாளர்கள். (ம-17)

# அரும்பாடுபடும் மாணவர்களே கல்வியில் முன்னேற முடியும்

## தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கருத்து

வடமராட்சி, ஓக.7

வாழ்வில் இலக்குகளை அடைவதற்கு ஒவ்வொரு மாணவனும் அரும்பாடுபட வேண்டும். அரும்பாடுபடும் முயற்சி இருந்தால் கல்விசார் நடவடிக்கைகளில் முன்னேற முடியும் என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.பிறேமகாந்தன் தெரிவித்தார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிறேமகாந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அதிபர் திருமதி செல்லமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிறேமகாந்தன் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் கல்வி கற்கும் போது பாடவிதானங்களில் சரியான பொறிமுறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சரியான பொறிமுறையும், விடாமுயற்சியும் இருப்பின் கல்வியில் முன்னேற்றத்தைக் காணமுடியும். தேர்ந்தெடுக்கப்படும் சரியான பொறிமுறையை விருப்புடன் கற்றால் சித்திகளைப் பெறமுடியும்.

மாணவர்களின் அடைவு மட்டத்தைக் கருத்தில் கொண்டு கல்வி அமைச்சின் வழிகாட்டலில் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும் புள்ளி விவரவியலில் கடந்த காலத்தில் வினாப் பத்திரத்தில் எவ்வாறு புள்ளி வழங்கப்படுகின்றது, அதில் எது இழக்கப்படுகின்றது என்ற முழுமையான அறிவித்தல் கொண்ட புத்தகங்கள் விற்பனைக்கு வந்துள்ளன.

அந்தப் புத்தகங்களை மாணவர்கள் பெற்று சிறந்த முறையில் பயன்படுத்தினால், நிச்சயமாக பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறமுடியும். தேசிய பெறுபேறுகளில் வெற்றித் தரத்தினை உயர்த்தி கல்வியில் சாதனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாணவர்கள் சகல துறைகளிலும் சோதனைகளை சாதனைகளாக நிலை நாட்ட வேண்டும் பரிசில் கிடைக்காத மாணவர்கள் மனவேதனைகளுக்கு ஆட்படாது மீண்டும் மீண்டும் முயற்சி செய்து கல்வியில் சாதனை படைக்க வேண்டும். தோல்விகளே வெற்றிகளின் படிக் கற்கள் என்பதை மனதில் வைத்து செயற்பட்டால் உயர் நிலையை அடைய முடியும் - என்றார். (எ-8)

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## எடுபடாத நிராகரிப்பு

சர்வதேச அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை என்று மீண்டும் மீண்டும் முழக்கமிட்ட இலங்கை அரசு தற்போது அந்த அழுத்தங்களை ஏற்றுச் செயற்பட ஆரம்பித்திருக்கிறது.

போர் முடிந்த பின்னர், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறும் உலக நாடுகள் வலியுறுத்தி வந்தன. அதேபோன்று போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்துமாறும் உலக நாடுகள் அரசுக்கு நெருக்குதல் கொடுத்தன.

2,000 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட எங்களுக்கு, என்ன செய்யவேண்டும் என்று எவரும் சொல்லித்தர வேண்டியதில்லை என்று ஆரம்பத்தில் இந்த அழுத்தங்களை அடியோடு நிராகரித்த அரசு, பின்னர் மெல்ல நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக் குழுவை, போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான குழுவாக நியமித்தது.

அதன் பின்னர் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துமாறு உலக நாடுகள் அழுத்தம் கொடுத்தன. அப்போதும் அரசு திமிறி எழுந்து, இலங்கை இறைமையுள்ள நாடு அதில் தலையிடுவதற்கு மற்றைய நாடுகளுக்கு உரிமை ஏதும் இல்லை என்று சுவப்பாடு போட்டது.

பரிந்துரைகளை எப்படிச் செயற்படுத்துவது, எவ்வாறு அவற்றைக் கையாள்வது என்பது குறித்து தமக்குத் தெரியும் என்று அரசு பெருங்குரலில் கத்தியது. ஆனால் உலக நாடுகள், குறிப்பாக மேற்கு நாடுகள் அதனைத் தமது காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவை மீண்டும் இலங்கை அரசு மீதான அழுத்தங்களைத் தொடர்ந்தன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் சொற்படுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது ஒரு தீர்மானத்தை ஜெனிவாவில் நிறைவேற்றின. அந்தத் தீர்மானமும் நல்லிணக்கத்தை நோக்கி அரசை உந்தித் தள்ளும் விதத்தில் அழுத்தம் கொடுத்தது.

இலங்கை அரசோ அதற்கும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. நாடு முழுவதும் போராட்டங்களை நடத்தியது. கையெழுத்துப் போராட்டங்கள் வடக்கு - கிழக்கை உள்ளடக்கி நடத்தப்பட்டன. அத்துடன் ஜெனிவாத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளபடி மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவிப்பிள்ளையின் அலுவலகத்தின் உதவிகள் மற்றும் ஆலோசனையையும் நிராகரித்தது. அத்துடன் அந்த அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இலங்கைக்கு வருவதற்கான அனுமதியையும் மறுத்தது.

இப்படி அழுத்தங்கள் எல்லாவற்றையும் தூக்கி எறிந்து, அவற்றை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று திமிறிய அரசு இப்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கான 'நடவடிக்கைத் திட்டம்' ஒன்றை அறிவித்துள்ளது மட்டுமன்றி, நவிப்பிள்ளையின் அதிகாரிகள் மூவர் அடுத்த மாதம் இலங்கை வருவதற்கும் அனுமதி கொடுத்துள்ளது.

ஆக, என்னதான் மறுத்தாலும் நிராகரித்தாலும் உலக நாடுகளின் அழுத்தத்தை முற்றுமுழுதாக நிராகரித்துக் கொண்டு இலங்கை போன்ற சின்ன நாடுகளால் ஒன்றும் செய்ய முடியாது என்பதே யதார்த்தமாகும்.

''ஊர் ஓடின் ஒத்து ஓடு'' என்பது முதுமொழி. ஊரே ஓடும்போது ஒத்து ஓடவேண்டி இருப்பின் உலகம் ஓடும்போது எப்படி தனித்து ஓட முடியும்?

# கைநழுவிப் போன இலங்கையின் இரட்சகர்

■ தமிழில் : வியெஸ்ரி

மூலம்: மவ்பிம

இந்திய அரசியல் அரங்கில் முன்னனி அரசியல் தலைவராகத் திகழ்ந்த பிரணாப் முகர்ஜி, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரட்சகராகக் கருதப்பட்டவர். இந்திய அரசியலில் இருந்து கொண்டே ஜனாதிபதி மஹிந்தவுக்கும் அவரது அரசுக்கும் முகர்ஜி வழங்கிய உதவி ஒத்தாசை சாதாரணமான ஒன்றல்ல. மஹிந்த தலைமையிலான இன்றைய அரசு அரசியல் ரீதியான சிரமங்களை எதிர்நோக்கிய அநேக சந்தர்ப்பங்களில், அவற்றில் தலையிட்டு மஹிந்த அரசைக் காப்பற்றியவர் இந்தப் பிரணாப் முகர்ஜி. மஹிந்தவின் அரசுக்கும், பிரணாப் முகர்ஜிக்குமான இந்த நெருங்கிய பிணைப்பின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் ஆச்சரியம் அளிக்கும் பல தகவல்கள் கிட்டும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை மஹிந்தவின் அரசு ஆரம்பித்த வேளை அதற்கு இந்தியாவின் பி.ஆர் நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ள ஆரம்பித்தது. போர் காரணமாக வீழ்ச்சி கண்ட இலங்கையின் நற்பெயரை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கிலான முயற்சியே அது. அந்தவேளை குறிப்பிட்ட பி.ஆர் நிறுவனத்தின் தலைவராகச் செயற்பட்டவர். 'தாஸ்' என அழைக்கப்பட்ட ஒரு பெண்மணி ஆவார்.

குறிப்பிட்ட 'தாஸ்' என்ற அந்தப் பெண்மணிக்கும் பிரணாப் முகர்ஜிக்குமிடையே அரசியல் ரீதியில் தொடர்பு நிலவி வந்தது. விரும்பிய எந்த வேளையிலும் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துக் கலந்துரையாட அந்தப் பெண்மணி வாய்ப்புப் பெற்றிருந்தார். அரசியல் ரீதியில் பிரணாப் முகர்ஜி மேற்கொள்ளும் தீர்மானங்கள் குறித்து அழுத்தம் மேற்கொள்ள இலங்கை அரசு 'தாஸ்' என்ற அந்தப் பெண்மணியின் உதவியைப் பெற்றுக் கொண்டது. இலங்கையின் அரசியல் நிலையில் கடும் சிக்கல்கள் நிலவிய வேளைகளில், இந்திய அரசியலில் முக்கிய பாத்திரமேற்றுச் செயற்பட்ட பிரணாப் முகர்ஜியின் ஆதரவை ஈட்ட இலங்கை அரசு 'தாஸ்' என்ற அந்தப் பெண்மணியூடாக முகர்ஜியுடன் அரசியல் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டது.

இலங்கை அரசு அந்தவிதம் பிரணாப் முகர்ஜியுடன் நெருக்கமான அரசியல் தொடர்புகளை பேணியமை, அந்த வேளையில் இந்திய ராஜதந்திர மட்டத்தில் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு ஆரம்பித்த போர் தொடர்பாக இந்திய அரசு, இலங்கை அரசுக்குச் சார்பாக மென்போக்கைக் கைக்கொள்வதாக விமர்சனங்கள் வெளிவந்தன. அந்த விடயத்தில் இந்தியா இறுக்கமான நிலைப்பாட்டைக் கடைக்கொள்ள வேண்டுமெனவும், இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகமூடாக இலங்கை அரசு மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டுமெனவும் விமர்சனங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவின் அந்த மென்போக்கு நிலைப்பாடு பின்னர் இந்தியாவுக்குக் கடும் சிக்கலை ஏற்படுத்துமெனவும் ஒரு தரப்பினர் குற்றம் சாட்டினர்.

இலங்கை அரச படைகள், பிரபாகரனைப் போரில் முற்றாகத் தோற்கடிக்கும் ஒரு நிலை உருவான வேளையில் தமிழ் நாட்டின் அரசியற் தலைவர்கள் போரை நிறுத்த வழிவகை செய்யுமாறு இந்திய மத்திய அரசுக்கு அழுத்தத்தின் மேல் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தனர்.

அந்தவேளை தமிழ் நாட்டு முதலமைச்சராக இருந்த கருணாநிதி, போர் நிறுத்தமொன்றை ஏற்படுத்தி எப்படியாவது பிரபாகரனைக் காப்பாற்றுமாறு வலியுறுத்தியதுடன், தவறினால் மத்திய அரசுக்கான தமது கட்சியின் ஆதரவை விலக்கிக் கொள்ளப்போவதாக மத்திய அரசை மிரட்ட ஆரம்பித்தார். கருணாநிதியின் அத்தகைய மிரட்டல், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்குப் போன்றே ஜனாதிபதி மஹிந்தவையும் அசௌகரியத்துக்கு உள்ளாக வைத்தது.

அந்த வேளையிலும், மஹிந்தவின் இரட்சகராகச் செயற்பட்டவர் இந்த பிரணாப் முகர்ஜியே. உடனடியாகவே தமிழ் நாட்டுக்குச் சென்ற அவர், கொதிப்புடனிருந்த கருணாநிதியைச் சாந்தப்படுத்துவதில் வெற்றி கண்டார். தமது ராஜதந்திர அணுகுமுறையால், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு நிலைப்பாட்டிலிருந்த கருணாநிதியை மெல்ல மெல்ல அந்த நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்க வைப்பதில் வெற்றியும் கண்டார்.

கருணாநிதியின் தீவிர விடுதலைப் புலிகள் ஆதரவு நிலையிலிருந்து அவரை மாற்றியதன் மூலம் பிரணாப் முகர்ஜி, இந்திய இலங்கை அரசுகள் எதிர்நோக்க நேர்ந்த சிக்கலின் முடிச்சை அவிழ்த்து வைத்து, இரு நாட்டு அரசுகளும் ஆசுவாசப்பட வழி ஏற்படுத்தி வைத்தார். அந்தச் சம்பவத்தின் பின்னர், மஹிந்தவுக்கும் தெரியும் விதத்திலேயே அந்த விடயத்தில் தலையிட்டு கருணாநிதியின் வாயை முகர்ஜி அடைத்தார் என்றொரு கதை இந்திய ராஜதந்திர வட்டாரங்களில் அடிபட்டது.

ஆனால் கருணாநிதியினதும் தமிழ் நாட்டினதும் ஆக்ரோஷ உணர்வலைகள் அத்துடன் குறைந்து விடவில்லை. நந்திக் கடல் பகுதியில் இலங்கை அரச படைகளால் சுற்றி வளைக்கப்பட்டு, எதுவுமே செய்ய இயலாத நிலை பிரபாகரனுக்கு ஏற்பட்டபோது, தமிழ் நாடு மீண்டும் கிளர்ந்தெழுந்தது. பல தரப்புக்களும் பிரபாகரனையும், தமிழ்ப் பொதுமக்களையும் இந்திய அரசு காப்பாற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென பலதரப்பட்ட விதங்களில் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தன. அந்த வேளையிலும் மஹிந்தரின் இரட்சகராகச் செயற்பட்டவர் இந்தப் பிரணாப் முகர்ஜியே.

இறுதிப் போரின் இறுதிநாள்களில், இலங்கை அரச படைகள் போரில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தமட்டா எனவும், தாக்குதல் தவிர்ப்பு வலயமொன்றைப் பிரகடனப்படுத்தி, போரின் போது பொதுமக்கள் பாதிக்கப்படாத விதத்தில் இலங்கை அரசு செயற்படுமெனவும் கூறி, தமிழ் நாட்டில் உருவான உணர்வலைகளை ஒருவாறு அமைதியடைய வைத்தவர் இந்தப் பிரணாப் முகர்ஜியே. இத்தகைய தமது இராஜதந்திர நகர்வுகள் மூலம், இலங்கை அரசபடைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைத் தொடர்ந்து முன்னெடுக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க பிரணாப் முகர்ஜியால் முடிந்தது.

ஆளும் காங்கிரஸ் கட்சியின் இரு பெரும் பலமிக்க தூண்களான சோனியா காந்தி மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருக்குத் தாம் வழங்கிய உறுதிமொழிக்கமைய பிரணாப் முகர்ஜியால் இந்த ராஜதந்திர செயற்பாட்டை வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்தது. போரில் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டிய பின்னர் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு மஹிந்த உரிய தீர்வொன்றை வழங்குவார் எனவும், சர்வதேச ரீதியில் இந்திய அரசுக்கு ஆதரவாக அவர் செயற்படுவார் என்பதுமே சோனியா காந்தி மற்றும் மன்மோகன் சிங்குக்கு பிரணாப் முகர்ஜி வழங்கிய அந்த உறுதிமொழியாகும்.

கடைசியில் இலங்கை அரச படைகளால் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டனர். ஓராண்டு, ஈராண்டு எனக் காலமும் ஓடி மறைந்தது. ஆனால் மஹிந்த, பிரணாப் முகர்ஜி மூலம் இந்தியாவுக்கு வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்படுமெனத் தென்றவில்லை.

ஜனாதிபதி மஹிந்த தமக்கு வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்படாததை மஹிந்தவுக்கு நினைவூட்ட இந்திய அரசால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டு வரும் இந்தப் பிரணாப் முகர்ஜியே தான்.

இலங்கைக்கு வந்து, ஜனாதிபதி மஹிந்தவுடன் தாம் மேற்கொண்ட முதற்சுற்றுப் பேச்சின் முடிவில் மஹிந்த தமது உறுதிமொழியை நிறைவேற்றத் தயாராயில்லை என்பதைப் பிரணாப் முகர்ஜி தெளிவாகப் புரிந்து கொண்டார். மஹிந்த மீது அவர் அதுவரை வைத்திருந்த நம்பிக்கையும் மரியாதையும் தவிடு பொடியாகிப் போக நேர்ந்தது. அதைத் தொடர்ந்து, ராஜதந்திர மட்டத்தில் இந்தியா, இலங்கை அரசு மீது சுமத்திய குற்றச்சாட்டு இலேசானதொன்றல்ல. தாஸின் பி.ஆர் நிறுவனமூடாக இலங்கை, இந்திய அரசை ஆட்டிப்படைக்க முயல்கிறது என்பதே அந்தக்குற்றச்சாட்டு.

இலங்கை மீதான இந்திய அரசின் அதிருப்தி நிலை, பிரணாப் முகர்ஜியின் அரசியல் வாழ்க்கையிலும் திருப்பமொன்றை ஏற்படுத்தி வைத்தது. பிரணாப் முகர்ஜி, வெளியுறவு அமைச்சர் பதவியிலிருந்து தூக்கப்பட்டு, நிதி அமைச்சுப் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பலன், பிரணாப் முகர்ஜிக்கு இலங்கையுடனிருந்த நெருக்கமான தொடர்பு மெது மெதுவாகக் குறைவடைய நேர்ந்தது.

இந்திய அரச உயர்பீடம், விடயத்தை அத்துடன் கைகழுவி விட்டு விடவில்லை. இலங்கை தொடர்பில் அது வரை தான் கடைக்கொண்டு வந்த மென்போக்கு நிலைப்பாட்டை இந்திய அரசு படிப்படியாகக் கடும்போக்கு நிலைப்பாடாக ஆக்கிக் கொண்டது. கடந்த மார்ச் மாத ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையை ஆதரித்ததன் மூலம் அது இந்திய அரசால் வெளிப்படையாகவே இலங்கைக்கு உணர்த்தப்பட்டது. வாக்குறுதியைக் கைவிட்டு ஏமாற்றியதற்காக என்ன செய்வோம் என இருந்து பாருங்கள் என இந்தியா, இலங்கை அரசுக்கு விடுத்த அபாய எச்சரிக்கையாக அது கொள்ளத்தக்கது.

பிரணாப் முகர்ஜி அண்மையில் இந்தியாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார். அவரது நியமனம் குறித்து பலதரப்பட்ட சர்ச்சைகள் வெளிவந்தபோதிலும், 2014 ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தலை கருத்திலெடுத்தே, தூரநோக்குடன் சோனியா காந்தி, பிரணாப் முகர்ஜியை புதிய ஜனாதிபதியாகியுள்ளார்.

தொழில் துறையிலோ, அரசியலரங்கிலோ சிறப்பாகச் செயற்பட இயலாத அளவுக்கு முதுமைக்கு உள்ளாகும் ஒருவரை, அல்லது அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டியவரென அரசியல் பின்புலநோக்குடன் தாம் கருதும் ஒருவரையோ தான் ஆளும் அரச தரப்பு தனது சார்பாக தேர்தலில் நிறுத்துவதுண்டு. பெரும்பாலும் ஆளும் தரப்பு வேட்பாளரே வெற்றியீட்டி ஜனாதிபதியாகத் தேர்வாவதும் வழமையானதொன்றே.

பெரும் பணிப் பொறுப்பு எதுவுமின்றி, தமது அரசியல் வாழ்வின் ஓய்வு நிலையை ஜனாதிபதி என்ற பதவியுடன் கழிக்க நேர்ந்துள்ள நிலையில், இனிமேலும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியால் மஹிந்த வினதோ, அல்லது அவரது தலைமையிலான அரசினதோ இரட்சகராகத் தொடர்ந்து செயற்பட இயலப் போவதில்லை.

# கதிரைக்கு சிலர் பாரமா? சிலருக்கு கதிரை பாரமா?

ஆர் .கே.மேனன்

**பதவிகள், கௌரவங்கள் எமது செயற்பாட்டால் எம்மைத் தேடிவர வேண்டும். அதனைத் தேடி நாம் செல்வது கேவலமான விடயம். சற்று சிந்தித்துப் பாருங்கள். யாருக்கோ கிடைத்த பதவியைத் தட்டிப்பறிக்க நிற்பதும், செல்வாக்கின் பின்னணியில் நியமனங்களைப் பெறுவதுமாக போட்டிகள் மேலெழும் போது எமது வழிகாட்டலில் வளரும் பிள்ளைகள் சமூகத்தில் எப்படி மிளிர்வார்கள்?**

ஆட்சி உரிமை யாருக்கு என்பது இங்கு வாதமல்ல!.

யார் மேல் தவறு என்பது இங்கு கேள்வியல்ல!.

யாருக்கு சேர வேண்டும் என்பது இங்கு முக்கியமல்ல!.

வேம்படிக்கு ஓர் அதிபர் வேண்டும்.

இந்தப் பிரச்சினை நீள்கின்றது. ஆனால் படித்தவர்கள், பண்பாளிகள் வேம்படி மகளிர் பாடசாலையின் எதிர்காலத்தைப் பற்றி என்ன சிந்திக்கின்றனர்?

குடாநாட்டிலுள்ள உயர்தர மகளிர் பாடசாலைகளில் முன்னணியில் இருக்கும் ஓர் பாடசாலை வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை. ஒரு துருவத்தில் குடாநாட்டின் கல்வியை நிர்ணயிக்கும் கருவூலமிது. இதற்கு இப்படிப்பட்ட ஒரு சோதனையா? ஆட்சி உரிமை யாருக்கு என்பது இங்கு முக்கியமல்ல!. யார்மேல் தவறு என்பது இங்கு வாதமல்ல! யாருக்கு சேர வேண்டும் என்பது இங்கு கேள்வியல்ல! மாணவர்களை நிர்வாகப் போட்டிக்குள் இழுத்தமை தவறு.

**சுயமாக முன்வந்தார்களா?**

அதைக் கட்டுப்படுத்த அங்கு அப்போது இருந்த அதிபர், ஆசிரியர்களால் முடியாமல் போனதா? அப்படியானால் அந்த நிர்வாகம் ஆரோக்கியமானதா? அதன் கையில் பாடசாலையைக் கொடுப்பது ஏற்புடையதா? இவ்வாறான கேள்விகளெல்லாம் எழலாம். ஆகவே எம்மை மீறி மாணவர்கள் போராட்டத்தில் குதித்தார்கள் என்கின்ற நியாயத்தினை முன்வைக்காதீர்கள். இது சிறுபிள்ளைத்தனமான நியாயம்.

நாடு தற்போது சீரழிந்து உள்ளது. அரசியல் மோதல்கள் சமூகக் குழுக்களைத் துண்டாடுகின்றன என்பது மட்டும் தெளிவாகப் புரிகின்றது. படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் என்று சொல்லும் நாம் தெளிவான நேரிய சிந்தனைகளையும் எமக்குள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

எமக்குள் இருக்கும் பதவி ஆசைகள், போட்டிகளுக்காகப் பொது நிறுவனத்தினைப் பகடைக்காயாகப் பயன்படுத்தக்கூடாது. வேம்படி நிர்வாகத்தினைப் பொறுப்பேற்றமையாலோ அல்லது பொறுப்பேற்க உள்ளமையாலோ வேம்படி எமக்குச் சொந்தமென கூறிவிட முடியாது. இது யாழ்ப்பாண பிரஜைகள் உள்ளிட்ட அனைவருக்கும் சொந்தம். இது தொடர்பாகப் பேசுவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு.

இன்று நாம் படித்தவர்கள் என்பதைப் பட்டங்களின் மூலமே கணிக்கிறோம். படிப்பறிவால் பண்பட்ட இதயங்கள் எமது சமூகத்தில் குறைந்துவிட்டன. சிறுபிள்ளைத்தனமானபோட்டிகளும், ஆசைகளும் எம்மவர் மத்தியில் மலிந்துவிட்டன.

பதவிகள், கௌரவங்கள் எமது செயற்பாட்டால் எம்மைத் தேடிவர வேண்டும். அதனைத் தேடி நாம் செல்வது கேவலமான விடயம். சற்று சிந்தித்துப் பாருங்கள். யாருக்கோ கிடைத்த பதவியைத் தட்டிப்பறிக்க நிற்பதும், செல்வாக்கின் பின்னணியில் நியமனங்களைப் பெறுவதுமாகப் போட்டிகள் மேலெழும் போது எமது வழிகாட்டலில் வளரும் பிள்ளைகள் சமூகத்தில் எப்படி மிளிர்வார்கள்?

50 வருடப் போராட்டத்தால் பல வழிகளிலும் எமது தமிழினம் அறிவியல் பார்வையை இழந்தது. போர் ஓய்ந்துவிட்டதால் ஓரளவேனும் நிமிரலாம் என எண்ணும் வேளை பல கோணங்களில் பல சீரழிவுகள் ஏற்படுகின்றன. சமூகப் பொறுப்புள்ள மனிதர்களைக் காண முடியவில்லை. விதண்டா வாதங்களும், எதிர்கோஷங்களும் தான் எமது சமூகத்தில் மிஞ்சிக் காணப்படுகின்றன. நேரிய சிந்தனை கொண்ட மனித மனங்கள் தற்போது குறைந்துவிட்டன. சமூக முன்னேற்றத்தின் பெரும் பங்காளிகள் மேலதிகாரிகள். அதிலும் கல்விப்புலத்தில் இருப்பவர்கள் மாணவ சமூகத்தின் வழிகாட்டிகள். இவர்களின் நிர்வாக ஆளுமைகள் பலமிழக்கும் போது கல்விப்புலம் முற்றாகச் சரிந்துவிடும். 9 மாகாணங்களில் இறுதியில் நாம் நிற்கின்றோம்.

இதற்கான காரணமென்ன என பல கோணங்களில் சிந்தித்தோமா? இப்போது அப்பட்டமாகத் தெரிகின்றதல்லவா? போலிக் கௌரவங்களுக்காகப் போட்டிபோடும் ஆளணி வர்க்கங்கள் தலைமைத்துவத்தில் இருக்கும் வரை குடாநாட்டுக் கல்வி முன்னேறாது என்று. ஒரு சமூகம் எம்முடன் ஒன்றுபட்டு இருக்கலாம். எமது சேவை தேவையென வேண்டி நிற்கலாம். அதற்கு அதனைக் கேட்கும் உரிமை உண்டு. ஆனால் எமக்குள் ஓர் சுயசிந்தனை, சுயகௌரவம், தனித்துவம் என்பன இருக்க வேண்டும். அரசினால் வழங்கப்பட்ட நியமனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியது, கடைப்பிடிக்க வேண்டியது அரச ஊழியர்களின் கடமையாகும்.

இடைநிலை மாணவர்களின் வாதம் வேறு திசையில் நகர்கின்றது. ''உயர்தர மாணவர்கள் செயற்பாட்டால் ஆசிரியர்கள் உட்பட அனைவரும் பகிஷ்கரிப்பு என்றும், கூட்டங்கள் என்றும் சென்றுவிடுவார்கள். பாடங்கள் இடம்பெறுவது இல்லை. இதனால்தான் எமது இரண்டாம் தவணைப் பெறுபேறுகள் குறைந்தன'' என்கின்றனர். ''இந்தப் பிரச்சினை ஆரம்பித்துப் பல நாள்கள் ஆகின்றது. பாடசாலையில் எந்த நிகழ்வுகளும் இடம் பெறுவதில்லை'' என்றும் குறிப்பிடுகின்றனர்.

இந்த இடத்தில் தான் பெற்றோர்கள் நிதானமாகச் சிந்திக்க வேண்டும். இவர்களின் அதிகாரப் போட்டிகள் மாணவிகளைப் பலமாகத் தாக்குகின்றன. இதற்கான தீர்வுக்குப் பெற்றோர்கள் முன்வர வேண்டும். போலி நியாயங்களை சிறுபிள்ளைகள் சுமக்க உந்தப்படுகின்றார்கள். தூர நோக்கு இல்லாது தொழிற்படுகின்றார்கள். தனிநபருக்கு இந்த அளவு துணிவு மேலோங்கி இருக்கின்றதென்றால், கல்வி அமைச்சின் நியமனத்தை மாற்றமுடியுமா? நியமனத்தில் முறைகேடு இருப்பது தொடர்பாக வழக்குத் தொடுக்க நீதிமன்றமுள்ளது. நியமனத்தை எதிர்க்கவோ நிராகரிக்கவோ யாருக்கும் அதிகாரமில்லை. சாதாரண நடைமுறைச் சட்டங்களைக்கூட விளங்காதவர்களாக இருக்கின்றார்கள். அரசியல் நாடகங்களை அரங்கேற்ற பாடசாலைகளா கிடைத்தன. இது மாணவர்களுக்கான பாடசாலை அல்லவா? மாணவர்களின் வாழ்க்கை அல்லவா? தயவுசெய்து சிந்தியுங்கள். இந்தக் கட்டுரை யாருக்காகவும் எழுதப்படவில்லை. பொதுப்படையான யதார்த்த சிந்தனை கொண்டவர்கள் எவரும் இதனை ஏற்றுக்கொள்வர்.

யாருக்கு சேர வேண்டும் என்பது இங்கு முக்கியமல்ல. வேம்படிக்கு ஓர் அதிபர் வேண்டும்.

# மீள வளரும் பாடசாலை

இ.த.பா.சிங்கம்

1934 ஆம் ஆண்டு ஆரம்பித்த கற்சிலைமடு அரசினர்தமிழ்க் கலவன் பாடசாலை படிப்படியாக வளர்ச்சி பெற்று 80 ஆண்டுகளைக் கடந்த நிலையில் புதிய தோற்றம் பெறுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலையானது, ஆரம்பத்தில் சிறிய பாடசாலையாகவும், வகுப்பு 5 வரையும் 50-60 மாணவர்களோடும், ஓர் ஆசிரியரோடும் இருந்த பாடசாலை மாணவர்களின் வரவு அதிகரித்து 9 ஆம் வகுப்பு வரை நடைபெற்று வந்ததுடன் ஆசிரியர் வளங்களும் அதிகரித்து வந்தன. மேலும் இந்தப் பாடசாலையானது, கல்வியிலும் விளையாட்டுக்களிலும் சாதனைகளைப் படைத்து இப்போது க.பொ.த. உயர்தரம் வரை வளர்ச்சி பெற்றுள்ளது.

தற்போது சுமார் 400 இற்கும் மேற்பட்ட மாணவர்களோடு சகல பாடங்களுக்கான ஆசிரிய வளத்தோடும் கல்வி, விளையாட்டு என்பனவற்றில் முன்னணியாகத் திகழ்வதுடன் இந்தப் பாடசாலையிலிருந்து அதிகளவான பல்கலைக்கழகம் மாணவர்கள் செல்லுமளவிற்கு வளர்ந்துள்ளது.

பாடசாலை வளர்ச்சியானது வெறுமனே ஆசிரிய மாணவர்களின் கைகளில் தங்கி நிற்பதில்லை. பெற்றோர்களது ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது. ஆசிரியர்களுக்கு ஊக்கத்தைக் கொடுத்து உற்சாகப்படுத்திப் பாடசாலைத் தேவைகளையும், குறைபாடுகளையும் கேட்டறிந்து, அவர்களோடு ஒன்றிணைந்து அரசிடம் பெற்றுக் கொள்வது எல்லோருடைய பொறுப்பாகும். வெறுமனே அதிபர்களையோ அல்லது ஆசிரியர்களையோ வீதியில் நின்று விமர்சனம் செய்வதில் நடைபெறுவது எதுவுமில்லை. ஆசிரியர்களோடு கலந்துரையாடி, குறைகளைக் கேட்டறிந்து, கற்றல் செயற்பாடுகளின் குறைகளைச் சுட்டிக்காட்டிப் பிள்ளைகள் பாடங்களில் குறைந்த புள்ளிகள் பெறுவதற்குக் காரணங்களைக் கேட்டறிந்து அதற்கான தீர்வுகளைப் பெற்று மேலும் வளர்ச்சிப் பாதைக்கு உந்து சக்தியாக விளங்க வேண்டும்.

அதனை விடுத்து வெறுமனே பாடசாலை ஆசிரியர்களை விமர்சனம் செய்வதும் மாற்றத்திற்கு அலுவல்கள் பார்ப்பதும் பிரயோசனமானதாக இல்லை. ஆசிரியர்களுக்கு இந்தப் பாடசாலை இல்லையென்றால் இன்னொரு பாடசாலை, அவர்கள் ஒரு பாடசாலைக்கு மட்டும் உரித்தானவர்கள் அல்லர். கற்சிலைமடு பாடசாலையில் கல்வி கற்ற இதே இடத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர், தற்போது அதிபராகக் கடமையாற்றுகின்றார். அவர் முதல்வர் என்பது மட்டுமல்லாது, இது நான் கல்வி கற்ற பாடசாலை, எனது கிராமம், இதனை நாம் எப்படியெல்லாம் வளர்க்க வேண்டும், வேண்டியவற்றையெல்லாம் எவரிடமிருந்து பெறலாமோ அவர்களை நாடி குறைபாடுகளைக் கூறி பாடசாலைக்குத் தேவையான அனைத்து வளங்களையும் பெற்ற பெருமை தற்போதைய முதல்வரையே சாரும். பாடசாலைக் கட்டட வசதி இல்லாத போது யுனிசெவ் நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு தற்காலிக கொட்டகை மூன்றைப் பெற்று அதன் மூலம் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டார். அதுமட்டுமல்ல ஆசிரிய வளம் இல்லாத போது தொண்டர் ஆசிரியர்களை இணைத்து ஆசிரியர்களிடமிருந்து குறிப்பிட்ட ஒரு சிறு தொகையைத் திரட்டி அவர்களுக்குக் கொடுத்து கற்றலில் ஈடுபடுத்தினார்.

ஆசிரியர்கள் தங்குவதற்கு விடுதிகள் இல்லாத போதும், வகுப்பறையிலே தங்க வைத்து மேலதிக வகுப்புகளை நடத்தியும்,புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகமான மாணவர்கள் சித்திபெற வேண்டுமென ஆசிரியர்களோடு தானும் ஒருவனாகச் செயற்பட்டார். மாணவர்களை விளையாட்டுத்துறையில் ஈடுபடுத்தி, சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்லும் வகையில் வளர்த்துள்ளார். மாகாண மட்டத்தில் இந்தப் பாடசாலை மாணவர்கள் முன்னணியில் உள்ளனர். எத்தனையோ விளையாட்டுகளுக்கு வறிய மாணவர்களின் செலவைக் கூட தனது பணத்திலே செலவு செய்துள்ளார்.

அதுமட்டுமல்ல இந்தப் பாடசாலை ஆய்வுகூட வசதியுடன் மிகச் சிறந்த அடுக்குமாடிக் கட்டடமாகத் திகழ வேண்டுமென்று அயராது பாடுபட்டு உழைத்தார். அதன் பயனாக இருமாடிக் கட்டடம் உட்பட சகல கட்டடங்களும் ஆசிரிய விடுதி, அதிபர் விடுதி விளையாட்டு நிகழ்வு நடத்துவதற்கான கட்டடம் உட்பட நவீன வசதி கொண்ட மலசலகூடம் அடங்கலாக இந்தப் பாடசாலைக்கு 63 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்தப் பாடசாலை, மகா வித்தியாலயமாக மாற்றம் பெற உள்ளது. முதல்வரானவர் இளம் வயதினராக இருந்தாலும் கடும் முயற்சி செய்து கிடைப்பவற்றையெல்லாம் பெறக் கூடிய வல்லமை படைத்தவர். இப்படியான ஒரு சேவையாளனுடன் ஒன்றிணைந்து எமது பாடசாலை வளர்ச்சிக்கு உதவ முன்வர வேண்டும். ஒட்டுசுட்டான் கோட்டத்தில் சகல துறைகளிலும் முன்னணி வகிக்கும் பாடசாலை கற்சிலைமடு அ.த.க.பாடசாலையே. இதனை மேலும் தரமுயர்த்த இந்தப் பகுதியைச் சேர்ந்த அனைவரும் முன் வர வேண்டும்.

எமது பாடசாலை வளர்ச்சி பெற்று மிகவும் சிறந்த பாடசாலையாகத் திகழ வைப்பதற்கு ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர், கற்கும் மாணவர்கள், நலன் விரும்பிகள் எனஎல்லோரும் கைகோர்த்து வளமான எதிர்காலத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள முன்னின்று உழைக்க வேண்டும்.

நல்லூர் கந்தனின் 14 ஆம் நாள் வீதியுலாக் காட்சி



**கிருபா லேணர்ஸ்**



(அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
இப்பொழுது பருத்தித்துறை 1 ஆம் கட்டைச் சந்தியில்
T.P : 021 4923201,
071 4546958, 077 7225292
தலைமைக்காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353
(சி/1848)(6-7-8)


## வேண்டுதலைத் தீர்க்க திருவருள் அளிப்பாய்

தினைப்புலம் காத்த வள்ளிமேல்
தீராவிருப்பம் கொண்டாய் - கந்தா
முதிய பிராமண வேடம் பூண்டு
வள்ளிமேல் மோகம் கொண்டாய் - கந்தா
வள்ளி மறுக்க அண்ணன் வேழமுகத்தானை
நீ அழைக்க
மதங்கொண்ட யானையாக அண்ணன் தோன்ற
- கந்தா
பயந்த வள்ளி உன்னிடம் அடைக்கலமாக
காந்தருவ திருமணம் செய்தாய் - கந்தா
குஞ்சரி - வள்ளி மணாளனே - உன் அடியார்கள்
வேண்டுதலைத் தீர்க்க திருவருள் அளிப்பாய் -
நல்லைக்கந்தா

**தர்மகுலசிங்கம், நாயன்மார்க்கட்டு.**

## பதம் பணிந்தோம் நல்லூரா



சரவணபவ ஓம் சிவசண்முகா ஓம்
சக்தியின் மைந்தா சரவணபவ ஓம்
அரகர நம ஓம் ஆறுமுக ஓம்
அடிபணிந்து போற்றுகிறோம் ஓம் முருகா ஓம்



வள்ளி தெய்வானை மணாளா ஓம்
வானவர் போற்றும் அமுதே ஓம்
புள்ளிமயில் மிசை வள்ளல் ஓம்
பூரண நலங்கள் பொழிவாய் ஓம்

கந்தா ஓம் சிவ மைந்தா ஓம்
கருணைக் கடலே ஞானகார்த்திகேயா ஓம்
அமரா ஓம் சிவகுகனே ஓம்
அழகா ஓம் ஞானசற்குருவே ஓம்

வேலா மலைமகள் பாலா ஓம்
விண்ணோரும் மண்ணோரும் ஏத்தும் நாதா ஓம்
பண்ணோடு பாடல்கள் பாடுகிறோம் ஞானபண்டிதா ஓம்
பதம் பணிந்தோம் சரணமையா நல்லூரா ஓம்

**செ.ரவிசாந், குப்பிளான்.**

## வாழவழி வகுக்கும் வடிவேலன்




ஈழத்தின் வயலூராம் நல்லூரில்
இளமுருகன் அருளாட்சி புரிகின்றான்
சூழவரும் வினைகளெலாம் பொடியாக்கி
சுகமே சேர்க்கும் சுந்தரன் மீது
ஆழமிகும் பக்தியினால் அடியார்கள்
அருகனைந்து அஞ்சலிப்பர் அகிலமதில்
வாழ வழிசமைக்கும் வடிவேலன்
வனப்பார் தோற்றமதால் மெய்சிலிப்பர்

**திருமதி ப.சிவராமலிங்கம்.**


திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
**JAFFNA ELECTRICALS**
94 (6), STANLEY ROAD, JAFFNA.
T.P.021 222 2353, Fax. 021 222 4302
(சி/1286)(2-9)


# புராதன கலை மரபை வெளிப்படுத்தும் அம்சங்களுடைய சட்டநாதர் சிவன்



(கடந்தவாரத் தொடர்ச்சி)

இந்துக்களது பண்பாட்டையும், சமயப்பற்றையும், இருப்பையும் நாகரிகத்தையும் புராதன காலந் தொட்டு பாதுகாத்து வரும் ஆவணக் காப்பகங்களாக இந்து ஆலயங்களின் தோற்றுகையும், வளர்ச்சியும் இருந்து வருகின்றன.

எமது பகுதிகளில் உள்ள ஒவ்வொரு இந்து ஆலயமும் எங்கள் மூதாதையரின் பரம்பரைச் சொத்தாகும். சைவத் தமிழ் மக்களின் உன்னதமான சமய விழுமியங்களையும் உலகியல் வாழ்க்கை மதிப்பீடுகளையும், அரிய கலைச் சின்னங்களையும் கட்டிக் காத்து வரும் கலாசாரப் பொக்கிஷங்களாகும்.

அந்த வகையில் நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில் தொடர்பாக பல்வேறு கருதுகோள்கள் நிலவுகின்ற போதிலும் அந்த ஆலயத்தில் இன்றும் பாவனையில் உள்ள மணிக்கோபுரத்தில் இருக்கும் மணியில் பொறிக்கப்பட்டுள்ள தாமிர சாசனமானது ஆலய வரலாற்றின் சான்றுத் தடயமாகத் திகழ்கிறது.

எமது மணியில் உள்ள சாசன வாசிப்பானது சாலி வாகன சகாப்தம் 17 சம கலியப்தம்4963 துந்துபி வருடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டநாதர் கோயிலுக்கு சிவசம்பு-ம என்றவாறு பொறிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிட்டுள்ளவாறு சட்டநாதேஸ்வரர் என்ற பெயரானது கி.பி.18 ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் வழக்கில் இருந்துள்ளது என்பதற்கு இது ஆதாரமாக அமைகிறது.

போத்துக்கீசரின் அழிப்புக்கு இந்தக் கோயில் உட்பட்டிருந்தாலும் அதன் புராதன கலை மரபைக் காட்டும் சில அம்சங்கள் மணிக்கூட்டுக் கோபுரத்தின் அடிப்பகுதியிலும் கோயிலின் உட்பிரகாரத்துக் கூரையிலும் இன்றும் காணப்படுகிறது.

இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது பழைய அழிபாடுகளிடையே லிங்கமும், ஆவுடையார் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சோழர் காலத்து கலை அம்சங்கள் பொருந்திய சதுர வடிவான ஆவுடையார் அமைப்பை நோக்கும் போது சோழர் காலத்திற்கும் இந்தக் கோயிலுக்கும் தொடர்பிருக்கலாம் எனவும் ஊகிக்க இடமுண்டு. பின்னர் செண்பகப் பெருமாள் படையெடுப்பினால் அந்த ஆலயம் அழிவுற்றிருக்கலாம் என்பதையும் பின்னர் 13 ஆம் நூற்றாண்டிலே முதலாம் சிங்கையாரியச் சக்கர வர்த்தியினால் நாற்றிசைக் கோயில்களுள் ஒன்றாகக் கட்டப்பட்டிருக்கலாம் என்பதையும் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை உள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

> எமது மணியில் உள்ள சாசன வாசிப்பானது சாலி வாகன சகாப்தம் 17 சம கலியப்தம்4963 துந்துபி வருடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டநாதர் கோயிலுக்கு சிவ சம்பு-ம என்றவாறு பொறிக்கப்பட்டுள்ளது.யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிட்டுள்ளவாறு சட்டநாதேஸ்வரர் என்ற பெயரானது கி.பி.18 ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் வழக்கில் இருந்துள்ளது என்பதற்கு இது ஆதாரமாக அமைகிறது.

நல்லூர் இராசதானியை 1477-1518 காலப்பகுதியில் ஆட்சி செய்த பரராஜ சேகரச் சிங்கையாரியன் இந்தக் கோயில் வளர்ச்சியில் புதிய மாற்றங்களைச் செய்து பல கட்டட வசதிகளை ஏற்படுத்தினான். போர்த்துக் கேய தளபதி பிலிப்டி ஒலிவேராவின் குறிப்புக்களிலிருந்து அவர்களது படையெடுப்பினால் இந்தக் கோயிலும் அழிவுற்றதாக அறிய முடிகிறது.

தனித்திறன் கொண்ட சைவத் தமிழ் பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்ட இந்தப் பகுதி சமய அபிமானிகளாலும், மக்களாலும் காலத்திற்குக் காலம் பொறுப்பேற்ற நிர்வாகசபைகளாலும் இந்தக் கோயில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகங்கள், திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

எஸ்.யேசுதாஸ்

முழுமுதற் கடவுளான சிவன் இங்கு வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலித்து ஆட்சி புரிந்து வருகிறார். அழகான வசந்த மண்டபம், சித்திரத்தேர் என்பன அமைக்கப்பட்டு பழம் பெரும் சிவாலயங்களில் ஒன்றாகச் சிறப்புற்று விளங்குகிறது.

ஆலயத்தின் உள்ளே பஞ்சலிங்கம், பிள்ளையார், பரிவார மூர்த்தங்கள், வள்ளி தெய்வானை சமேத முருகன் நவக்கிரகம், சண்டேஸ்வரர், நாயன்மார் நால்வர் என்பவர்களுக்கு விசேட வழிபாடுகள் நடத்த அவை பிரதிட்டை செய்யப்பட்டு சிவனுக்குரிய சிறப்பான பெருமையுடன் திகழ்கிறது.

மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புடைய நல்லூர் சட்டநாதர் ஆலயம் 1998 ஆம் ஆண்டு இந்து கலாசார அபிவிருத்தி அமைச்சில் பதியப்பட்ட கோயிலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அட்டதிக்கும் அருளாட்சி புரிந்து அடியவர்களுக்கு அபயம் அளித்து வரும் சிவாலயமாக சட்டநாதர் ஆலயம் பொலிவுடன் திகழ்கிறது.

இந்த ஆலயத்தின் மூல மூர்த்தியானது சங்கிலி மன்னனால் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டதென்ற ஐதீக்க் கதையும் மக்களிடையே நிலவுகிறது. போர்த்துக்கீசர் காலத்தில் இந்த ஆலயம் சிதைவுற்று, பின் வந்த மன்னர்களால் புனரமைப்புச் செய்யப்பட்ட போது லிங்க மூர்த்தி இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கலாம்.

இந்தக் கோயிலுக்கு அருகிலே மீனாட்சி சொக்கநாதர் ஆலயமும், மேற்கு வீதியிலே பாலகதிர்காமக் கந்தன் ஆலயமும் அமைந்திருக்கின்றன. ஆதியில் சட்டநாதர் ஆலயத்தில் வழிபடப்பட்ட தட்சணாமூர்த்தி வடிவம், மீனாட்சி சொக்கநாதர் ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தும் ஒரே குருபரம்பரையினரால் பூசை வழிபாடுகளுடன் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

(முற்றும்)

## 37 சீன நாட்டு மீனவர் கிழக்குக் கடலில் கைது

### மட்டக்களப்பு கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்

மட்டக்களப்பு,ஓக.7

சர்வதேச கடல் எல்லைச் சட்டத்தை மீறி இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 37 சீன நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இரண்டு மீன்பிடிப் படகுகளுடன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

மட்டக்களப்பு கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அவர் கூறினார்.

கைது செய்யப்பட்ட சீன மீனவர்கள் திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## அதிகளவு ஆசனங்களைப் பெற்று கூட்டமைப்புடன் ஐ.தே.க. இணையும்

### அந்தக்கட்சி வேட்பாளரின் நம்பிக்கை



திருகோணமலை,ஓக.7

கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி கூடுதலான ஆசனங்களைப் பெற்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைப்பது உறுதியாகி விட்டது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலை வேட்பாளர் நசுறுல்லாஹ் மொறவெள தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் தனித்துப் போட்டியிடுவதும், மற்றைய மாகாணங்களில் அரசுடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதும் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களை ஏமாற்றும் செயலாகும். இது முஸ்லிம் காங்கிரஸ் செய்யும் விநோத விளையாட்டாகும்.

முஸ்லிம்களின் புனித இடமான பள்ளிவாசல்களை உடைப்பதற்கும் பூட்டுப் போடுவதற்கும் மௌனம் சாதிக்கும் அரசுக்கும், அதனுடன் முட்டுக் கொடுத்து இணைந்து போகும் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களிப்பது பற்றி கிழக்கு மாகாண மக்கள் சிந்திக்க வேண்டும். அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை விடவும், பள்ளிவாசல்களை உடைக்கும் செயல்களே அதிகமாக பத்திரிகைகளில் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன.

இதுதானா அரசின் அபிவிருத்தித் திட்டம் ? தற்போது நடைபெற்று வரும் அபிவிருத்தியான வீதிக்கு காப்பற் போடுவதைக் கண்டு ஏமாந்து விடாமல் எதிர்கால சிறார்களின் நலன் கருதி மக்கள் வாக்களிக்க வேண்டும்.

அத்துடன் வெற்றிலைச் சின்னத்துக்கும் , மரச்சின்னத்துக்கும் அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்குகளும் முஸ்லிம் சமூகத்துக்கு தேர்தல் முடிந்த பின் செய்யப்படும் அநியாயங்களுக்கும், பள்ளிகளை உடைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும் செயலாகும்.- என்றார். (ச)

## தந்தையும் மகனும் ரயில் மோதிச் சாவு

### மட்டு. நகர் சோகத்தில்

மட்டக்களப்பு,ஓக.7

மட்டக்களப்பு, மாமாங்கம் பகுதியில் ரயிலில் மோதுண்டு தந்தையும், மகனும் உயிரிழந்த சம்பவம் குறித்த பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கருவப்பங்கேணியைச் சேர்ந்த ஜோசப் அலோசியஸ் (வயது 57), அவரது மகனான அலோசியஸ் ஸ்டீக் (வயது 35) ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த இருவரும் ரயில் பாதையில் அமர்ந்திருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இது தொடர்பிலான விசாரணையை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# தமிழ்த் தேசியத்தின் மீதான பற்றை வெளிப்படுத்துவோம்

### சர்வதேசமும் எம்பக்கம் என்கிறார் கூட்டமைப்பு வேட்பாளர்

அம்பாறை,ஓக.7

பேரினவாதக் கட்சிகளினதும், அந்தக் கட்சிகளின் அடிவருடிகளினதும் வாக்குறுதிகளை நம்பி ஏமாறும் நிலை இனிமேலும் தொடரக் கூடாது. தமிழ்மக்கள் தமிழ்த் தேசியத்தின் மீதான பற்றுறுதியை தேர்தலில் வெளிப்படுத்த வேண்டும் என்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் ஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.

கோமாரி கிராமத்தில் நடைபெற்ற தேர்தல் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> மூன்று தசாப்த காலப்போர் , மாறி மாறிவந்த சிங்கள அரசுகளின் ஒடுக்குமுறைகள், இன ஒழிப்பு நடவடிக்கைகளால் நொந்து நொடிந்து நாம் நிற்கின்றோம்.

கடந்த காலங்களில் பேரினவாதக் கட்சிகளினதும் அதன் அடிவருடிகளினதும் வாக்குறுதிகளை நம்பி நம் மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாறுகளுமுண்டு. நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலும் பேரினவாதக் கட்சிகள் களமிறங்கியுள்ளன.

இந்தநிலையில் தமிழ் மக்கள் மிக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டிய கால கட்டமாக இந்தத் தேர்தல் காலம் அமைந்துள்ளது.

மூன்று தசாப்த காலப் போர் , மாறி மாறிவந்த சிங்கள அரசுகளின் ஒடுக்குமுறைகள், இன ஒழிப்பு நடவடிக்கைகளால் நொந்து நொடிந்து நாம் நிற்கின்றோம்.

தமிழினம் தனது சுயநிர்ணய உரிமைக்காக நீண்டகாலம் போராடி வருகின்ற போதிலும் நம் உரிமைகளை வழங்குவதற்கோ, இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கோ அரசு துளியும்தயாரில்லாத நிலைமை தொடர்கதையாகவுள்ளது.

இந்த நிலைமையில்தான் சர்வதேசம் நமக்காக குரல் கொடுக்கவும், நமக்கென விடிவை ஏற்படுத்தவும் முனைப்புக்காட்டி வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் தமிழ் மக்கள் ஏகோபித்து அணிதிரண்டு அதன்மூலம் நம் செய்தியை சர்வதேசத்துக்கு மீண்டும் தெரிவிக்கவேண்டும்.

இதற்குக்கிடைத்துள்ள நல்ல சந்தர்ப்பமாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலைப் பயன்படுத்தவேண்டும். தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலை அணுகுவதுடன், நம் உரிமையைக் காப்பாற்றுவதற்காக நம் சமூகம் சார்ந்த கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும். இது எதிர்காலத்துக்கு பயனளிக்கும் வகையில் அமையும். தமிழ்பேசும் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைகளுக்கப்பால் எந்தச் சலுகைகளையும் கோரி நிற்கவில்லை- என்றார். (ச-30)



திருகோணமலை , பாலையூற்று வாணி வித்தியாலயத்தில் 5,000 பாடசாலை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் திருமலை மாவட்ட அரச அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்ஜித் டீ.டீ.சில்வா உட்பட பல விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். (40)

## காணிப் பிரச்சினை உயிரைப் பறித்தது

ஹெரவப்பொத்தான, முக்கரவெவ பகுதியில் ஒரு வர்கட்டுத்துவக்கால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். காணிப் பிரச்சினை தொடர்பில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதையடுத்து இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச்சூட்டில் ஆதம்பாவா மிஹிலார் (வயது-28) என்ற இளைஞனே கொலை செய்யப்பட்டுள்ளார். கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## உணவு நிலையங்களில் சுகாதாரப் பரிசோதனை



மட்டக்களப்பு,ஓக.7

மட்டக்களப்பு நகரில் உள்ள உணவு நிலையங்களில் சுகாதார சீர்கேடான நிலையங்களைக் கண்டறியும் நடவடிக்கையை மட்டக்களப்பு பொலிஸாருடன் இணைந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்டுவருகின்றனர்.

அண்மைக்காலமாக மட்டக்களப்புக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையில் அவர்களின் நலனை நோக்காகக் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை கோட்டைமுனை பிரதேசத்தில் உள்ள உணவு நிலையங்கள் சோதனையிடப்பட்டதுடன், சுகாதார சீர்கேடான உணவு நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையச் சுற்றாடல் பிரிவு பொறுப்பதிகாரி ஜயசுந்தர தலைமையிலான பொலிஸ் குழுவினரும், குறித்த பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து இந்தச் சோதனையை மேற்கொண்டனர்.

இதேபோன்று கடந்த வாரம் நடத்தப்பட்ட சோதனைகளின்போது மட்டக்களப்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் சுகாதார சீர்கேடான உணவு நிலையங்கள் ஆறு இனங்காணப்பட்டு, அவற்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவு பொறுப்பதிகாரி ஜயசுந்தர தெரிவித்தார்.

கடந்த காலங்களில் உணவு நிலையங்களின் சுகாதாரம் தொடர்பிலும் அதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பிலும் உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். இதனடிப்படையில் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## தற்காலிக அடையாள அட்டை விநியோகம்

மட்டக்களப்பு,ஓக.7

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு சமர்ப்பிக்க அடையாள அட்டை இல்லாதோருக்கான தற்காலிக அடையாள அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது.

இந்த வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்முனை பிரதேசத்திலும் இடம்பெற்றது. இந்தச் சேவையில் சுமார் 250 இற்கும் அதிகமான தற்காலிக அடையாள அட்டை விண்ணப்பதாரிகள் கலந்துகொண்டனர். கபே என்றழைக்கப்படும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுடன் இணைந்து குறித்த செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** கௌரவத்துக்காகச் செலவுகள் செய்வீர்கள். நண்பர்களுடன் விருந்துகளில் பங்கேற்பீர்கள். அயலாருடன் சுக துக்கங்களை பகிர்ந்து கொள்வீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றை பின்னர் செய்யலாம் என தள்ளி வைப்பீர்கள்.

**இடபம்:** பரபரப்பாகச் செயற்படுவீர்கள். தொட்ட காரியங்கள் துரிதமாக நடக்கும். மற்றவர்கள் செய்ய வேண்டிய சில வேலைகளையும் சேர்த்துச் நீங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**மிதுனம்:** ஆரவாரம் இல்லாமல், அமைதியாகச் செயற்படுவீர்கள். மற்றவர்களை நம்பி சில வேலைகளை ஒப்படைத்து விட்டு அது எப்படியாகுமோ என்று கலக்கம் ஏற்படும். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்தி வரும்.

**கடகம்:** உறவினர்கள் சிலரைத் தொடர்பு கொண்டு, முக்கிய விடயங்களைப் பேசுவீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய வேலை ஒன்றை, நண்பர்கள் மூலம் முடிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். சில வேலைகளைச் செய்ய மறுத்து விடலாம்.

**சிங்கம்:** எந்த வேலையையும் பிறகு என்று பிற்போடாமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். தற்செயலாக நடக்கும் சில விடயங்களால், உங்களுக்கு சந்தோஷம், மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலருக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களைப் பற்றி பெருமையாகப் பேசுவர்.

**கன்னி:** தடுமாற்றங்கள், குழப்பங்களைச் சந்திப்பீர்கள். உறவினர் ஒருவரால் ஏற்பட்ட மன உளைச்சல், சங்கடங்கள் தீரும். உங்களின் வேலை ஒன்றுக்காக, மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள்.

**நாளை**

ஆடி 24 புதன்கிழமை 08.08.2012
திதி: ஷஷ்டி மு.ப. 10.52 வரை
நட்சத்திரம்: அச்சுவினி, பி.இ. 06.01 வரை
சுபநேரம்: 04.34 - 06.04 வரை
ராகு காலம்: 12.04-01.34 வரை

**துலாம்:** சில பொருள்களை வாங்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைய நேரிடும். திட்டமிட்ட வேலை ஒன்றில், திடீரென மாற்றங்கள் செய்யலாம். எந்த வேலையும் விறுவிறுப்பாக முடியாமல், கடுமையாக இழுத்தடிக்கலாம்.

**விருச்சிகம்:** பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளியூர் பயணங்களின் போது முக்கிய நபர் ஒருவரைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் சிலருக்குக் கடன் கொடுப்பீர்கள். சில நாள்களுக்கு முன்னர் எதிர்பார்த்த பணவரவு ஒன்று, இன்று வரும்.

**தனுசு:** போட்டிகள் விலகி நினைத்ததைச் சாதிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். பல நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரை, இன்று திடீரெனச் சந்திப்பீர்கள். எதிர்பாராத செலவுகளும் உண்டு.

**மகரம்:** சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் தடுமாற்றங்களைச் சந்திப்பீர்கள். குடும்ப உறுப்பினர்கள் சிலர் மீது, ஏதோ ஒரு வகையில் கோபம் ஏற்படும். மற்றவர்களுக்காகச் சிலரிடம் உதவி கேட்பீர்கள். சிறிய தவறு ஒன்றை நினைத்து பெரியளவில் கவலைப்படுவீர்கள்.

**கும்பம்:** கடினமாக முயற்சித்தும், சில விடயங்களில் பலன் கிடைக்காமல் போகும். உங்களின் ரகசியம் ஒன்றை, மற்றவர்கள் அறிந்து கொண்டு விமர்சிக்கலாம். நடக்காத ஒரு விடயத்தைப் பற்றி, பெரியளவில் கற்பனை செய்வீர்கள்.

**மீனம்:** நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். உடல் நிலையைப் பொருட்படுத்தாமல் சில பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். கடந்த காலத்தில், உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | | 1 | | 8 | 9 |
| 1 | | | | 7 | 9 | 5 | 2 | |
| 8 | 7 | | | | | | | 4 |
| | | | | 8 | | 3 | | 1 |
| 3 | 9 | | | 2 | | | 4 | 6 |
| 6 | | 8 | | 1 | | | | |
| 2 | | | | | | | 3 | 5 |
| | 1 | 6 | 3 | 5 | | | | 2 |
| 4 | 5 | | 2 | | | 9 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 4 | 2 | 6 | 8 | 3 | 9 | 7 |
| 9 | 6 | 7 | 4 | 1 | 3 | 2 | 8 | 5 |
| 3 | 8 | 2 | 7 | 5 | 9 | 1 | 6 | 4 |
| 2 | 7 | 6 | 5 | 4 | 1 | 9 | 3 | 8 |
| 8 | 5 | 1 | 3 | 9 | 6 | 4 | 7 | 2 |
| 4 | 3 | 9 | 8 | 7 | 2 | 6 | 5 | 1 |
| 6 | 4 | 3 | 1 | 8 | 5 | 7 | 2 | 9 |
| 1 | 9 | 5 | 6 | 2 | 7 | 8 | 4 | 3 |
| 7 | 2 | 8 | 9 | 3 | 4 | 5 | 1 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# மரண அறிவித்தல்

## திருமதி கார்த்திகேசு சரஸ்வதி



கலட்டி லேன், கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சரஸ்வதி கடந்த (03.08.2012) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கதிராசி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கார்த்திகேசுவின் (CIB) அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரவியம் மற்றும் சின்னத்துரை, மனோன்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கமலேஸ்வரி (ராசு - கனடா), சந்திரலேகா (வவி), ராஜேஸ் வரி (வவா - கனடா), சந்திரகுமார் (சந்திரன் - பிரான்ஸ்), சயந்தகுமார் (கண்ணன் - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும், பாலசுப்பிரமணியம், கமலாகரன், அமுதலிங்கம், சுசிகலா, நகுலாம்பிகை (அம்பிகை) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா, சிவபாக்கியம் மற்றும் நாகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், பாலசங்கர் - பிறில்லா (கனடா - பொறியியலாளர்), பாலராஜன் - கார்த்திகாஜினி (USA - பொறியியலாளர்) பாலகஜன் (USA - மருத்துவ பீடம்), பாலவினோஜன் (கனடா), விந்துஜா (சட்டபீடம் - கனடா), சுஜிகாந்தன், ரூபகாந், யசோதா, யசிந்தன் (கனடா), லாவண்யா (கனடா), கௌந்திகா (கனடா), டினோஜன் (பிரான்ஸ்), மிதுஷா (பிரான்ஸ்), மயூரன் (கொழும்பு), விஷிரூபன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.08.2012) புதன்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கலட்டிலேன்,
கோண்டாவில் மேற்கு.

(21350) (45.6.7)

# வருடாந்த பொதுக்கூட்டம் - 2012

முல்லை மாவட்ட ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையாளர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் ஒட்டுசுட்டான் விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் நாளை (08.08.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறஉள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

மாங்குளம் ஒலுமடு விவசாயப் போதனாசிரியர் காரியாலயம்.

(ƒ/2143) (2-6-7)

# திறப்பு விழா

தொடர்ந்து 24மணிநேர
சேவையுடன்எந்தஇடத்திற்கும்
செல்லக்கூடிய வாகனவசதி
அத்துடன்இன்ரநெற்வசதிகளுடன்
தொலைத்தொடர்பு சேவை,
புத்தகக்கடைஎன்பனஅடங்கலான

**V.U. தொலைத்தொடர்பகம்**

யாழ்.ஸ்ரான்லிவீதி,303ஆம்
இலக்கத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றனர்
தொலைத்தொடர்பக உரிமையாளர்கள்
இல.303,ஸ்ரான்லிறோட்,
யாழ்ப்பாணம்.
T.P.0212219530,
0213212121

(ƒ/2144)(2-6-7)

# மு.காங்கிரஸ் தனித்துப்போட்டி ஆளும் கட்சிக்குள் முரண்பாடு

## ரவூப் ஹக்கீம் அரசியல் சந்தர்ப்பவாதி என்கிறார் பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா

கொழும்பு,ஓக.7

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனித்து போட்டியிடுவது தொடர்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் முரண்பாடான நிலைமை ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஓர்அரசியல் சந்தர்ப்பவாதி என்று பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா குற்றஞ் சுமத்தியுள்ளார்.

கொழும்பு, மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசியப் பிரச்சினைகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் காய் நகர்த்தல்களில் ஈடுபட்டு வருகிறது.

ஆளும் கட்சிக்கு வாக்களித்தலானது முஸ்லிம் பள்ளிவாசல்களை இடிப்பதற்காக அளிக்கப்படும் வாக்குகள் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அண்மையில் குற்றஞ் சுமத்தியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கூட்டணியில் அங்கம் வகித்துக் கொண்டே அரசைக் கடுமையாகத் தாக்கி வருகிறது.

இனவாத அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சகல தேர்தல் பிரசாரங்களையும் தமிழ் பேசும் மக்கள் நிராகரிக்க வேண்டும் - என்றார்.

இதேவேளை இனவாத அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் நடத்தவில்லை என்று கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார். இன மற்றும் மத அடிப்படையாக எமது கட்சி அரசியல் நடத்துவதாக எவரேனும் கருதினால் அது பிழையானது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


இனங்களுக்கு இடையிலோ, மதங்களுக்கு இடையிலோ பிளவுகளை ஏற்படுத்தும் நோக்கில் தமது கட்சி எந்த நேரத்திலும் செயற்பட்டதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் தனித்துப் போட்டியிட எடுத்த தீர்மானமானது அரசின் ஓர் தந்திரோபாயம்.

தேர்தலில் த்னித்தனியாகப் போட்டியிட்டாலும் ஆளும்கட்சிக்கும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் இணக்கப்பாடு காணப்படுகிறது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பாவனைக்கு உதவாத வெள்ளைப் பூண்டு நுகர்வோர் சபையால் மீட்பு





கொழும்பு,ஓக.7

கொழும்பு துறைமுகத்தில் பாவனைக்கு உகந்ததல்ல என்று ஒதுக்கப்பட்ட 41 கிலோ கிராம் வெள்ளைப்பூண்டு, பாவனைக்கு உகந்த வெள்ளைப்பூண்டுப் தொகையுடன் கலந்து சந்தைக்கு விற்பனை செய்ய தயாரான நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

தம்புள்ள, கண்டலம வீதியில் உள்ள நெல் களஞ்சிய சாலையில் இருந்து குறித்த வெள்ளைப்பூண்டுகள் நுகர்வோர் அதிகார சபையால் மீட்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த வெள்ளைப்பூண்டு பழுதடைந்தமையால் கொழும்பு துறைமுகத்தால் அகற்றப்பட்டது. எனினும் இந்த வெள்ளைப் பூண்டு தொகையை குறைந்த விலைக்கு வாங்கிய தம்புள்ள பிரதேச வர்த்தகர்கள் அதில் பாவனைக்கு உகந்த வெள்ளைப் பூண்டில் கலந்து விற்பனை செய்ய முயற்சித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட வெள்ளைப்பூண்டுத் தொகையின் பெறுமதி 35 லட்சம் என நுகர்வோர் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (ச)

## இந்திய – இலங்கை வீஸா நடைமுறைகளில் தளர்வை ஏற்படுத்த இருதரப்பு பேச்சு

### கொழும்பில் ஆனந் சர்மா தகவல்

இந்திய-இலங்கை உறவை வலுப்படுத்திக் கொள்ளவும் வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் ஏற்ற வகையில் இரண்டு நாடுகளினதும் விஸா நடைமுறைகளில் தளர்வை ஏற்படுத்த இரு நாட்டு குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் பேச்சு நடத்தி வருவதாக இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா நேற்று முன்தினம் தெரிவித் தார்.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சர்மா, நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் தனது வருகையின் நோக்கம் குறித்து கலந்துரையாடினார்.

இதன்போது வாகன உற்பத்தி, பொறியியல் பொருள்கள் உற்பத்தி மற்றும் மருந்து மையம் போன்ற தனித் தன்மையான நிலையங்களை உருவாக்கி சிறந்த பொருளாதார மண்டலம் ஒன்றை இலங்கையில் அமைக்க இந்தியா முடிவு செய்துள்ளது என்று இந்திய அமைச்சர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இதன்போது இலங்கையும் விஸா நடைமுறையில் சில மாற்றங்களைக் கொண்டு வர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதன்போது இலங்கை ஜனாதிபதியை இந்தியாவுக்கு வருமாறு சர்மா கேட்டுக் கொண்டார்.

இதேவேளை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸைச் சந்தித்த அவர் இருநாட்டு கடல் எல்லை பிரச்சினை குறித்தும் பேசியதாகவும், விரைவில் இந்திய, இலங்கை கடல்சார் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தியன் சோ வர்த்தக மாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்ததாவது:-

போரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் உள் கட்டமைப்பை மேம்படுத்த இந்தியா உதவும். போரில் இடம் பெயர்ந்த தமிழர்களை மீண்டும் அவர்களின் இடங்களில் குடியேற்றுவது தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தம் மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது.



இலங்கையில் வாழும் தமிழர்களுக்காக இந்தியா வீடுகட்டித்தருவதை இலங்கை வரவேற்றுள்ளது. இலங்கையில் உள்ள துறைமுகங்களை மேம்படுத்துவதில் இந்திய நிறுவனங்கள் அதிக ஆர்வம் காட்டும். இது தவிர எண்ணெய் மற்றும் எரிவாயு பகுப்பாய்விலும் இந்திய நிறுவனங்கள் முக்கிய பங்காற்றும்.

இலங்கையில் முதலீடு செய்ய விரும்பும் தனியார் நிறுவனங்களுக்கு கடன் அளிக்குமாறு இந்திய வங்கிகளை மத்திய அரசு கேட்டுக்கொள்ளும் - என்றார்.(ச)

## உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு

பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பிரதேச சபைத் தலைவர்கள் உள்ளிட்ட நாற்பது உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தாக்குதல்கள், கொலைகள், லஞ்ச ஊழல், அச்சுறுத்தல்கள், வன்புணர்வு, சிறுவர் துஷ்பிரயோகம், காணி அபகரிப்பு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக மேலும் சில பிரதேச அரசியல்வாதிகளுக்கு எதிராக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## கூட்டமைப்பு – மு.கா. இணைந்த ஆட்சியை உருவாக்க அமெ.முயற்சி

கொழும்பு,ஓக.7

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்திய விவகாரங்களுக்கான உதவிச்செயலர் றொபேட் ஓ பிளேக் தலைமையிலான குழுவொன்று விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

றொபேட் ஓ பிளேக் தலைமையிலான அமெரிக்கக் குழு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போன்றோரைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறுகிய காலமே இலங்கையில் தங்கியிருக்கவுள்ள போதிலும், இந்தக் குழுவினர் கிழக்கு மாகாணத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறியவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - முஸ்லிம் காங்கிரஸ் தலைமையிலான நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் றொபேட் ஓ பிளேக் ஆர்வம் கொண்டுள்ளதை தெளிவாகப் புரிந்து கொள்ள முடிவதாக அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் தெரிவித்துள்ளது. (ச-சி)



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பதுளை மாவட்ட செயலகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று திங்கட்கிழமை காலை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. 333 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் பதுளை மாவட்ட செயலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விரிவுரையாளர் பணிப்புறக்கணிப்பு தொடர்கின்றது

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்து, ஒரு மாத காலம் கடந்துள்ள போதிலும் இதுவரை எந்தவொரு தீர்வும் வழங்கப்படவில்லை என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவிக்கின்றது. கடந்த மாதம் 4 ஆம் திகதி கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்ஜித்தேவசிறி குறிப்பிட்டார்.

பலதரப்பட்ட பேச்சுகள் இடம்பெற்ற போதிலும், இதுவரையில் தீர்வு வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார். இதன் காரணமாக தமது தொழிற்சங்க நடவடிக்கையை தொடர்ந்தும் முன்னெடுக்க வுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# அழுகிய றம்புட்டானால் நோய்த் தாக்க அபாயம்

## மக்களே கவனமாயிருங்கள்

யாழ்ப்பாணம், ஓக 7

யாழ்.நகரப் பகுதியில் விற்பனை செய்யப்படும் றம்புட்டான் பழங்களைக் கொள்வனவு செய்யும்போது மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். பழுதடைந்த றம்புட்டான் பழங்களைச் சிறுவர்கள் சாப்பிடுவதால் அவர்கள் நோய்த் தாக்கத்துக்கு இலக்காகக் கூடிய நிலை ஏற்படும் எனச் சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

தற்போது நகரப் பகுதியில் றம்புட்டான் விற்பனை சூடுபிடித்துள்ளது. நகரின் பல வீதிகளில் இந்த றம்புட்டான் பழங்கள் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றை நகருக்கு வரும் மக்கள் கொள்வனவு செய்துகொண்டு செல்கின்றனர்.

இவ்வாறு விற்பனை செய்யப்படும் றம்புட்டான் பழங்கள் தற்போது அழுகிய நிலையில் காணப்படுவதால் இது குறித்து அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். சில றம்புட்டான் பழங்களுக்கு உள்ளே புழுக்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு உண்பதால் அவர்கள் நோய்த் தாக்கத்துக்கு இலக்காகக் கூடிய நிலை உள்ளது. எனவே அவற்றைக் கொள்வனவு செய்யும்போது கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-17-135)


## மரண அறிவித்தல்

### சந்திரராஜாசாமி சந்திரகுமார்



மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும், ஜேர்மனியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரராஜாசாமி சந்திரகுமார் கடந்த (01.08.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சத்திரராஜாசாமி - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் கண்மணி (ஆனைப்பந்தி) தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இந்திரகுமாரி, விஜயகுமார், ஜெயக்குமாரி, சூரியகுமாரி மற்றும் உதயகுமார் (கொக்குவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் சரோஜினிதேவி (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான திருமதி தனபாலசிங்கம் லோகேஸ்வரி, செல்வி நாகேஸ்வரி கந்தையா, புவனேஸ்வரி நெல்லிநாதன் (நுணாவில்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும், சண்முகலிங்கம், துரைச்சாமி - திலகவதி, பரமலிங்கம் - விஜயலட்சுமி, கேதீஸ்வரன்-வதனி, ஆனந்தலட்சுமி, தனலட்சுமி, யோகேஸ்வரி-தவேந்திரராஜா, மனோராணி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுரேஸ்குமார், ராஜ்குமார், ரவீந்திரகுமார், ரமேஸ்குமார், சிவகுமார், பிரியதர்ஷனி, சுபாஷினி, நிஷாந்தினி, சதீஸ்குமார், அசோக்குமார், காண்டீபன், விதுஷினி, றஜிதா, லக்ஷிகா, கணேசலிங்கம், விஜயகௌரி, ஸ்ரீதர்ஷினி, ஜெயவதனி, விஜயமோகன், ஜெயகீதா, விஜயகாந்தன், கலாஜினிதேவி, கௌரிதேவி ஆகியோரின் அன்பு மாமனும், தினேஸ், குருசங்கர் ஆகியோரின் பெரிய தந்தையும், அபினாஸ், அப்சரன், ஆஷிகா, அஸ்விகன், அஷானி, ஆதீஸ், ஆகாஷ், நிஷானா, சப்திகா, ஜோகான், யோசான் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மன் பிராங்போட்டில் இன்று (07.08.2012) செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சங்கரப்பிள்ளை கண்மணி (ஆனைப்பந்தி),
உதயகுமார் (கொக்குவில்),
தொடர்பு: 004 969 706 160

(21397) (45.6.7)

## காணி விற்பனைக்கு

யாழ். சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் 4½ பரப்பு, கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. பிரதான வீதியில் இருந்து 50m தூரத்தில்.

தொடர்பு: 077 773 3460

(சி/1892)(5-6-7)

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகரசபைக்கு ½ Km தூரத்தில் சகல வசதிகளும் கொண்ட 03 அறை வீடு வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு : 077 6296570

(21405)(6-7-8)

## ஓட்டோ விற்பனைக்கு

NP - QX ---- எனும் இலக்கமுடைய பியாஜோ டீசல் ஓட்டோ விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 3638459

(21404)(6-7-8)

## தவறிவிட்டது

தே.அ.அ. (780427184 V) செல்வராசா ரஜனிகாந் என்பவரின் சாரதி அனுமதி பத்திரம் (Ao 1243000) அடங்கிய மணிப் பேஸ் வட்டக்கச்சி கல்மடு நகரிற்கும் சம்புக்குளத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொ.பே. 077 8095 726 தொலைபேசியில் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.

செ. ரஜனிகாந், இல. 183, அம்பாள் குளம், கிளிநொச்சி. (19298) (6.7.45)

## ஸ்ரீபால முருகன் சனசமூக நிலைய சீட்டிழுப்பு முடிவுகள்

சாவகச்சேரி வடக்கு கிராம்புவில் இந்து இளைஞர் மன்றத்தினரின் அனுசரணையுடன் படையாண்டான் தோட்ட கந்தசுவாமி ஆலய ஸ்ரீபால முருகன் சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

| பரிசு விபரம் | பற்றுச்சீட்டு இலக்கம் |
|---|---|
| முதலாம் பரிசு | 1377 |
| இரண்டாம் பரிசு | 2077 |
| மூன்றாம் பரிசு | 3095 |

ஆறுதல் பரிசில்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| i. 378 | ii. 3219 | iii. 3372 | iv. 083 | v. 1537 |
| vi. 3003 | vii.1973 | viii. 1327 | ix. 070 | x. 3052 |

மேற்படி பரிசில்களை 10.08.2012 இற்கு முன்னர் 077 4694 639 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு குறித்த பற்றுச்சீட்டுக்களைக் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளவும்.

கிராம்புவில், சாவகச்சேரி. (18139) (45.6.7)

ஸ்ரீ பாலமுருகன் சனசமூக நிலைய நிர்வாகத்தினர்.

## Metro Travels

### விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 18200 |
| Colombo-Tiruchirapally-Colombo | 18500 |
| Colombo-Doha | 28300 |
| Colombo-London | 50000 |
| Colombo-Toronto | 80000 |
| Colombo-Singapore-Colombo | 31500 |
| Colombo-kualalumpur -Colombo | 34500 |
| Colombo-Frankfurt | 71000 |
| Colombo-Milan | 68000 |
| Colombo-Rome | 68000 |
| Colombo-Paris | 71000 |
| Colombo-Zurich | 68000 |



All Taxes included, credit card Accepted with a surcharge & Travel insurance,
Above Fares Are Subject to seat Availability
Terms & Conditions Apply

மேலதிக தொடர்புகளுக்கு

(Branch office) No-272/1, Stanley Road, Jaffna.
Tel:-021 222 4647,021 221 9424
Week days 8.30 am to 5.00 pm
Saturday 9.00 am to 1.30 pm
New Branch office: No-34, New Bus Stand Complex, Vavuniya. Tel:024 222 6800 / 024 222 6801.

(C\1605 (2,6,7)

## சர்வதேச இந்துமத குருபீடம் சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம் இணைந்து நடாத்தும்



பாடசாலை மாணவர்க்கான

### சமய கலை இலக்கிய அறிவுப்போட்டி

பிரிவு I: (மத்திய பிரிவு) தரம் 7 ,8 ,9
பிரிவு II: (மேற்பிரிவு) தரம் 10 ,11 ,12

முதலாம் பரிசு: தங்கப்பதக்கம்
இரண்டாம் பரிசு: வெள்ளிப்பதக்கம்
மூன்றாம் பரிசு: வெண்கலப்பதக்கம்
மேலும் 100 சிறப்புப்பரிசில்கள்

இடம்: மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
காலம்:08-08-2012 புதன்கிழமை காலை 9.00 மணி-11.00 மணி வரை

போட்டியில் பங்குபெறும் மாணவர் அன்று காலை சரியாக 8.30 மணிக்கு பரீட்சை தொடர்பான தயார்படுத்தல்களுக்காக தவறாது சமூகமளிக்கவேண்டும்.

வெற்றிபெறும் மாணவர்கள் யாழில் நடைபெறும் சர்வதேச இந்துமத குருபீடத்தின் 15 வது ஆண்டு ஆன்மீகப்பெருவிழாவில் கௌரவிக்கப்படுவார்கள்.
விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

அனுசரணை: IDM Chankanai Campus

தொடர்பிலக்கம்: 077 9120686
IDM Nations Campus Chankanai (சி/2148))(6.7.8)

பாடசாலை மாணவின் பெயர் கந்தம் பாடசாலை மற்றும் தரத்தினை அதிபர் அல்லது பொறுப்பாசிரியர் உறுதிப்படுத்த வேண்டும்

## சர்வதேச இந்துமத குருபீடம் சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம் இணைந்து நடாத்தும்



### ஆன்மீகப்பெருவிழா தொடர்பான 2வது ஆலோசனைக்கூட்டம்

இடம்: IDM சங்கானை பிரதான மண்டபம்
(Luxmy Plaza,பிரதான வீதி சங்கானைHNB க்குமுன்னால்)
காலம்:08-08-2012 நாளை புதன்கிழமை 1.00-2.30pm

விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள சகல பிரமுகர்களும்
(முதலாம் கூட்டத்தில் கலந்து கொள்ளாதவர்கள்)
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சிவாச்சார்யார்
தலைமையில் நடைபெறும் விழா தொடர்பான கூட்டத்திற்கு
தவறாது சமூகமளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பிலக்கம்:077 99 30 140

நிர்வாகப்பணிப்பாளர்
சர்வதேச இந்துமத குருபீடம்

(சி/2149)(6.7.8)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வமணி சின்னத்தம்பி



சித்தங்கேணி, பண்டத்தரிப்பு வீதியை பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வமணி சின்னத்தம்பி கனடா வில் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் சின்னத் தம்பியின் அன்பு மனைவியும் குணம், குலேந்திரா(கனடா), விஜயன், சுவர்னா (டென்மார்க்), சிறி, நந்தினி (ஜேர்மனி),வசந்தன்,வாணி (டென்மார்க்), கிருபா, மஞ்சு(டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 11.08.2012 அன்று டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை தொடர்புள்ளோர் ஏற்றுக் கொள்ள வும்.

'பூரணம்'
ஆச்சியபடி ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (21408)(5-6-7)

தகவல்:
சகோதரன்
வ.வரதராசன்

## டிப்பர் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 48 - XXXX இலக்கமுடைய டிப்பர் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 5041447 உயரப்புலம், ஆனைக்கோட்டை பிடாரி கோயில் பின் வீதி

(21407)(6-7-8)

## லொறி விற்பனைக்கு

47 - XXXX எனும் தொடர் இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள லேடன் லொறி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 6702432

(21406)(6-7-8)

## சிறு நீரகம் தேவை

35 வயதுடைய ஒருவருக்கு B+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.

தொடர்பு: 077 9631 287

(21409) (6.7.45)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 * 09 * 1954
உதிர்வு 19 * 08 * 2011


அமரர் கணபதிப்பிள்ளை மலரகீதன்
(அச்சுவேலி,வடக்கு பஸ்நிலையம் HNB வங்கி கட்டட உரிமையாளர்)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
அணையா தீபமே. மூத்தவரே
உனக்கு மின்னாமல் முழங்காமல்
காலன் வந்தானோ. உன் புன்னகை
முகத்தை காண்பது எப்போது
ஆண்டுகள் பல மறைந்தாலும் உனது
கவலைகள் எங்களை விட்டு அகலாது.

அச்சுவேலிவடக்கு.

உன் துயரத்தில் ஆழ்ந்த
சகோதரர்கள், பிள்ளைகள், குடும்பத்தினர்.

(21403)(6-7)




5 மாவட்டங்களிலும் பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## யாழ். செயலகத்தில் நேர்முகப் பரீட்சை

அரசாங்க நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சினால்தொழில் நுட்ப உத்தியோகத்தர், மொழிபெயர்ப் பாளர் பதவிக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற வுள்ளது.

விண்ணப்பதாரிகளை உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் மூலப்பிரதிகளோடு சமுகமளிக்கும்படி யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். (3)

# திண்டுக்கல் அகதி முகாமில் ஈழ அகதிகள் மூவரின் சடலங்கள்

### தாய், பிள்ளைகள் என அடையாளம் காணப்பட்டனர்

தமிழ்நாடு - திண்டுக்கல் அருகே அமைந்துள்ள தொட்டானூத்து அகதி முகாமில் வறண்ட கிணற்றில் இருந்து ஒரு ஈழத் தமிழ் அகதிப் பெண்ணும் அவரது இரு பிள்ளைகளும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

திண்டுக்கல் அருகே ரெட்டியாபட்டியில் உள்ள வறண்ட கிணற்றில் இருந்து உடல் கருகிய நிலையில் இந்த மூன்று சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**ஈழ அகதியான 35 வயதுடைய கலைச் செல்வி, அவருடைய 12 வயதுடைய மகன் வினோத் மற்றும் 7 வயதுடைய மகன் கௌதம் ஆகியோரே உயிரிழந்தவர்கள்**

ஈழ அகதியான 35 வயதுடைய கலைச்செல்வி, அவருடைய 12 வயதுடைய மகன் வினோத் மற்றும் 7 வயதுடைய மகன் கௌதம் ஆகியோரே உயிரிழந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த மூவரும் கொலை செய்யப்பட்டார்களா? அல்லது தற்கொலை செய்து கொண்டார்களா? எனப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு 'கானகதா வாரிதி' பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் 'அவுணர் தோற்றம்' இடம்பெற வுள்ளது. (3)

* * *

துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் தெய்வீக இசையரங்கில் பதினைந்தாம் திருவிழாவான இன்று மாலை 6.30 மணிக்கு செல்வி சுஷ்மா சோமசேகரின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது. பக்கவாத்தியங்களாக வயலின் - எஸ்.கோபிதாஸ், மிருதங்கம்- கே. கஜன், கெஞ்சிரா- பிரம்மஸ்ரீ சிவசுந்தரசர்மா. (3-14-86)

* * *

நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு சைவப்புலவர் ஏ. அனுசாந்தன் "நாவுக்கரசரின் நற்றமிழ்" என்ற கருப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (3)

* * *

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சைவப்புலவர் கு. பாலசண்முகன் 'குருவாய் வருவாய்' என்னும் கருப்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். தொடர்ந்து வடலியடைப்பு இந்து இளைஞர் சங்க அறநெறிப்பாடசாலை, ஏழாலை களவாவோடை நாகபூஷணி அம்மன் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். சிறப்பு நிகழ்ச்சியாக செல்வன் வசந்த குமாரின் பண்ணிசை நிகழ்வு நடைபெறவுள்ளது.(3-7-86)

# இந்திய மீனவர்கள் விடுதலைக்கு இராமேஸ்வரத்தில் உண்ணாவிரதம்

### இராமேஸ்வரத்தில் நாளைமுதல் 5 நாள்களுக்கு

இராமேஸ்வரம், ஓக.7

இலங்கை கடற்படையால் கடந்த வருடம் நவம்பர் மாதம் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 5 பேரை உடனடியாக விடுவிக்கக் கோரி, நாளை புதன்கிழமை முதல் ஐந்து நாள்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாக இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஆயிரக் கணக்கான மீனவர்கள் கலந்து கொள்வார்கள் என இராமேஸ்வரம் பகுதி இயந்திரப் படகு உரிமையாளர்கள் சங்கத் தலைவர் தேவதாஸ் தெரிவித்துள்ளார்.

போதை மருந்து கடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட இந்த மீனவர்கள், கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (3)

# மாடுகளுக்கான தடுப்பூசி

அளவெட்டி, ஓக.7

அளவெட்டி தெற்கு பெருமாள் கடவைப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு மாடுகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

மாடுகளுக்கு ஏற்படும் தொண்டை அடைப்பான், கால்வாய் நோய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதால் சகல கால்நடை வளர்ப்போரும் தங்களின் மாடுகளைக் தவறாது கொண்டு சென்று தடுப்பூசியைப் போடுமாறு கால்நடை வளர்ப்போர் சங்கம் அறிவுறுத்தியுள்ளது. (3-36)

# நயினை– நல்லூர் திருத்தல பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஓக.7

நல்லூர் வருடாந்த உற்சவத்தின் தேர்த் திருவிழாவை முன்னிட்டு நயினை -நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை 48 ஆவது ஆண்டாக நடைபெற வுள்ளது. இந்த யாத்திரை எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து மறுநாள் 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை புங்குடுதீவு காளிகா பரமேஸ்வரி ஆலயத்தில் ஆரம்பித்து அன்றிரவு கிராஞ்சி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தை வந்தடையும். பின்னர் மறுநாள் புதன் கிழமை அதிகாலை 5மணிக்கு பாதயாத்திரை ஆரம்பித்து வில்லூன்றி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தை வந்தடையும்.

16 ஆம் திகதி வியாழக் கிழமை சீனிவாசகம் வீதி வழியாக வண்ணை சிவன் கோயில், காளிகோயில், பெருமாள் கோயில், கந்தர்மடம் நாகபூஷணி அம்மன் ஆலயம் ஊடாக நல்லூர் ஆலயத்தை வந்தடைந்து நல்லூரான் தேரின் பின் சென்று திருத்தலப் பயனையும் பாதயாத்திரையும் நிறைவடையும். (3-7-13)

# செய்தி மடலுக்கான ஆக்கங்கள்

### நெடுந்தீவுப் பிரதேச கலாசார விழாவை முன்னிட்டு

செய்தி மடல் ஒன்றை வெளியிட நெடுந்தீவு பிரதேச சபை தீர்மானித்துள்ளது. இதற்கான ஆக்கங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளனர்.

ஆக்கங்கள் சொந்தப் படைப்பாகவும் முன்னர் பிரசுரிக்கப்படாதவையாகவும் இருக்கவேண்டும். ஆக்கங்கள் பிரதேசம் சார்ந்தவற்றைப் பிரதிபலிப்பதாகவும் இருக்க வேண்டும்.

கட்டுரை 1000 சொற்களுக்கு உட்பட்டதாகவும், கவிதை 10 சொற்களைக் கொண்டதாகவும், சிறுகதை 1000 சொற்களுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும். விடுகதைகள், செய்தித் துளிகள், குறுங்கதைகள் தொடர்பான ஆக்கங்களும் அனுப்பலாம் என்று நெடுந்தீவு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (3)

## கண்ணீரில் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சடாரணமூர்த்தி வரதராசா (வரதன்)

திதி-பஞ்சமி

கண்ணை இமை காப்பது போல்!
எம்மைக்காத்த அப்பாவே!
எண்ணமெல்லாம் எமக்காக இருந்தீரே அப்பா!
அள்ளி இரு கைகளினால்
அணைத்தெடுத்து அன்பு காட்டினீர்
நட்டாற்றில் தவிக்கவிட்டு
எங்கே சென்றீர்கள் அப்பா
ஆண்டுகள் மூன்று ஆனாலும் உம்மை நினைத்து
கதறியழுகின்றோம் அப்பா!
பாவி யமனும் நல்லவரை விட்டு வைப்பதில்லை
அதில் உங்களையும் தப்பவிடவில்லையப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

அத்தாய், அல்வாய்.

மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்.

(சி/2135) (35.7)

## தவறிவிட்டது

யோகநாதன் கருணாகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன (04.08.2012) சனிக்கிழமை நாச்சிமார் கோயிலுக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு:- 077498556, 021 222 4823

(21400) (2-6-7)

## மரண அறிவித்தல்

திருமதி செல்வமாணிக்கம் சிவசுப்பிரமணியம்

06.08.2012 அன்று உதயனில் (6B ) பக்கத்தில் பிரசுரமான திருமதி செல்வமாணிக்கம் சிவசுப்பிரமணியம் அவர்களின் மரண அறிவித்தலில் அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம்(சிவலைச் சிவசுப்பிரமணியம்) தின் அன்பு மனைவியும், சிவானந்தராசா (சின்னக்குட்டி), ரூபாவதி, சம்பத்குமார் (சுகந்தன்) ஆகியோரின் தாயும் என்று சேர்த்து வாசிக்கவும்.

(சி/2146) (45.6.7

## 31 ஆம் நாள் நினைவுத்தூறலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
04.09.1921

மறைவு
08.07.2012

திருமதி கதிரேசு ஆச்சிப்பிள்ளை
(ஆச்சி)

மாதம் ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயர்
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தும் அம்மம்மா உங்களுக்கு ஈடாகுமா ?
வாடியே வருபவரை நாடியே நலமாக்கி விட்டு
அவனியில் நாம் சிறப்புடன் வாழ அரவணைத்து வழிகாட்டினீர்கள்
ஆல்மரம் சாய்ந்து போனதே ஆனாலும்
விழுதுகளின் விழிகளில் ஈரம் இன்னும் காயவில்லை
மோட்ச வழி நீங்கள் சென்று நலம்
பெறுவீர்கள் எந்நாளும்

கடந்த 08.07.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (07.08.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புஸ்பானந்தன்,
புஸ்பவனம்,
புத்தூர் கிழக்கு, புத்தூர்

குடும்பத்தினர்.

(21451)(6.7.8)

# மொபிடெல் வழங்கும் லியசர



நாட்டின் முன்னேற்றத்திற்காக பெருமளவு பங்காற்றி வரும் பெண்களின் சேவைகளைக் கௌரவிக்கும் வகையில், மொபிடெல் நிறுவனம், வாழ்க்கையை ஆளுமைப்படுத்துதல், தாய்மை, சுகாதாரம், தொழில் சார் பொறுப்புகள் மற்றும் குடும்ப நிலைமைகள் போன்ற அவர்களது அன்றாட அலுவல்களில் பெறுமதி சேர்க்கும் வகையில் 'லியசர' எனும் பொதியை வடிவமைத்துள்ளது.

இந்தச் சேவைக்கு மேலும் வலுவூட்டும் வகையில், மொபிடெல் நிறுவனம், இவ்வருடம் இலங்கையின் அழகுராணியாக முடிசூட்டப்பட்ட செல்வி சுமுது பிரசாதினியை 'லியசர' வர்த்தக தூதுவராக நியமித்துள்ளது.

மொபிடெல் நிறுவனத்துடன் இணைவது தொடர்பாக தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ள சுமுது பிரசாதினி, எதிர்காலத்தில் 'லியசர' வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபடவுள்ளார் எனத் தெரிவித்தார்.

''லியசர'' பொதியின் விசேட சேவைகளான ஊட்டச்சத்து, உணவுக் கட்டுப்பாடுகள், சமையல் குறிப்புகள், பேஷன் மற்றும் அழகுக் குறிப்புகள், வீட்டு வைத்தியம், குழந்தையின் உளவியல் பற்றிய தகவல்கள், குழந்தை பிறப்புகளின் போது தேவைப்படும் சுகாதார குறிப்புகள், புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் பிரபலங்களின் கருத்துக்கள் என்பவற்றை 222 எனும் இலக்கத்தை அழுத்துவதன் மூலம் மொபிடெல் 'லியசர' வாடிக்கையாளர்கள் மிக இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும்.

லியசர பொதியினூடாக மொபிடெல் வாடிக்கையாளர்கள் இலவச பேச்சுநேரம், குறுந்தகவல்கள், பெறுமதி சேர்சேவைகள் மற்றும் இலவச தரவுகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

# DHL தெற்கில் விஸ்தரிப்பு

DHL அண்மையில் தனது சேவை நிலையங்களை மாத்தறை மற்றும் காலி போன்ற நகரங்களில் திறந்துள்ளது. இதன் மூலம் இலங்கையிலுள்ள மொத்த DHL சேவை நிலையங்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

காலி மற்றும் மாத்தறை நகரங்களில் புதிதாக ஆரம்பக்கப்பட்டுள்ள இந்த DHL சேவை நிலையங்கள் வாரத்தின் 6 நாள்கள் திறந்திருப்பதுடன் சாதாரண விலை நிலையான பார அளவீட்டு முறைகளைக் கைக்கொள்ளல் மற்றும் இலவச பொதியிடல் போன்ற சேவைகளிலும் ஈடுபடுகிறது.

DHL சேவை நிலையமானது DHL வாடிக்கையாளர்களுக்கு எளிதில் அணுகக்கூடிய, அவர்களின் ஏற்றுமதி, இறக்குமதித் தேவைகளுக் கான தீர்வை வழங்குகிறது. காலி, மாத்தறை வாடிக்கையாளர்கள் வியாபாரங்களுக்கான தீர்வுகள் மாத்திர மின்றி தனிநபர் தீர்வுகளையும் இந்தப் புதிய காரியாலயங்களின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

இவற்றில் அனைத்து வகையான சரக்கு ஆவணங்கள், பொதிகள், பொதியிடல், கால வரையறைக்குட் பட்ட உடனடி விநியோகங்கள் போன்றவற்றுக்கு அதிவேக சேவைகளையும் வழங்குகிறது.




இலங்கை வங்கி வவுனியாக் கிளையில் நடைபெற்ற 73 ஆவது பிறந்த தின நிகழ்வுக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (த-400)

# பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் நெஸ்லே

பாலுற்பத்தித் தொழிற்றுறை உட்பட இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் நெஸ்லே நிறுவனம் வழங்கிவருகின்ற பங்களிப்புகளை வெளிப்படுத்தும் வகையில் 2012 ஆம் ஆண்டில் முதல் ஆறு மாத காலப்பகுதியில் அந்தநிறுவனம் மேற்கொண்டுள்ள முதலீடுகள் பெரிய அளவில் அதிகரித்துள்ளதென நிறுவனம் அறிவித்துள்ளது.

பாலை அடிப்படையாகக் கொண்ட தனது பிரபலமான உற்பத்திகளை வெளிக்கொணருவதில் பாலுற்பத்திப் பண்ணையாளர்களிடமிருந்து தினசரி 15,000 லீற்றர்களுக்கும் அதிகமான தூய பாலைக் கொள்வனவு செய்து வருகின்ற நெஸ்லே லங்கா நிறுவனம், தனியார்துறையைப் பொறுத்த வரையில் இலங்கையில் அதிகமான அளவில் தூயபாலைக் கொள்வனவு செய்யும் நிறுவனமாக இன்று திகழ்ந்து வருகின்றது.

2012 ஜூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் நிறுவனம் உள்நாட்டில் கொள்வனவு செய்துள்ள தூயபாலின் அளவு 35 வீதத்தினால் அதிகரித்ததுடன் அதன் மூலமாக உள்நாட்டிலுள்ள பாற்பண்ணையாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் அளவும் 58 வீதத்தால் அதிகரிப்பதற்கு வழிகோலியுள்ளது.

இலங்கையில் நெஸ்லே லங்கா நிறுவனத்தினால் கடந்த 18 மாதகாலப்பகுதியில் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூபா 3.2 பில்லியன் தொகையில் ரூபா 1.9 பில்லியன் தொகையானது பாலை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை உற்பத்தி செய்யும் ஏற்பாடுகளுக்கே முதலீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'' நாம் அதிகரித்த அளவில் உள்நாட்டில் தூயபாலைக் கொள்வனவு செய்துவருவதன் காரணமாக குருநாகலில் அமைந்துள்ள பாலை பதப்படுத்தும் எமது தொழிற்சாலையின் கொள்வனவு வசதிகள் அதியுச்ச அளவை எட்டியுள்ளன.

# இலங்கை வங்கி போல ஏனையவையும் சேவை நேரத்தை நீடிக்க வேண்டும்

யாழ்ப்பாணம் . ஓக.7

வாடிக்கையாளர் நலன் கருதி வாரநாள்களில் பிற்பகல் 6 மணிவரை இலங்கை வங்கி தனது சேவையை நீடித்துள்ளதைப் போல் ஏனைய வங்கிகளும் சேவை நேரத்தை நீடிக்க வேண்டும் என்று யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் வங்கியாளர்களிடம் கோரிக்கை விடுக்கிறார். அவர் மேலும் தெரிவித்ததாவது :-

வர்த்தகர்கள் பிற்பகல் சுமார் 6 மணிவரை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கிடைக்கும் வருமானத்தை வங்கியில் வைப்பிலிடவும் பிறஇடங்களில் உள்ள வியாபாரிகளுடன் , முகவர்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவும் பிற்பகலிலேயே முடிகிறது. வங்கிகளில் பணத்தை வைப்பிலிடாது தம்முடன் வைத்திருப்பது தற்காலத்தில் திருடர்களிடமிருந்து பாதுகாப்பதிலும் கேள்விக்குறி நிலவுகிறது .

வர்த்தகர்கள் மட்டுமன்றி பல்வேறு இடங்களில் வேலை செய்பவர்கள் அலுவலக வேலை முடிந்த பின்னர் வங்கிகளில் தமது சேவைகளைப் பெறவும் இந்த நேர நீடிப்பு பெரிதும் கைகொடுக்கும்.

பிற்பகல் பெரும்பாலும் 3 மணிக்கு முன்பதாக அனைத்து வங்கிகளும் வாடிக்கையாளர் சேவைகளைப் பெறமுடியாது மூடப்பட்டுவிடும்.

இலங்கை வங்கி பிற்பகல் 6 மணி வரை தனது சேவையை நீடித்தமை போன்று ஏனைய வங்கிகளும் சேவை நேரத்தை நீடிப்பது அனைவருக்குமே நன்மை பயப்பதாக அமையும். எனவே ஏனைய வங்கிகளும் சேவை நேரத்தை நீடிக்க வேண் டும்- என்றார். (த-4)



இலங்கை வங்கியின் 73 ஆவது பிறந்த தின நிகழ்வு அனைத்துக் கிளைகளிலும் கடந்த 2 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. சாவகச்சேரி கிளையில் கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பண்டிதர் கலாநிதி சிவஸ்ரீ கு.து. ஜெகதீஸ்வரக் குருக்கள், அருட்பணி யோசப் பிரான்சிஸ் அடிகள், நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறி, கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீ பிரகாஸ் உட்பட பெரும் எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். (கு-9)

# கொமர்ஷல் வங்கியின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கு கணினி நிலையங்கள்



இலங்கையில் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வகையில் கொமர்ஷல் வங்கி அதன் உன்னதமான சமூகப் பொறுப்புத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக் குத் தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடங்களை வழங்கி உதவி வருகின்றது. காவத்தை மத்திய கல்லூரி, மாத்தறை அநுர மகா வித்தியாலயம், தம்புள்ள டி.எஸ். சேனநாயக்க மகா வித்தியா லயம் மற்றும் ஹொரணை அமரகெவர கனிஷ்ட பாடசாலை என்பன கணினி ஆய்வு கூடங்களைப் பெற்றுக் கொண்ட பாடசாலைகளாகும். 2012 இன் முதல் ஆறு மாத காலத்தில் மட்டும் கொமர்ஷல் வங்கி 10 பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை வழங்கியது. இதனால் 6500 மாணவர்கள் நன்மையடைந்துள்ளனர். இதன் மூலம் 2010 முதல் இன்று வரை பாடசாலைகளிலுள்ள ஏனைய கல்விசார் நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள கணினி நிலையங்களின் எண்ணிக்கை 48 ஆகும். இவற்றின் மூலம் சுமார் 15,000 பேர் நன்மை அடைந்துள்ளனர் என்று வங்கி அறிவித்துள்ளது.

# டொஷிபாவின் புதிய மடிக்கணினிகள் இப்போது இலங்கைச் சந்தையிலும்

டொஷிபா சிங்கப்பூர் பிறைவேட் லிமிட்டெட் இலங்கையில் உள்ள தமது மொபைல் கொம்பியுட்டிங் பங்காளர்களான ஜோன் கீல்ஸ், ஒஃபிஸ், ஒட்டோமேஷன் ஊடாக மிகச்சிறந்த அம்சங்களைக் கொண்டுள்ள அதி நவீன M 800 சற்றலைற், L 800 சற்றலைட், L800 தொடர் நோட்புக் கணினிகளை அறிமுகம் செய்துள்ளது.

இந்தப் புதிய நோட்புக் கணினிகள் பலவகை திறன்களை தன்னகத்தே கொண்டுள்ளதுடன் பரந்தளவு கட்டமைப்பு, காட்சித்திரை மற்றும் நிறங்கள் போன்றவற்றைக் கொண்டுள்ளது.

முந்திய தலைமுறையிலும் பார்க்க மெல்லியதும் மிகக்குறைந்த எடை







கொண்டதுமான இந்த புதிய நோட்புக் கணினிகள் அத்தியாவசியமான சிறப்பம்சங்களை வழங்கும்.

NT800 சற்றலைட் விரும்பிய இடங்களுக்கு எடுத்து செல்லக்கூடிய வசதி மற்றும் சகாய விலை ஆகியவற்றுடன் இணைந்த நவநாகரிக மடிக்கணினி ஒன்றை வேண்டுவோருக்கு NT 800 சற்றலைட் மிகச் சிறந்த தெரிவாகும்.

நவீன 3 ஆவது மற்றும் 2 ஆவது தலைமுறை இன்றல்கோர் புரோசர்களைக் கொண்ட சற்றலைட் M800 தொடர் பல செயற்பாடுகளை ஒரே நேரத்தில் நிறைவேற்றும் தன்னிகரற்ற ஆற்றல் கொண்டது.

நேர்த்தி மற்றும் நீடித்து உழைக்கக்கூடிய சற்றலைட் M 300 தொடர் தங்கம், இளம் சிவப்பு, மற்றும் அடி வான நீல நிறம் கொண்ட தனித்துவம் மிக்க மெட்டலிக்மிரர் பூச்சுகளைக் கொண்டுள்ளது.

இந்த கணினிகள் 3D காட்சி அனுபவத்தை புளுரே அல்லது டிவிடிகளில் பார்க்கும்போதோ அல்லது 3D கேம் ஒன்றை விளையாடும்போதோ விசேட கண்ணாடியின் தேவையின்றி வழங்குகின்றன. இதில் உள்ள I டிரெக்கில் தொழிநுட்ப மானது பார்வையாளர்கள் காட்சித் திரையின் முன் தலையை அங்கும் இங்கும் அசைக்கும் போது 3D காட்சியை குழப்பாமல் தொடர்ச்சியான பார்வை அனுபவத்தை தருகின்றது.

# அமெரிக்க இராஜாங்க செயலர் பிளேக் இந்தியாவுக்கான தூதுவராக நியமனம்

கொழும்பு, ஓக.7

தெற்காசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் பதவியை வகிக்கும், றொபேட் ஓ பிளேக் இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து கொழும்பு ஆங்கில வாரஇதழ் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் தற்போது மிக முக்கியமான இராஜதந்திரப் பதவியான, தெற்காசியப் பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலர் பதவியை வகிக்கிறார்.

இவர் எப்போதும் இலங்கை அரசாங்கத்தை நட்புடன் பார்த்ததில்லை.

இலங்கை அரசின் மீதும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீதும் போர்க்குற்றச் சாட்டுகளை சுமத்தியவர் அவர்.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் பின்னணியிலும் இருந்தவர்.

இன்னும் இரண்டு மாதங்களில் பிளேக் தனது பதவிக் காலத்தை நிறைவு செய்வதையிட்டு இலங்கை அரசு பெருமூச்சு விடும் என்பதில் சந்தேகம் இல்லை.

வரும் நவம்பர் மாதம் அமெரிக்க அதிபர் தேர்தல் வரவுள்ளதால் இலங்கையில் தலையீடு செய்யக் கூடிய பதவியில் அவர் அமர்த்தப்படுவதற்கு வாய்ப்பில்லை.

ஆனால், துரதிஷ்டவசமாக, இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவராக பிளேக் நியமிக்கப்படவுள்ளதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இது இலங்கைக்கு மிகவும் பாதகமான நிலையாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (16)

# பணயக் கைதிகளாக்கப்பட்டுள்ள மாலுமிகளை விடுவிக்க உதவுகள்

## மதத் தலைவர்கள் கோரிக்கை

கொழும்பு, ஓக.7

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டு கடந்த இரு வருடங்களுக்கு மேலாக விடுவிக்கப்படாது சிறைப்பிடிக்கப்பட்டுள்ள இலங்கை மாலுமிகளை விடுவிக்க மக்கள் உதவவேண்டும் என்று சமயத் தலைவர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு மலேசியாவைச் சேர்ந்த எம்.பி.அல்பேட்டோ என்ற கப்பல் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 மாலுமிகளுடன் பயணித்துக்கொண்டிருந்தவேளை சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டது.

இவர்களை விடுவிப்பதற்கு 28 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர் கப்பமாக கோரப்பட்டது. எனினும் இதுவரை கப்பத் தொகையை செலுத்த மாலுமிகளது குடும்பத்தவர்களால் இயலாத நிலையில் இலங்கையைச் சேர்ந்த 7 மாலுமிகளும் இதுவரை விடுவிக்கப்படவில்லை. எனவே கப்பத் தொகையை செலுத்தி மாலுமிகளை விடுவிக்க அனைத்து மக்களும் தம்மாலான உதவிகளை செய்யவேண்டும் என்று பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத் தலைவர்கள் நேற்றுக்கோரிக்கை விடுத்தனர். கடத்தப்பட்டவர்களில் 7 இலங்கையர்களும் 6 பங்களாதேஷத்தவர்களும் ஈரான், இந்தியாவைச் சேர்ந்த தல ஒவ்வொரு மாலுமிகளும் இதுவரை விடுவிக்கப்படவில்லை. எனினும் பாகிஸ்தானைச் சேர்ந்த மாலுமிகள் சிலர் அவர்களது குடும்பத்தவர்களால் 1.1 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டமை குறிப்பித்தக்கது. (உ-16)

# நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக.7

அரச நிர்வாக அலுவல்கள் அமைச்சின் 'லோகோ' திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை முற்பகல் 9 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினிவரதலிங்கம் அறிவித்துள்ளார்.

எனவே நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகள், தமது பிறப்பத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, வதிவிட மற்றும் நற்சான்றுதழ் அத்தாட்சிப் பத்திரம், பல்கலைக்கழக பட்டச்சான்றிதழ், கல்வி மற்றும் தொழில் தகைமைச் சான்றுதழ்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (16)



பல்கலைக்கழக ஆசிரிய சங்கர் சங்கப் பிரச்சினை தொடர்பாக ஆராயும் விசேட கூட்டமொன்றை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி நேற்று திங்கட்கிழமை நடத்தியது.

# கறியாகும் தெருநாய்கள் கொழும்பில் பரபரப்பு

கொழும்பு, ஓக.7

கொழும்பில் திடீரெனப் பெருமளவு தெருநாய்கள் மர்மமான முறையில் காணாமற்போயுள்ள நிலையில், கொழும்பு நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கடைகளில் ஆட்டிறைச்சியுடன் நாய் இறைச்சி கலந்து விற்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் தெருநாய்கள் திடீரெனக் காணாமற் போயுள்ளதை பொலிஸாரும் பிராணிகள் நல அமைப்புகளும் உறுதி செய்துள்ளன.

கொழும்பு விகாரமாதேவி பூங்கா பகுதியில் காணப்பட்ட 10 இற்கும்மேற்பட்ட தெருநாய்கள் திடீரெனக் காணாமற் போயுள்ளன.இந்தநிலையில், கொழும்பிலுள்ள இறைச்சிக் கடைக்காரர் ஒருவர், ஆட்டிறைச்சியுடன் நாய் இறைச்சி கலந்து விற்கப்படுவதை உறுதி செய்துள்ளார்.

அதேவேளை, பொலிஸ் பேச்சாளர் அஜித் றோகண தெருநாய்கள் காணாமற் போனது தொடர்பாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

தெருநாய்கள் காணாமற் போனது பற்றி நாம் அறிவோம். ஆனால் அவற்றுக்கு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை.கடந்தவாரம் தெருநாய்களைப் பிடித்து வாகனம் ஒன்றில் ஏற்றி கொலன்னாவ நோக்கி கொண்டு சென்றதை பார்த்ததாக சிலர் தெரிவித்தனர் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (16)

## 74 போராளிகள் உயர்தரப் பரீட்சையில்

வவுனியாவில் புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் போராளிகள் 74 பேர் நேற்று ஆரம்பமான உயர்தரப் பரீட்சையில் தோற்றியுள்ளனர்.

பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்று வந்த ஆண், பெண் போராளிகள் 74 பேரே இந்தப் பரீட்சையில் தோற்றினர்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே இவர்கள் பரீட்சை எழுதிவருகின்றனர். (ம-400)

# 21 ஆயிரம் ஏக்கர் நிலம் அம்பாறையில் அபகரிப்பு

1967ஆம் ஆண்டுக்குப் பின்னர், அம்பாறை மாவட்டத்தில் 12 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் தமிழர்களிடம் இருந்து அபகரிக்கப்பட்டுள்ளதாக இந்தியாவில் இருந்து வெளியாகும் ருத் டைவ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளையும் சேர்ந்த 3500 குடும்பங்கள் இன்னமும் இடம்பெயர்ந்து வாழ்வதாக இலங்கை அரச நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1967 ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர், 6500 ஏக்கர் நெல் வயல்களும், 3500 ஏக்கர் தென்னந் தோட்டங்களும், 2000 ஏக்கர் கரும்புத் தோட்டங்களும் தமிழர்களிடம் இருந்து அபகரிக்கப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டு இராணுவம் கிழக்கை கைப்பற்றிய பின்னர், இலங்கை சிறப்பு அதிரடிப்படை புதிய பௌத்த விகாரைகளை இந்தப் பகுதிகளில் அமைத்துள்ளது.

தமிழர்களின் 20 இற்கும் அதிகமான சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் அந்தச் செய்தியில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (16)

# விபத்தில் காயமடைந்த பெண் சிகிச்சை பயனின்றிச் சாவு

கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் சிகிச்சை பயனின்றி நேற்று மரணமானார்.

இதில் கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்த திருமதி இரத்தினசபாபதி இராஜேஸ்வரி (வயது-65) என்ற குடும்பப் பெண்ணே மரணமானவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த பிரஸ்தாபப் பெண் மோட்டார் சைக்கிளினால் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று மரணமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16)

## மரண அறிவித்தல்

### தம்பிராசா கந்தசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், சித்தன்கேணியில் வசித்து வந்தவரும் தற்போது வவுனியா 49/85A கோயில் வீதி, குருமன்காட்டில் வசித்தவருமான தம்பிராசா கந்தசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று (06.08.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - சின்னம்மா தம்பதியரின் மகனும், கந்தையா - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், சுஜாதா (ஆசிரியை வவுனியா இ.தி.த.ம.வி),சுதாகரன் (இலங்கை வங்கி ஊழியர்) ஆகியோரின் தந்தையும், சுகந்தனின் மாமனும், பிருந்தாவின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற துரைராசா, புவனேஸ்வரி, சர்வேஸ்வரி, வில்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் வவுனியா வேப்பங்குளம் தட்சணாங்குளத்தில் அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

49/85A கோயில் வீதி, குருமன்காடு
வவுனியா

தகவல்:
குடும்பத்தினர்

(c/2156)(8.14)

# ஆயிரம் குடும்பங்களுக்கு சுயதொழில் கோழி வளர்ப்பு

நெடுங்கேணி,ஓக.7

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரம் குடும்பங்களுக்கு சுய தொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் கோழிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சாளம்பன், வித்தியாபுரம்,- கற்சிலைமடு, பழம்பாடு, தண்டுவான் ஆகிய கிராம மக்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் 64 ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஒரு குடும்பத்துக்குத் தலா 10 கோழிகள் வீதம் வழங்கப்பட்டன.

தண்டுவன் அ.த.க.பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ம-435)

## மரண அறிவித்தல்



### திருமதி இராஜேஸ்வரி இரத்தினசபாபதி

(நயினாதீவு- கிளிநொச்சி)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி ஆனந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி இரத்தினசபாபதி நேற்று (06.08.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும் அனலைதீவு காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (பரியாரியார்)-சவுந்தரம் தம்பதியரின் மருமகளும், கோபாலபிள்ளை, கற்பகம், கனகம்மா, காலஞ்சென்ற ஏகாம்பரம் மற்றும் பரமேஸ்வரி காலஞ்சென்ற செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரியும், யசோதின், சுதாகரன், ஜானகி, சசிரேகா, சசிகரன், வனிதா, நித்தியா ஆகியோரின் அன்புத் தாயும், சபாரத்தினம், தெய்வகௌரி, சிவா, கிரிகரன், மிதுலா, சுதாகரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

260, ஆனந்தபுரம் கிழக்கு,
(வைத்தியசாலை அருகாமை), கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்

(21458) (3.14)

## தேசிய உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பம்

யாழ்ப்பாணம் ,ஓக.7

தேசிய மட்ட உதைபந்தாட்ட போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

இதில் ஆண், பெண் இருபாலருக்குமான உதைபந்தாட்ட போட்டிகள் கொழும்பு சிற்றிலீக் விளையாட்டுக்கழக மைதானம், டொறிங்டன் விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன. மேற்படி போட்டிகளில் வடமாகாண அணிசார்பாக ஆண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் மன்னார் மாவட்ட அணியும் பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் யாழ். மாவட்ட அணியும் பங்கு பற்றவுள்ளன. (ங-23)




பருத்திநகரின் பெரும் சமர் கிரிக்கெட் போட்டி அண்மையில் நடைபெற்ற போது, விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ங-253)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.7

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடத்தும் விளையாட்டு விழாவில், ஓர் அங்கமான யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் லீக் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு -

பிற்பகல் 3.30 மணி

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்

பிற்பகல் 4.30 மணி

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம். (ங-23)

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4 மணி

யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம்.

* * *

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 5ஆவது ஆண்டு நிறைவு முன்னிட்டு நடத்திவரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன. இதில் மோதவுள்ள அணிகள் -

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம்.

ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் எதிர் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

* * *

கைதடி தெற்கு சனசமுக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகம் எதிர் மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக்கழகம்.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் எதிர் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம். (ங-23)

## கே.ஸி.ஸி. ஸி.யிடம் ஜொலிஸ்ரார் தோல்வி

யாழ்ப்பாணம்,ஓக.7

சென்றல் விளையாட்டுக் கழகம் இரண்டாவது வருடமாக நடத்தும் முக்கோண வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி 66 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி 41.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகலஇலக்குகளையும் இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நம்மியராகுலன் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும், சத்தியன் 40 ஓட்டங்களையும், உமாநாத் 30 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் அணி சார்பாக சஞ்ஜீத், பகீரதன் ஆகியோர் 3 இலக்குகளையும், முரளி 2 இலக்குகளையும், ஜொனி 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

186 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 36.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் நிறஞ்சன் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும், முரளி 19 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி சார்பாக சிலோயன் 3 இலக்குகளையும், சாம்பவன் 2 இலக்குகளையும், உமாநாத், நம்மியராகுலன்,ஜனுதாஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் வீழ்த்தினர். இந்தப் போட்டியில் ஆட்ட நாயகனாக கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியைச் சேர்ந்த சத்தியன் தெரிவு செய்யப்பட்டர். (ங-23)



## வவுனியா பிரண்ட்ஸை வீழ்த்தியது சென்றலைட்ஸ்

இலங்கை கிரிக்கெட் சங்கத்தினரால் பிரிவு - III அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் 50 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரின் மாகாண ரீதியிலான போட்டி ஒன்றில் வவுனியா பிரண்ட்ஸ் அணியும், யாழ். சென்றலைட்ஸ் அணியும் மோதிக் கொண்டன. இந்தப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வவுனியா பிரண்ட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து ஆடுகளத்தில் களமிறங்கியது. எனினும் சென்றலைட்ஸ் வீரர்களின் துல்லியமான பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க வவுனியா பிரண்ட்ஸ் அணியினரால் முடியவில்லை. சென்றலைட்ஸ் அணியின் ஆரம்ப வேகப் பந்துவீச்சாளர் சார்ள்ஸ் மிகவும் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தினார். இதனால் 33 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்த வவுனியா பிரண்ட்ஸ் அன ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. சென்றலைட்ஸ் அணி சார்பில் பந்து வீச்சில் சார்ள்ஸ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 இலக்குகளை வீழ்த்தினார். ஜெனொசன் 2 இலக்குகளை கைப்பற்றினார்.

115 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றலைட்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் அணிக்கு சிறப்பான அதிரடி ஆரம்பத்தை பெற்றுக் கொடுத்தனர். இவர்களின் உதவியுடன் சென்றலைட்ஸ் அணி 19.1 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஜேம்ஸ்ஜான்சன் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 39 ஓட்டங்களையும், விநோத்குமார் 24 ஓட்டங்களையும், எடின் 17 ஓட்டங்களையும் சென்றலைட்ஸ் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். (ங-130)

## குமரன் வி.க. கிரிக்கெட் கழகங்கள் விண்ணப்பிக்குக

யாழ்ப்பாணம்,ஓக. 7

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் தென்மராட்சி ரீதியிலான கழகங்களுக்கிடையிலான 6 பேர் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ளன.


மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் குமரநகர் விளையாட்டுக்கழக தலைவரிடம் தொடர்பு கொண்டு போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அதனை பூரணப்படுத்தி வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ங-23)

## அம்பிகை, உதயதாரகை கரப்பந்தில் வென்றன

கைதடி தெற்கு சனசமுக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றியீட்டிய அணிகளின் விவரம் வருமாறு-

முதலாவது ஆட்டத்தில் நாவற்குழி உதயதாரகை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களை கொண்ட இந்த ஆட்டத்தில் மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக்கழக அணி 25:14 , 25:17 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றது.

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் உரும்பிராய் உதய தாரகை விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே அடுத்த போட்டி நடைபெறவிருந்தது. எனினும் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மைதானத்துக்கு சமுகம் தராமையினால் உரும்பிராய் உதயதாரகை விளையாட்டுக்கழக அணிக்கு வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ங-23)



அண்மையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் பங்குபற்றி சாதனை படைத்த நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய மாணவர்கள், வித்தியாலய அதிபர் அமுதலிங்கம் மற்றும் ஆசிரியருடன். (ங-400)

# மீண்டும் கலக்கினார் போல்ட்




உலகில் வேகமான மனிதன் என்று கடந்த 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியின் பின்னர் அழைக்கப்பட்டு வந்த உசைன் போல்ட், இந்த ஆண்டு தங்கம் வெல்வாரா ? என்ற எதிர்பார்ப்புக்கள் பலவற்றின் மத்தியில் மீண்டும் தனது சாதனையை தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை இடம்பெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றார். உசைன் போல்ட்டுக்கு போட்டியாளராக கருதப்பட்ட அவரது நாட்டவரான யொஹான் பிளேக் வெள்ளிப் பதக்கத்தையே வென்றார்.

பலத்த பரபரப்புக்கு மத்தியில் லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் தற்போது தடகளப் போட்டிகள் இடம்பெறுகின்றன. கடந்த 4 ஆம் திகதி முதற் சுற்றுப் போட்டிகளில் உசைன் போல்ட் வெற்றி பெற்றிருந்தார். இருப்பினும் அவர் பந்தயத் தூரமான 100 மீற்றரினை ஓடி முடிக்க 10 செக்கன்களை எடுத்துக் கொண்டார்.

ஆனால் ஜமைக்காவின் மற்றொரு வீரரான யொஹகான் பிளேக் மற்றும் அமெரிக்காவின் தைசன் ஆகியோர் முதற்சுற்றுக்களில் 9.8 செக்கன்களில் 100 மீற்றரினை ஓடி முடித்திருந்தனர். இவ்வாறானதொரு நிலையில் உசைன் போல்ட் மீண்டும் தங்கம் வெல்வாரா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் 100, 200 மீற்றர் போட்டிகளில் தங்கம் வென்றிருந்ததுடன் 100 மீற்றர் ஒலிம்பிக்கில் 9.69 செக்கன்களில் ஓடி முடித்து சாதனை படைத்திருந்தார். அதன் பின்னர் உசைன் போல்ட் 2009 ஆம் ஆண்டு 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 9.58 செக்கன்களில் ஓடி முடித்து புதிய உலக சாதனை படைத்திருந்தார்.

இவ்வாறான சாதனைகளின் சொந்தக்காரர் 2012 ஒலிம்பிக் முதல் சுற்றில் பாரிய பின்னடைவை எதிர்கொண்ட நிலையில், மீண்டும் தங்கம் வெல்வாரா, சாதனை படைப்பாரா என்ற பரபரப்புடன் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் பந்தயம் நேற்று இடம்பெற்றது.

இந்தப் பந்தய தூரத்தை 9.63 செக்கன்களில் ஓடி முடித்த ஜமைக்காவின் உசைன் போல்ட் தங்கத்தை வென்றதுடன் தனது ஒலிம்பிக் சாதனையை தகர்த்து (9.69 செக்கன்) புதிய ஒலிம்பிக் சாதனையைப் படைத்தார்.

இரண்டாவது இடத்தை ஜமைக்காவின் யொஹான் பிளேக்கும், மூன்றாமிடத்தை அமெரிக்காவின் கால்ரின் ஜஸ்ரினும் பெற்றுக் கொண்டனர். உசைன் போல்ட் இன்று நடைபெறும் 200 மீற்றர் தகுதிச் சுற்றில் பங்கேற்கின்றார்.

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

06.08.2012

LONDON 2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 31 | 19 | 14 | 64 |
| அமெரிக்கா | 28 | 14 | 19 | 61 |
| பிரிட்டன் | 16 | 11 | 11 | 38 |
| தென்.கொரியா | 11 | 5 | 6 | 22 |
| பிரான்ஸ் | 8 | 8 | 9 | 25 |
| இத்தாலி | 7 | 6 | 4 | 17 |
| கஜகஸ்தான் | 6 | 0 | 0 | 6 |
| ரஷ்யா | 5 | 17 | 15 | 37 |
| ஜேர்மனி | 5 | 10 | 7 | 22 |
| ஹங்கேரி | 4 | 1 | 3 | 8 |

# வில்லியம்ஸ் சகோதரிகள் 'ஹற்றிக்'

ஒலிம்பிக் ரென்னிஸ் மகளிர் இரட்டையர் பிரிவு போட்டியில், 3 ஆவது முறையாக தங்கம் வென்று அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், செரீனா வில்லியம்ஸ் சகோதரிகள் சாதனை படைத்துள்ளனர்.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் ரென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு இறுதிச் சுற்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் சகோதரிகளான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ் ஜோடி, செக்குடியரசின் ஆன்ட்ரியா ஹலாவாக்கோவ், லூசி ஹராடெகா ஜோடியுடன் மோதியது.

அபாரமாக ஆடிய வில்லியம்ஸ் ஜோடி 6-4, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக ஒலிம்பிக்கில் தங்கம் வென்றது.

முன்னதாக சிட்னி (2000), பீஜிங் (2008) ஒலிம்பிக் போட்டியில் செரீனா வீனஸ் ஜோடி தங்கம் வென்றது. இது தவிர வீனஸ் வில்லியம்ஸ் சிட்னி (2000) ஒலிம்பிக் ஒற்றையர் பிரிவில் தங்கம் வென்றார்.

செரீனா வில்லியம்ஸ் லண்டன் (2012) ஒலிம்பிக் ஒற்றையர் பிரிவில் தங்கம் வென்றார். இதன்மூலம் ஒலிம்பிக் ரென்னிஸ் போட்டியில் நான்கு தங்கம் வென்ற முதல் வீராங்கனைகள் என்ற புதிய சாதனை படைத்தனர்.

இதன்மூலம் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் கேரியர் கோல்டன் கிராண்ட்ஸ்லாம் (4 கிராண்ட்ஸ்லாம் + ஒலிம்பிக் தங்கம்) வென்ற முதல் வீராங்கனை என்ற சாதனை படைத்தார் செரீனா வில்லியம்ஸ்.

ஒற்றையர் பிரிவில் முதன்முதலில் [illegible] கிராப் கைப்பற்றினார் என்பது [illegible]



# அன்டிமுர்ரேக்கு தங்கம்



லண்டன் ஒலிம்பிக் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்து வீரர் அன்டி முர்ரே தங்கம் வென்றார். நேற்று முன்தினம் நடந்த இறுதி ஆட்டத்தில் உலகின் முதல்தர வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரை வீழ்த்தினார்.


லண்டன் ஒலிம்பிக் ரென்னிஸ் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதியில், இங்கிலாந்தின் அன்டி முர்ரே, சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் மோதினர். இதில் அபாரமாக ஆடிய முர்ரே 6-2, 6-1, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார். இதன் மூலம் சமீபத்தில் நடந்த விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் இறுதியில், பெடரரிடம் கண்ட தோல்விக்கு சரியான பதிலடி கொடுத்தார் முர்ரே. தவிர இவர், ஒலிம்பிக் அரங்கில் தனது முதல் பதக்கம் வென்றார். இந்தத் தோல்வியின் மூலம் ரோஜர் பெடரர் இரண்டாவது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் வென்றார். கடந்த பீஜிங் ஒலிம்பிக்கில் இரட்டையர் பிரிவில் தங்கம் வென்ற பெடரர், முதன்முறையாக ஒற்றையர் பிரிவில் பதக்கம் வென்றார். முன்னதாக சிட்னி (2000) ஒலிம்பிக் ஒற்றையரில் அதிகபட்சமாக அரையிறுதி வரை முன்னேறி நான்காவது இடம் பிடித்தார். கடந்த பீஜிங் ஒலிம்பிக் ஒற்றையரில் காலிறுதியோடு வெளியேறினார்.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில் அரையிறுதியில் தோல்வி கண்ட செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஆர்ஜென்டினாவின் ஜுயன் மார்டின் டெல்போட்ரோ மோதினர். இதில் டெல்போட்டோ 7-5, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினார். இதன்மூலம் ஜோகோவிச் நான்காவது இடம் பிடித்தார்.

## ஒலிம்பிக் 'கிளிக்ஸ்'







**தவறிவிட்டது** கனகரத்தினம் றோகேஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (860612402V), சாரதி அனுமதி அட்டை (B1332601) மற்றும் சிறிய ஆவணத்துடன் மணிபேஸ் ஒன்று முறிகண்டிக்கும் இரணைமடுவுக்கும் இடையில் தவறிவிட்டது.
தொடர்பு : 0772592540 / 0778328862
(E899)(357)



# தொழிற் பயிற்சிகள்

- Electronics சகல இலத்திரனியல் பொருள்கள் இயங்கும் முறை பழுதுகள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்
காலம்: 10 மாதம்
- Mobile Phone Repairing
சகல Phoneகளும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும் காலம்: 3 மாதம்.
- Air Conditioning
சகல குளிர்சாதனங்கள் இயங்கும் முறைகள். பழுதுகள் திருத்தும் முறை பயிற்சி அளிக்கப்படும். காலம்: 6 மாதம்

சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.
மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்: 12.08.2012 9.30 a.m.

# சிங்கள வகுப்புக்கள்

சிங்கள மொழியில் சரளமாக பேச, எழுத, வாசிக்க புதிய பிரிவுகள் ஆரம்பம்
12.08.2012 மாலை 4.30, காலம்: 10 மாதம்
உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழகம் செல்ல உள்ள மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் அனைவரும் பயில அரிய வாய்ப்பு. ஆசிரியர்-K.R சூரி
(C-2147)(3.6.7)

## Special English Course
## விசேட ஆங்கில வகுப்புக்கள்

ஆங்கிலம் சரளமாக பேச எழுத வாசிக்க ஏற்றவாறு ஆரம்பத்தில் இருந்து அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும். வகுப்புக்கள் திங்கள், செவ்வாய் புதன், வியாழன் ஆகிய நான்கு நாள்களிலும் காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறும். ஆசிரியர் செல்வி வல்லிபுரம் - தியாகேஸ்வரி
ஆரம்பம்:- 12.08.2012 காலம்:- 03 மாதம்

பல்கலைக்கழகம் செல்ல உள்ள, பாடசாலை செல்லாத மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரும் / பயில அரியவாய்ப்பு ஒருபிரிவில் 10மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

விபரங்களுக்கு:-
**Jaffna Technical Institute**
இல. 7, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P|-0718561654, 0778249949
கிளை:New asian center 56/15B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 0779254078
குறிப்பு: வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

# விஷேட ஆங்கில வகுப்புக்கள்

மாணவர்களே!!
உங்கள் விடுமுறைக் காலத்தை எம்முடன் இணைத்து பயனுள்ளதாக்கி கொள்ளுங்கள்

20 மணித்தியாலங்கள் மட்டுமே

நடைமுறை வாழ்விற்கு அவசியமான ஆங்கில பேச்சுப் பயிற்சிகள் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்



மாணவர்களின் ஆங்கில அறிவிற்கு ஏற்ப குழுக்களாக பிரித்து கற்பிக்கப்படும்.

புதிய பிரிவு ஆரம்பம்
10.08.2012
காலை 10.00 மணி (சி/2152)

கட்டணம் ரூபா 1200.00 மட்டுமே

குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்துடன் உங்கள் ஆங்கில பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

# மரண அறிவித்தல்

*சின்னராஜா அன்ரன் அரியரட்ணம்*
(சின்னத்தம்பி- மெக்கானிக்)



19/1, ஈச்சமோட்டை பீச் றோட், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராஜா அன்ரன் அரியரட்ணம் (சின்னத்தம்பி-மெக்கானிக்) நேற்று (06.08.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னராஜா-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜோசப் ராசேந்திரம் மற்றும் ராசேந்திரம் செபமாலைஅம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அமலோற்பவத்தின் (மலர்) அன்புக்கணவரும், றாணி (திருகோணமலை), காலஞ்சென்ற நிர்மலா (கனடா) மற்றும் புஸ்பம் (இந்தியா), அன்ரன் செல்வரட்ணம் (பெரியண்ணை- மெக்கானிக்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரதீபன், பிரஷாந்தன், பிரஷாந்தினி (கனடா), பிரஷோபினி, பிரதீப்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், றேனுகாஜெனிபர், றேனுகாஷாலினி, எட்வேட்ராஜ்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ஷரோன், றெவின், ரலுனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (08.08.2012) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கானான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

19/1, ஈச்சமோட்டை பீச் றோட், யாழ்ப்பாணம். (21454) (3.6.14)
தகவல் குடும்பத்தினர்.

# மக்கள் மனதில் மீண்டும் சங்கா

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் மக்கள் தெரிவு விருதுக்கான வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அறிவிக்கப்பட்டுள்ள 5 வீரர்களுள் இலங்கையின் குமார் சங்ககாரவும் உள்ளடங்குகிறார்.

3 ஆவது தடவையாக இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் இந்த விருது வழங்கல் நிகழ்வில் இலங்கையின் குமார் சங்ககார, இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர், தென்னாபிரிக்காவின் வேர்ணன் பிலாந்தர், ஜக் கலிஸ் ஆகியோரோடு இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்சன் ஆகியோர் பிரேரிக்கப்பட்டுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விருதுகளின் போது ஆரம்ப வருடத்தில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் வென்று கொண்டதோடு, கடந்த வருடம் இலங்கையின் குமார் சங்ககாரவும் வென்றிருந்தனர்.

கிரிக்கெட் ரசிகர்கள் தங்களுக்கு விருப்பமாக கிரிக்கெட் நட்சத்திரத்தைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக சர்வதேசக் கிரிக்கெட் சபை ஏற்படுத்தியுள்ள இந்த வசதியைக் கிரிக்கெட் ரசிகர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதாக சர்வதேசக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஒகஸ்ட் 31ஆம் திகதி வரை வாக்களிக்கும் வாய்ப்பு ரசிகர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபை, செப்டெம்பர் 15 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் விருது வழங்கல் விழாவில் இவர்களில் ரசிகர்களால் தெரிவுசெய்யப்படுபவருக்கு விருது வழங்கப்படும் என்று சர்வதேசக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.



வாக்களிக்க விரும்பும் ரசிகர்கள் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் 'பேஸ்புக்' பக்கத்திற்குச் செல்வதன் மூலம் தங்கள் வாக்குகளை அளிக்கலாம். (www.facebook.com/cricketicc)

**LOGIC**
Paper Class
A/L 2013
Mon, Wed-4.00-5.00pm
By-P.கமல்
ஆரம்பம் 08.08.2012 Wed 4.00pm
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(21380) (3.6.7)

**புவியியல்**
விடுமுறை கால விசேட வகுப்புக்கள்
A/L 2013
தேர்ச்சி மட்டம் 8.1
இலங்கையின் நீர்வளம்
Wed - 9.00 - 10.30
A/L 2014
தேர்ச்சி மட்டம் 3.2
புறவிசைகள்
(ஓடும் நீர், காற்று, பனியாறு, கடலலை)
ஆரம்பம்: 08.08.2012 (Wed)
N.S. சங்கர்
B.A (Hons) Geo, P.G.D.E (Merit)
புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்
(21389) (3.6.14)

# காணி விற்பனைக்கு

யாழ் சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியில் 4 1/2 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. பிரதான வீதியில் இருந்து 50m.
தொடர்புகளுக்கு: 0777733460
(சி/1838)

**The Science Point**
கன்னாதிட்டி- யாழ்ப்பாணம்
2013 ORGANIC
ஆரம்பம் 08.08.2012 WED 12.30
SAT, SUN 11.00 - 12.30
2014 BASIC
ஆரம்பம் 09.08.2012 THURS 5.00pm
WED, THURS 5.00-6.00pm
By- அன்பு
(சி/2137)(3.6.7)

**CHEMISTRY - S.Vasu**

| A/L 2013 | A/L 2014 |
|---|---|
| Inorganic<br>Mon, Wed-6.30-7.30am | இரசாயன கணிப்பீடுகள்<br>Teu, Fri-4.00-5.00pm |
| ஆரம்பம்- 08.08.2012 (Wed) | ஆரம்பம்- 07.08.2012 (Teu) |
| NEC (21380) (3.6.7) | பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். |

**IELTS** A1 B1 B2
October/27th Exam in Jaffna Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
K.U Education, No 75, Temple Road, Jaffna. www.kugroup.info



# காரைநகர் திக்கரை முருகன் அடியார்களுக்கு ஓர் அறிவித்தல்

1) காரைநகர் களபூமி திக்கரையில் முருகன் எழுந்தருளியிருக்கும் திக்கரை முருகமூர்த்தி கோயிலின் சட்டபூர்வமான நம்பிக்கைப் பொறுப்பாளர் (அறங்காவலர்) நானே ஆவேன்.
2) அண்மைக்காலமாக எமது ஆலய நிர்வாகத்தை சீரழிக்கும் நோக்கில் சிலர் செயற்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்டுகிறது. இந் நோக்கத்துடன் எமது ஆலயத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கும் மணி மண்டபத்தில் எனது அனுமதியின்றி அத்துமீறி பிரவேசித்து 12.08.2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பொதுமக்களை அழைத்து கூட்டமொன்றை நடத்த இருப்பதாக கையெழுத்து இடப்படாத துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.
03) ஆலயத்தின் இரண்டாம் வீதி எல்லையினுள் எவரும் முருகனை வழிபடும் நோக்கத்தை தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் பிரவேசித்து கூட்டம் எதனையும் நடத்தியோ அல்லது வேறு எந்த வித நடவடிக்கையிலும் ஈடுபாட்டாலே அவர்கள் மீது காவல்துறையினர் ஊடாகவும் நீதிமன்றத்தின் ஊடாகவும் கடுமையான குற்றவியல் குடியியல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.
04) ஆலய முன்னேற்றத்திற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகளை கடிதம் மூலமாகவோ தொலைபேசி மூலமாகவோ முருகன் மெய்யடியார்கள் என்னுடன் தொடர்பு கொண்டால் என்னால் இயன்றளவு அந்த ஆலோசனைகளை செயற்படுத்துவேன்.
5) முருகன் மெய்யடியார்கள் எமது ஆலயத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு இயன்ற உதவிகளையும் ஆசீர்வாதத்தையும் எனக்கு நல்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.
6) இந்த அறிவித்தல் எமது ஆலய சட்டத்தரணியின் சட்ட ஆலோசனையின் பிரகாரம் வெளியிடப்படுகிறது.

P. உமாசங்கர், அறங்காவலர்,
திக்கரை முருகமூர்த்தி ஆலயம்,
காரைநகர்
தொடர்புகளுக்கு: 071 8130390, 0112 334027
(2/456)(6.8.14)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.